அறிஞர் அண்ணாதுரை

தொகுப்பு நூல்

கலை மன்றம்

P.O.No 275 சென்னை-1.

முதற் பதிப்பு: ஜூன் '52

உரிமை பெற்றது

விலை ரூ. 1—0—0

அட்டை பைண்ட் 1—8—0

எண்ணம்

மறுமலர்ச்சித் தமிழகத்தில் இன்று, படிப்பாளி — பேச்சாளர்—எழுத்தாளர்—பத்திரிகாசிரியர் — நடிகர் — நாடகாசிரியர் —தளபதி — தலைவர் — அறிஞர் என்ற முறையில், அன்புடன், பெருமிதத்துடன், நாம் போற்றக்கூடிய, ஒருவர் — ஒரே ஒருவர் — அறிஞர் அண்ணாதான் என்று துணிந்து கூறலாம்.

எனினும், மாற்றுக் கட்சியினர், மாறுபட்ட கருத்துடையோர், வேறு பல கோணங்களில் நின்று காண்போர், இன்ன பிற தன்மை கொண்டோர், அறிஞரைப் பற்றி என்ன கூறுகின்றனர்?

இக்கேள்விக்கு, இச்சிறு நூல் ஓரளவு பதில் கூறும் என்று எண்ணுகிறோம்.

இம் முயற்சிக்கு ஆதரவு தந்த தமிழ் நாட்டு அறிஞர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

—கலை மன்றத்தினர்

விற்பனை நிலையம்:

எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார்,
சென்னை-1.

வெ. கோவிந்தசாமி அவர்களின்

இதனுள்

அறிஞர் அண்ணாதுரை அவர்களைப் பற்றி:-

பெரியார் ஈ. வே. இராமசாமி	...	5
தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனார்		7
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்	...	8
நாவலர். ச. சோமசுந்தர பாரதியார்	...	9
யோகி சுத்தானந்த பாரதி	...	11
சொல்லின் செல்வர், ரா. பி. சேதுப்பிள்ளை	...	12
சாமி, கைவல்யம்	...	14
ப. ஜீவானந்தம்	...	16
கி. ஆ. பெ. விசுவநாதம்	...	17
ஆ. இராமாமிருதத்தம்மாள்	....	30
எம். எஸ். அப்துல் மஜீத், எம். எல். ஏ.	...	32
புலவர் குழந்தை	....	34
ஏ, என். சிவராமன்	...	40
திருலோக-சீதாராம்	...	43
ரா. கிருஷ்ணமூர்த்தி	...	45
ஔவை. சு. துரைசாமி	....	48
பூ. ஆல்பின் பர்னாண்டஸ்	...	55
டாக்டர். மு. வரதராசனார், பி. ஓ. எல். பி. எச், டி.		58

என். எஸ். கிருஷ்ணன் ... 61
நாரண-துரைக்கண்ணன் ... 65
கா. அப்பாதுரை, எம். ஏ., எல். டி,, ... 69
ரா. நாராயண அய்யங்கார் ... 72
எம். கே. தியாகராஜ பாகவதர் 74
சோ. இலக்ஷ்மிரதன் பாரதி, எம். ஏ., பி. எல் 75
டி. எஸ். வேலன் ... 77
அ. மு. பரமசிவானந்தம், பி. ஓ. எல். எம்-லிட் 81
தி. வை. சொக்கப்பா, எம். ஏ. எல். டி., ... 83
கே. ஆர். ராமசாமி ... 85
க. அன்பழகன், எம். ஏ., ... 90
சி. பி. சிற்றரசு ... 93
பூ. கணேசன், பி. ஏ. (ஆனர்ஸ்) 95
ஏ. பி. ஜனார்த்தனம், எம். ஏ., ... 98
கே. ஏ. மதியழகன், பி. ஏ., ... 100
கே. ஜீ. இராதாமணாளன் ... 103
என். வி. நடராஜன் ... 105
இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., ... 108

ஆகியோரின் கருத்தோவியங்கள்



தந்தை மகற் காற்றும் உதவி......

"நமது அருமை அண்ணு அவர்களே இந்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று இலட்சக் கணக்கான இளஞர்கள் உள்ளத்தில் ஆசை குடிகொண்டுள்ளது. என்னுடைய நெடுநாள் ஆசையும் அதுதான். அண்ணு அவர்கள் இந்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்கப்போகிருர். தளபதி அண்ணுத்துரையை அறிமுகப் படுத்துவது என்பது அர்த்தமற்ற வீண் வேலை. ஒரு வேளை அவர் வேண்டுமானுல் என்னை அறிமுகப் படுத்த வேண்டி இருந்தாலும் இருக்குமே தவிர நான் அவரை அறிமுகப்படுத்த வேண்டியது என்பது தேவையற்ற சங்கதி. நமது இயக்கத்திலும், குறிப்பாக இப்போது நடைபெற்று வரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் அவர் கொண்டிருக்கும் பங்கு எவ்வளவு சிறப்பானது என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. திராவிட இளைஞர் உள்ளங்களை எல்லாம் அவர் எப்படிக் கைப்பற்றி விட்டார் என்பதையும் நான் சொல்லத் தேவையில்லை. இப்படிப் பட்ட நமது அண்ணு அவர்கள் இந்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்கிருர் என்ருல் இதைப்பற்றி நான் என்ன சொல்ல இருக்கிறது ?"..................................

"பெட்டிச் சாவி என்னிடம் இருப்பதால் சரக்கு எதுவும் காணுமல் போய்விடாது. பத்திரமாகத்தான் இருக்கும். இருந்தாலும் ஒரே ஆளிடம் தொடர்ந்தாற் போல ஆண்டுக் கணக்காக சாவி இருந்தால் யாருக்கும் சலிப்பு வரத்தானே செய்யும். மேலும் வயது வந்த மகனிடம் பெட்டிச் சாவியைக் கொடுக்க வேண்டியது

தானே நியாயம். எனக்கும் வயது 70 தாண்டி விட்டது. இனியும் எத்தனை நாளைக்கு நானே பெட்டிச் சாவியை வைத்துக்கொண்டு அலைந்து திரிந்து பணியாற்றிக்கொண்டிருக்க முடியும்? ஆகவே பெட்டிச் சாவியை அண்ணாவிடம் கொடுக்கத் தீர்மானித்து விட்டேன்."

பெரியார். ஈ. வே. இராமசாமி

(1948 இறுதியில் ஈரோட்டில் நடைபெற்ற திராவிட கழக மாகாண மாநாட்டில் பேசியது)

அண்ணா துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழியில்-பண்ணாவன்
சிற்பனெழுத் தோவியத்தில் செவ்வரசு நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமியென் றறி.

தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனார்
சென்னை.

தமிழ் வீரன்

தமிழுக்குத் தொண்டு செய்து சிறைக்குச் சென்றோன்,
தலை சிறந்த பேச்சு வல்லோன்; தமிழ வீரன்;
தமிழ் என்றும் தான் என்றும் நினைப்ப தன்றித்
'தமிழ் நாட்டின் நலத்தினுக்கே உயிர் உடல்கள்
அழைக' என இரவு பகல் உழைக்கும் மேலோன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்
புதுவை

மறுமலர்ச்சித் தலைவர்

திருவாளர் சி. என். அண்ணாத்துரை அவர்களை அறியாத தமிழர் இரார். தென்னாட்டில் அவர்களைத் தெரியாதார் யாரும் இரார். "திராவிட நாடு" பரவாத இடமில்லை. அப் பத்திரிகைக்கு அப் பெருமை தந்த வித்தகர் திரு. அண்ணாத்துரை என்ற உண்மை ஒன்றே அவர் ஆள்வினை அருமைக்கும், உளங்கவரும் உரை வரையும் திறமைக்கும் சான்றாகும். அண்மையில் சென்னையில் நிகழ்ந்த புரட்சிக் கவி பாரதிதாசர் பாராட்டுப் பெருவிழாவும், அதில் தந்த கால் இலக்கப் பொன் முடியும் அவர் முயற்சிதரும் பயனை அளப்பதற்குப் போதியதாகும்.

இவர் ஆங்கிலத்தில் பண்டிதர். பட்டத்தால் மட்டும் பண்டிதராய்த் திரிபவர் பலர் உளர் எனில், எழுத்திலும், பேச்சிலும், பழுத்த மொழி ஆட்சியிலும் திறனுடையார் மிகச் சிலரே. அத்தகைய நல்ல நடை வல்லார்தம் வரிசையிலே முன் அணியில் இடம் உடையார் இவர், தமிழினிலோ, அமிழ்த்துமிழும் சொல் வளமும், உணர்வெழுப்பும் தொடர்ச் செறிவும், குறவரிடம் கல்லாமல் தான் பயின்று திறம் பெற்றச் சொல்லின் செல்வர். தமிழ் இளைஞர் "புத்துலகு" விரைந்து தொழில் கேட்க, நிரந்தினிது சொல்லுதல் வல்ல நாவலர். கிண்டலொடு நகைச்சுவையும் கொண்டுருளும் நடையுடையார்.

இன்னும் இவர் முதிராத இளமையோடு மூதறிவு மிக்குடையார்; அதிமதுரச் சொல்லுடையார். தளராத உள உறனும், வளரறிவும், வளமலியும் உரைத்

திறமும் தனதுடைமையாகக் கொண்டோர். இளம் தமிழர் தளபதி. சுயமரியாதை இயக்கத் துணைத் தலைவர். தமிழரிடைத் தன் மதிப்பும், உரிமை யுணர்வும் உண்டாக வித்திட்டார் இராமசாமிப் பெரியார். அவை தழைய நீர்ப் பாய்ச்சி, எருவிட்டு, வளர்ப்பவர் திரு. அண்ணாத்துரை. தமிழ் உயர்வும், தமிழர் தமது உரிமையையும் பெற உஞற்றும் (உழைக்கும்) மறு மலர்ச்சி இயக்கத்தின் தலைவராவர். முடிசூடா மன்னனென இளந்தமிழர், எழுத்தாளர் புகழ் புலவர். இவர் பணியின் பயனாகத் தமிழ் ஓங்க, தமிழர் நிலை உயர்வதாக.

நாவலர். ச. சோமசுந்தர பாரதியார்
பசுமலை

தனித் தமிழ்க் கனல்

தோழர். அண்ணுத்துரையைக் கண்டதில்லே. கற்றதுண்டு. அறிந்ததுண்டு. அவர் தனித் தமிழ்க் கனல்; திட்ப நுட்பமான சொல்லாளர்; வீறுமிக்கச் செயலாளர். அவர் உள்ளம் தமிழர் உள்ளம்; உணர்ச்சி வெள்ளம். அவர் உரைகள் தமிழர் மதிப்பையும், அம் மதிப்பைக் காக்கும் கொதிப்பையும் உண்டாக்கும் தீப் பொறிகள். விரைவில் அவர் தமிழ் உரிமையைக் காக்கும் அண்ணுவாக விளங்குவார்.

இன்று தமிழுலகம் தமிழ் உணர்ச்சி நிரம்பியுள்ளது; தனித் தமிழ் மலர்கள் தோன்றுகின்றன. ஒவ்வொரு தமிழனும், இளஞ்செழியனும், திருமாவளவனும் ஆகவேண்டும். தமிழன் தலே நிமிர்ந்து, தன் உறுதியுடன் இந் நாட்டில் தன்னுரிமை நாட்ட முந்துக; இதன்பால் அண்ணுத்துரையின் சொற்கனல் தமிழரை உந்துக!

என் தாய் வாழ்க!

யோகி சுத்தானந்த பாரதி
அரவிந்த ஆஸ்ரமம், புதுவை.

ஆயிரம் மேடை யேறிய அறிஞர்

இளந் தமிழுலகத்தில்—எழுகின்ற தமிழகத்தில்—இன்று 'அண்ணு' என்று அருமையாக அழைக்கப் படுகின்றவர் தோழர் திரு. அண்ணுதுரை. அவர் 'திராவிட நாட்'டின் ஆசிரியர்! ஆயிரம் மேடை யேறிய அறிஞர்; பல்லாயிரம் மக்களின் உள்ளத்தை ஒருங்கே கவரும் சீரிய கூரிய சொல்லாளர்; கண்ணினின்று கண்ணறச் சொல்லும் திண்ணியர்.

அண்ணுதுரை கலையறிந்தவர். தமிழ் நாட்டின் பழைய நிலை யறிந்தவர். "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்று மார்தட்டிக்கூறிய வீரர் வாழ்ந்த தமிழகத்தில் இன்று கோழைகளாய், மோழைகளாய் நாம் குன்றலாகாது; காளைகளாய்க் களிறுகளாய் வாழ்தல் வேண்டும் என்று ஆசைப்படுகின்றவர் அவர். தமிழ்க் குலத்தை அரிக்கும் வேர்ப் புழுக்களை அழித்தாலன்றித் தமிழகம் தழைக்குமாறில்லை; ஊழ்வினையே பேசி ஆள்வினை யற்றிருக்குமளவும் நாம் உய்யுமாறில்லை என்று உறுதியாகக் கருதுகின்றவர் அவர்.

தமிழ்நாட்டைப் பிடித்த பீடைகள் ஒழியவேண்டுமாயின், "நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்று வள்ளுவர் வகுத்த மருத்துவ முறையைத் தயங்காது தமிழர் கையாளுதல் வேண்டும் என்பது அவர் கொள்கை. புண்ணுற்ற மேனியைப் புறம் பொதிந்து மூடுதலால் என்ன பயன்? என்பது அவர் கேள்வி.

பதிநலம் வாய்ந்த மருத்துவர் அழுகிய தசையைப் பார்த்து அறுத்தால் தமிழ்க்குலம் தலையெடுக்கும் என்பதில் என்ன தடை? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கள்வரது நச்சுப் பகைமையை நசுக்காவிட்டால் நாடு நலம் பெறுவதெப்படி? தமிழர் வாழவேண்டும், தமிழர் பண்பாடு சிறக்கவேண்டும் என்ற அரும் பெருங் குறிக்கோளுடைய 'அண்ணு' அவர்கள் 'நீடுழி வாழ்க' என வாழ்த்துகின்றேன்.

சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை
விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

திராவிடர் பொக்கிஷம்

அண்ணுதுரையின் பேச்சை என்னுல் கேட்க முடியவில்லை. எனக்குக் காது செவிடு. அவர் எழுத்தைப் படிக்கிறேன். ஊன், உயிர் கலந்து உவட்டாமலே இருக்கிறது. அண்ணுதுரையின் கண், மூக்கு, காவிப்பல், குட்டை, நெட்டையைப்பற்றி வருணிப்பதில் கஷ்டமில்லை. அவர் புத்தியின் விலாசமும், அறிவின் சக்தியும், என் கூட்டத்தில் யாருக்கும் இருந்ததில்லை. அவர் நமக்கு ஓர் பொக்கிஷம் தான். இதுவரையிலும் கிடைக்காததுமாகும்.

இப்பொழுதுள்ள கூட்டுறவின் சந்தோஷத்திலேயே அவர் திருப்திப் படுவதாயிருந்தால் அது வீசனிக்கக் கூடியதே. மேலே சஞ்சரிக்க வேண்டியவன் மேலே சஞ்சரிக்க வேண்டும். காலமும், சமயமும் வீணே போகிறது. புது உலகத்தில் அவருடைய பிரதிமை பதிய வேண்டிய காலமிது.

அவருடைய வளர்ச்சி, அவரிடமிருந்தே வளர வேண்டும். அதைக் கேட்டும், கண்டும், நான் திருப்தியடைய வேண்டும்.

அண்ணுதுரையை நான் திட்டிக் கொண்டேயிருக்கிறேன். ரஸ்கின் என்ற ஒரு மேதாவி மேனுட்டிலிருந்தார். அநேக பெரிய மனிதர்கள் அவரிடம் வந்து புத்திமதி கேட்டுக்கொண்டு போவார்களாம். திண்ணையிலமர்ந்திருக்கும் அவர் தகப்பன் வருகிறவர்கள், போகிறவர்களிடம் "என் பிள்ளைக்குக் கொஞ்சம் புத்தி சொல்லிப் போங்கள்" என்பாராம். அதுபோல

என்னிடம் வருகிறவர்கள்; போகிறவர்களிடம் "அண்ணா துரைக்குக் கொஞ்சம் புத்தி சொல்லுங்கள்" என்று சொல்லுகின்ற எண்ணத்தில் உடையவன் நான்.

என் காலத்தில், இக்காலத்தேபோன்ற உணர்ச்சி மிக்க இளைஞர்கள் மிகக் குறைவு. புரோகிதன், சாஸ்திரி, புலவன், மதவாதி ஆகியவர்களோடு நாற்பத்தைந்து வருடகாலம் ஒருவித உதவியுமில்லாமல் போரிட்டேன். உடல் சோர்ந்தது. இனி எல்லாம் இளைஞர்கள் பார்த்துக் கொள்ளவேண்டியது. இளைஞர்களுக்கு உற்ற வழிகாட்டியாய் அண்ணாதுரை விளங்குவார் என்பது என் கருத்து. வாழ்க தமிழ்! வாழ்க அண்ணாதுரை!

சாமி கைவல்லியம்
கோவை.

புதிய மெருகு தந்தார்

சுயமரியாதை மாணவர்கள், இளைஞர்களிடையில் அண்ணாத்துரைக்கு, செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாத்துரையின் சொல்வன்மையும் எழுத்து வன்மையும், இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே இதற்குக் காரணம்.

உலக அறிவோடும், அரசியல் உணர்ச்சியோடும் இன வெழுச்சியும், கலை ஆர்வமும், மொழிப்பற்றும், தமிழகத்தில் குறிப்பிடத்தக்க வண்ணம் கிளர்ந்தெழுந்தன. இந்தப் புதிய எழுச்சியும், உணர்ச்சியும் ஜஸ்டிஸ்—சுயமரியாதை வாலிபர்களையும் தீண்டாமலில்லை. அண்ணாத்துரையின் பேச்சிலும் எழுத்திலும் புத்துணர்ச்சிக்கு ஒருவித கவர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது. அண்ணாத்துரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்கள் சூழ்ந்தனர்.

அண்ணாத்துரை, "சமூக சீர்திருத்தத்திற்கு புதிய மெருகு கொடுத்து, புதிய உணர்ச்சிகளைத் தழுவிப் போகா விட்டால் கட்சிக்கு வளர்ச்சியில்லை" எனக் கண்டார். அதனால் புதிய அமைப்புக்கு வேண்டிய பூர்வாங்க வேலைகளைப் பூர்த்தி செய்தார்.

ப. ஜீவானந்தம்

ஆசிரியர், 'ஜனநாயகம்' சென்னை.

நல்ல தமிழன்!

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள். ஊர் திருச்சி. இடம் நகரசபை நாடகக் கொட்டகை. ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு ஒன்று பெரிய அளவில் நடைபெற்றுக்கொண் டிருக்கிறது. அம்மகாநாட்டிற்கு வந்திருந்த கட்சித் தலைவர்கள் தங்களின் "ஆங்கிலப் பேச்சுக்களை மொழிபெயர்த்துக் கூறச் செய்யுங்கள்" எனக் கேட்டுக் கொண்டனர். முன்னேற்பாடு இல்லாத இத் திடீர்த் திட்டத்தையும் நடத்திவிட முயன்றேன். ஆங்கிலம் அறிந்தோர் அனைவரையும் அறிந்து வேண்டினேன், மறுத்து விட்டனர். வழக்கறிஞர் ஒருவரை நெருங்கினேன். மன்னிக்கும்படி வேண்டினார். விட்டு விலகினேன். இவ்வளவு பெரிய கூட்டத்தில் மொழி பெயர்க்கும் ஆற்றல் உள்ள தமிழன் ஒருவனும் இல்லையே என வருந்தினேன். வருந்தியது அதிகமா? வெட்கப்பட்டது அதிகமா? என்பது தெரியவில்லை.

இந்த நிலையில் ஒருவர் என் அருகில் வந்து "மொழி பெயர்க்க ஆள் வேண்டுமா?" என்றார். "வேண்டும். யார் அது?" என்றேன். "கல்லூரி மாணவர் ஒருவர் வந்திருக்கிறார். மொழி பெயர்ப்பார்" என்றார். எனக்கு இன்னும் சிறிது அதிகமாகக் கோபம் வந்தது. பெரிய தலைவர்களின் அரசியல் பேச்சுக்களை பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளைக் கொண்டு மொழி பெயர்ப்பதைவிட ஆங்கிலப் பேச்சு ஒன்றே மகாநாட்டைச் சிறப்பித்து வைக்கும் என நம்பினேன். "மொழி பெயர்க்க ஆள் வந்துவிட்டதா?" என்ற கேள்வி தலைவர்களிடமிருந்து என்னிடம் வந்தது. வேறு வழி

யில்லாமல் அந்த மாணவரிடமே சென்று "நன்ருக மொழி பெயர்ப்பீர்களா?" என்றேன். "ஏதோ கொஞ்சம் தெரியும்" எனக் கூறினர். அந்த பதிலிலேயே கொஞ்சம் குறும்பும் கலந்திருந்ததாக எனக்குத் தோன்றியதினுல் சிறிது நம்பிக்கை ஏற்பட்டது.

மொழி பெயர்ப்பு முடிந்தது. பெயர் வினவினேன். அண்ணுத்துரை என்ருர். மகாநாட்டினருக்கு மகிழ்ச்சியோடு அறிவித்தேன். வக்கீல் ஐயாவிடம் சென்று "மறுத்தீர்களே! பார்த்தீர்களா?" என்று பெருமிதமாகக் கேட்டேன். மறுத்ததினுல்தான் ஒரு நல்ல மொழி பெயர்ப்பாளர் கிடைத்தார் எனக் கூறி அவர் ஒரு சிரிப்பு சிரித்தார். சொற்பொழிவு செய்தவரைக் கண்டு "மொழி பெயர்ப்பு எப்படி?" என வினவினேன். அதில் சிறிது சன்னப்பொடியும் கலந்திருந்தது எனக் கூறி புன்னகை புரிந்தார்.

இந்த வகையில் நண்பர் சி. என். அண்ணுத்துரை எம். ஏ., அவர்களை முதன் முதலாக பேச்சோடு கண்டு மகிழ்ச்சி யடைந்தேன். தமிழகத்தின் எதிர்கால நலனுக்கு இத்தகைய கல்லூரி மாணவர்கள் பலர் தேவை என எண்ணினேன். எனது எண்ணம் அன்றும் வீணுகவில்லை. இன்றும் வீணுகவில்லை. என்றும் வீணுகப் போவதுமில்லை. இது எனது நம்பிக்கை.

கல்லூரியில் வருந்திக் கற்று, 'கலைத்தலைவன்' என்ற எம். ஏ., பட்டமும் பெற்று, பிறகு ஆசிரியர் துறையிலோ, வழக்கறிஞர் துறையிலோ, வணிகத் துறையிலோ புகாமல், பொது வாழ்வுத் துறையில் புகுந்தவர் தமிழ் நாட்டில், முதன் முதலாக அன்பர் அண்ணுத்துரை ஒருவரே ஆவர். சுருக்கமாகக் கூறவேண்டுமானுல், தமிழ் மக்களின்

வாழ்வுக்காகத் தன் வாழ்வைப் பாழ்படுத்திக் கொண்டவர் எனக் கூறலாம். இதற்காக நண்பர் அண்ணாத்துரை அவர்களுக்கு தமிழ் மக்கள் நன்றி செலுத்த வேண்டும். அதைவிட அதிகமாக அவரை வளர்த்து, ஊக்குவித்து, நாட்டின் பொது வாழ்வுக்குத் தந்து உதவிய அவருடைய 'தொத்தா' வுக்கு நன்றியும், வணக்கமும் செலுத்த தமிழ் மக்கள் என்றும் கடமைப்பட்டவர்களாவர்.

1938-ல் நமது மாகாணத்தில் இந்தி எதிர்ப்புப் போர் நடைபெற்றது. அதை நடத்தியவர்கள் தமிழ் நாட்டு மக்கள் அனைவருமே எனக் கூறலாம். அப்போரை நடத்துவதற்கென்றே திருச்சியில் நடைபெற்ற தமிழர் மாநாட்டின் பொருட்டாக பொறுப்புள்ள சிலவற்றை நான் ஏற்றேன். பெரியார் சிறை சென்றதும் முழுப் பொறுப்பும் என் மீதே விழுந்தது. அப்பொழுதெல்லாம் அன்பர் அண்ணாத்துரை அவர்களைப்போன்ற பலருடைய ஒத்துழைப்பும் தொண்டும் இல்லாதிருக்குமானால் என்னால் ஒன்றும் செய்ய முடிந்திராது. இந்தியை எதிர்த்தும், அரசாங்கத்தின் கொள்கையைத் தாக்கியும் பேசிய குற்றத்திற்காக அவர் ஆறு மாதம் சிறைத் தண்டனையைப் பெற்றார். அப்போதுதான் தமிழ் நாட்டு மக்களிற் பலருக்கு அவரை அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

தமிழ் நாட்டு மக்களுக்கு அன்பர் அண்ணாத்துரையை அறிமுகப்படுத்தி வைத்தது யார்? என்று யாரோ கேட்டதாகத் தெரிகிறது. அவருக்குப் பதில் கூறுவதாயிருந்தால் 'கேள்வியே தவறு' என்றுதான்

பதிற் கூறவேண்டும். கேள்வி "அறிமுகப் படுத்தி வைத்தது எது?" என்று இருக்க வேண்டும். அவ்வி தம் இருக்குமானால் "அது அவரது தாய் மொழிப் பற்றும், சீர்திருத்த உணர்ச்சி கலந்த பேச்சும்" என்று பதிற் கூறலாம்.

ஆங்கிலம் கற்றவர்களில் பலர் அம்மொழியிலேயே அமிழ்ந்து விடுகின்றனர். இரண்டொருவர் கரையேறி னாலும் அவர்கள் ஏறியது தமிழ் நாட்டுக் கரையாக இருப்பதில்லை. ஆங்கிலக் கடல் நீந்தி தமிழ்க் கரை ஏறிய அறிஞர்களுள் அன்பர் அண்ணாத்துரையும் ஒருவராவர். இத்துறையில் இதற்கு முற்பட்டவர் பா. வெ. மாணிக்க நாயக்கர், ச. சோ. பாரதியார், கோவை சர். ஆர். கே. ஷண்முகம், இன்ஸ்பெக்டர் பவானந்தம் பிள்ளை, சி. கே. சுப்ரமணிய முதலியார், எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, கே. எம். பாலசுப்ரமணி யம் முதலியோர் ஆவர். பிற மொழியிற் கண்ட கலை அறிவை தாய் மொழி வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதே தலையாய மொழிப்பற்று ஆகும். இத்துறையில் அன்பர் அண்ணாத்துரையின் கலை அறிவும், மொழிப் பற்றும் எவராலும் போற்றற் குரியனவாம்,

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுடன் நெருங்கிப் பழகிய இயக்க அன்பர்களிற் பலர் வெளியேறிக் கொண்டே இருப்பது ஒரு வழக்கம். இது முறையாக நடைபெற்றுக் கொண்டே இருக்கும். பிரிந்தவர்களை வெறுத்தும், பெரியாரை ஆதரித்தும் வந்தவர்களில் நானும் ஒருவன்தான். காலக்கிரமத்தில் நானும் நெருங்கிப் பழகியதால் என்னுடைய முறையும் வந்து விட்டது. காலியான என் இடமும் உடனே நிரப்பப்

பெற்றது. அமைச்சர் வேலைக்கு அண்ணாத்துரையும், பொருள் வசூலுக்கு பொன்னம்பலனாரும், சமாதானம் சொல்ல சாமி சிதம்பரனாரும் அமர்த்தப்பட்டனர். பின்னர் அவர்கள் மூவரும் நெருங்கிப் பழக ஆரம்பித்ததால் வழக்கப்படி அவர்களின் முறையும் வந்துவிட்டது. ஒரே அறிக்கையில் மூவரும் கையெழுத்திட்டு பெரியாரிடத்தி லிருந்தும், 'விடுதலை'யிலிருந்தும் விடுதலை பெற்றுக்கொண்டனர். இம் மூவரில் அன்பர் அண்ணாத்துரை முதலாவதானவர்.

1941 இறுதியில் அன்பர் அண்ணாத்துரை அவர்கள் "திராவிட நாடு" என ஒரு இதழைத் தொடங்கப் போவதாக எழுதியிருந்தார். நான் அதைத் "தமிழர் நாடு" எனத் தொடங்கும்படி எழுதியிருந்தேன். பல முன்னேற்பாடுகள் நடைபெற்று விட்டதினால் இனி மேல் எதுவும் செய்வதற் கில்லையென அன்பர்கள் மூலமாக அறிவிக்கப் பெற்றேன்.

1942 தொடக்கத்தில் சென்னை மாகாண ஜஸ்டிஸ் மாநாடு ஒன்றை சென்னையில் கூட்டுவதற்கு பெரு முயற்சிகள் நடைபெற்றன. அம்மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் அன்பர் அண்ணாத்துரையே ஆவர். என்னை தலைமை வகிக்கும்படி மாநாட்டு அமைச்சர் எழுதியிருந்தார். தகுந்த காரணங்களைக் காட்டி மறுத்துவிட்டேன். அக் கடிதத்தை அன்பர் அண்ணாத்துரை பார்வையிட்டு ஒரு வற்புறுத்தல் கடிதம் எழுதியிருந்தார். அது இது.

அன்புள்ள தோழருக்கு
வணக்கம்!

தங்களை நேரில் காணவேண்டும் என்ற ஆவல் எனக்கு அதிகம், என்றாலும் இது சமயம் வேலை

மிகுதியினுல் அங்கு வர இயலவில்லை யென வருந்து கிறேன். தாங்கள் டெல்லியி லிருந்து திரும்பியதும் தங்களுடன் ஒரு நாள் முழுதும் கலந்து பேச வேண்டும்.

சென்னை மாநாட்டிற்கு தாங்களே தலைமை வகிக்க வேண்டும் எனப் பெரிதும் விரும்புகிறேன். மறுக்க வேண்டாம். திராவிட நாட்டுப் பிரிவினை பற்றி திருவாரூரில் தீர்மானம் நிறைவேறி யிருப்பதால் அது குறித்து எதிர்ப்பது முறையாகாது என்பதை தாங்கள் அறிவீர்கள். தங்களுக்கு அது விருப்பமில்லாவிடில் தமிழ்நாடு தனி மாகாணம் ஆவதின் அவசியம் பற்றி தலைமை உரையில் விளக்குங்கள். மற்றபடி கட்சியின் ஆக்க வேலைகளைப் பற்றியும், கொள்கைகளைப் பற்றி யும் நாம் இருவரும் ஒரு கருத்து கொண்டவர்களே.

திராவிட நாட்டுப் பிரிவினை என்பது தமிழ்நாடு தமிழருக்கே என்பதற்கு முரண் அல்ல என்பதை இப்போதே கூறிவிடுகிறேன். மற்றவைகள் தாங்கள் டில்லி சென்று திரும்பியதும்.

கட்சி வேலை சம்பந்தமாக தோழர் டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டியன் அவர்களிடமும் பேசியுள்ளேன். தங்களுக்கும் தெரிந்திருக்கும் என நம்புகிறேன். மகா நாட்டிற்குத் தலைமை வகிக்குமாறு மறுபடியும் கேட் டுக் கொள்ளுகிறேன்.

தங்களன்புள்ள தோழன்,

சி. என். அண்ணாத்துரை.

மாறுபட்டார், வேறுபட்டார் எனக் கருதும் போதும் அவருடைய அன்பையும், பெருந்தன்மையை யும், கட்சியின் மீதுள்ள பற்றையும், கொள்கையின்

மீதுள்ள உணர்ச்சியையும் எடுத்துக் காட்ட இக் கடிதம் போதுமானது என்றே கருதுகிறேன்.

1942 மார்ச் 15-ம் நாளில் சென்னை செண்ட் மேரிஸ் ஹாலில் சென்னை மாகாண ஜஸ்டிஸ் இளைஞர் மாநாடு பெரிய அளவில் நடைபெற்றது. வரவேற்புக் கழகத் தலைவர் அன்பர் அண்ணாத்துரை அவர்கள் இயக்கத்தின் வேலைகளைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என தனது வரவேற்பு உரையில் குறிப்பிட்டார். இயக்கத்தின் வேலைகள் தடைப்பட்டு இரண்டு ஆண்டுகள் பாழாய்ப் போயினவே! இப்போது என் செய்வது? என எனது தலைமை யுரையில் வருந்திய பதிலாகக் கூறினேன். இதை அன்பர் அண்ணாத்துரை அவர்கள் மனதில் வைத்துக்கொண்டே யிருந்து, நன்றி கூறும் பொழுது விட்ட இடத்திலிருந்து வேலையைத் தொடங்குங்கள் எனக் குறித்துக் கூறினார். இது அனைவராலும் கைதட்டி வரவேற்கப்பட்டது. கடைசியாக இத்தனை ஆண்டுகள் கழித்தும் விட்ட இடத்திலிருந்தே வேலையைத் தொடங்கும்படி ஆய்விட்டது.

1944-ல் ஈரோட்டில் இரண்டாவது நாடகக் கலை மகாநாடு சர். ஆர். கே. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெரியாரைப் பின்பற்றுவோருக்கும், சர். ஷண்முகத்தைப் பின்பற்றுவோருக்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்து வந்ததினால் மகாநாட்டில் கலவரம் ஏற்படும் என்ற வதந்தி உலவியது. பேசுவதற்காக என்று நாங்கள் சென்றிருந்தோம். அன்பர் அண்ணாத்துரை பேசும் பொழுது,

"தலைவர் தங்கள் மீது வருத்தப்பட்டுக்கொண்டிருந்தால் தயவுசெய்து அந்த எண்ணத்தை அவர்

மாற்றிக் கொள்ள வேண்டும், கம்ப இராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்று நாங்கள் கூறுவதெல்லாம் அந்த நூலின் மீது எங்களுக்குள்ள வெறுப்பைக் காட்டுவதற்கே ஒழிய உள்ளபடியே கம்ப இராமாயணத்திற்கு தீ வைக்கும் கயவர்கள் நாங்களல்ல."

என ஒரு விளக்கப் போடு போட்டார். தலைவர் சர். சண்முகம் அவர்கள் சிரித்தார். ஏன்? என்றேன் "சரிதான்!" என்றார்.

திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுடன் ஒரு முறையும், பேராசிரியர் ச. சோ. பாரதியார் அவர்களுடன் ஒரு முறையும் கம்ப இராமாயணம் பற்றி சொற்போர் நிகழ்த்த முறையே சென்னையிலும், சேலத்திலும் சில அன்பர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இரண்டிலும் அன்பர் அண்ணாத்துரையே வெற்றி பெற்றாரா? மற்ற இருவரும் தோற்றார்களா? என்ற கேள்வி இங்கு வேண்டியதில்லை. அவர்கள் இருவரும் சொற்போர் நிகழ்த்த ஒப்பியதே அண்ணாத்துரைக்கு ஒரு வெற்றியாக அமைந்துவிட்டது.

திராவிடநாடு பிரிவினை பற்றி பேச்சுப் பிரசாரம் மட்டுமே நடைபெற்று வந்தது. அதன் பேரால் ஒரு கழகம் இருக்க வேண்டும் என்ற எண்ணம், முதன முதலாக அன்பர் அண்ணாத்துரைக்கே ஏற்பட்டது. அதன்படி காஞ்சீபுரத்திலேயே முதலில் திராவிடர் கழகத்தை தொடங்க எண்ணி முயற்சி செய்து வந்தார். பிறகு சேலம் நிர்வாகக் கூட்டத்தில் "தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தையே திராவிடர் கழகம் என மாற்ற வேண்டும்" என்று தீர்மானம் செய்யப்

பெற்று திராவிடர் கழக தலைமை நிலையத்தின் உரிமையானது காஞ்சிவரத்திலிருந்து ஈரோட்டிற்குச் சென்று விட்டது. என்றாலும் அன்பர் அண்ணாத்துரை அவர்கள் இதை வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. இச் செய்தியை சிலரே அறிவர்,

தமிழ் நாட்டில் படிப்பில்லாத மக்களிற் பெரும்பான்மையோரை பேச்சின் மூலம் தட்டி யெழுப்பிய பெருமையில் பெரும் பங்கு பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு உண்டு. அதுபோலவே படித்த இளைஞர்களிற் பெரும்பான்மையோரை பேச்சின் மூலம் தட்டி எழுப்பிய பெருமையில் பெரும் பங்கு அன்பர் அண்ணாத்துரைக்கு உண்டு என உறுதியாகக் கூறலாம்.

அன்பர் அண்ணாத்துரை ஆங்கிலத்திலும், தமிழிலும் நன்றாகப் பேசும் ஆற்றல் படைத்தவர். மேடை ஏறிப் பேசுகின்றவர்கள் பலராலும் பாராட்டப் படுபவர்.

இக்காலத்திய மேடைப் பேச்சுகளில் செயப்படு பொருளை முன்னே வைத்து பயனிலையை, எழுவாயை பின்னே வைத்துப் பேசும் வழக்கம் ஒன்று இளைஞர்களால் கையாளப் பெற்று வருகிறது. அது "தூது அனுப்பினான், பதில் வந்தது" என்றிராமல் "அனுப்பினான் தூது, வந்தது பதில்" என்றிருக்கும். இம் முறையை நம் நாட்டில் முதலிற் புகுத்தியவர் அன்பர் அண்ணாத்துரையே ஆவர். இம்முறையானது தமிழ் இலக்கணத்திற்கு மாறுபட்டது எனக் கூறினாலும் செவிச் சுவைக்கு வேறுபட்டது எனக் கூறி விட முடியாது.

அவர் பேசும் பொழுது தன் குதிகாலை உயர்த்தி, உயர்த்திப் பேசுவது வழக்கம். பேச்சில் நகைச்சுவையும், வீரச்சுவையும் மாறி மாறிக் காட்சியளிக்கும். அடுக்குச் சொற்கள் அதிகமாக வந்து விழும். குறுகிய உருவமும், குறும்புப் பார்வையும், புருவ நெரிப்பும்,

இனிய குரலும், எடுப்பான ஓசையும், வெற்றிலே அடக்கியவாயும், வீராவேசச்சைகையும் பற்றில்லாதவரையும் பற்று கொள்ளச் செய்யும் பான்மை யுடையனவாகும்.

சுருக்கமாகக் கூற வேண்டுமானுல் தமிழ் நாட்டில், உயர்ந்த பேச்சாளர்களின் கூட்டத்தில் முதல் வரிசையில் விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரில் அன்பர் அண்ணுத்துரையும் ஒருவர் என்றே கூறியாக வேண்டும்.

அன்பர் அண்ணுதுரை பேச்சாளர் மட்டு மல்ல. எழுத்தாளரும் கூட. அவருடைய 'திராவிட நாடு' பத்திரிகைகள் தமிழ் நாட்டில் அதிகமாக வரவேற்கப் படுகின்றன. அவர் பத்திரிகை ஆசிரியர் மட்டு மல்ல, நாடக நூல் ஆசிரியருங் கூட. அவரால் எழுதப் பெற்ற 'வேலேக்காரி'யும், 'ஓர் இரவு'ம் நாடகத்தின் மூலம் மக்களுக்கு சீர்திருத்த உணர்ச்சியை உண்டாக்கி விட்டு இப்போது நிழற் படத்தின் மூலம் தொண்டு செய்யக் கிளம்பி இருக்கின்றன. அவர் ஒரு பேச்சுப் புலவர் மட்டு மல்ல; நடிப்புப் புலவருங் கூட. 'சந்திரோதயம்' நாடகத்தில் அவர் உணர்ச்சியோடு நடிப்பது கண்ணுக்கு மட்டுமல்ல, சிந்தனேக்கும் சிறந்த விருந்தாக இருக்கும். ஆகவே, அன்பர் அண்ணுத்துரை அவர்கள் எழுத்து, பேச்சு, நடிப்பு ஆகிய முத்துறையிலும் சிறந்த கலேஞராக இருந்து வருகிறுர்.

திரு. அண்ணுத்துரை மீது சில குற்றச் சாட்டுகள்! அவை என்ன?

1. "மூவர் சேர்ந்து ஒப்பந்தமாக கையெழுத்திட்டு அறிக்கைவிட்டு வெளியேறிய பிறகு அண்ணுத்துரை திரும்பவும் பெரியாரோடு சேர்ந்தபொழுது எங்களேக் கலந்திருக்க வேண்டும்."

—இரு நண்பர்கள்

2. "பாரதிதாசனுக்கு என்ன வந்தது? இரண்டு பாட்டுப் பாடிவிட்டால் ஒரு புலவர்! அவருக் கெல்லாம்

பணமுடிப்பு! இதற்கெல்லாம் அண்ணுத்துரை முயற்சி! எதுவும் கேட்டுச் செய்ய வேண்டாமோ?''

—தலைவர்

3. "சுவீகாரப் பிள்ளையாக நான் ஒருவன் இருக்கும்போது இவனுக்கு என்ன இங்கு ஆதிக்கம்?''

—தகப்பன்சாமி

4. "ஒட்டிக்கொண் டிருந்தால் எட்டியிருந்து திட்டி எழுதுவேன். எட்டிப் போய்விட்டால் ஒட்டிக் கொண்டு திட்டுவேன்''

—மலைச்சாமி

5. "கோட்டைர்களா செய்தியை? இப்போது அண்ணுத்துரை இயக்கத்தை கவனிப்பதில்லை. நாடகம் எழுதி பணம் சம்பாதித்து, முதலாளி ஆகிவிட்டார்''

—கையாலாகாதவன்

6. "கடிதம் எழுதிஞல் பதிலே எழுதுவதில்லை, என்ன இருந்தாலும் இப்படி இருக்கக் கூடாது.''

—எழுதிச் சலித்தவர்

7. "பெரியார் கொள்கைக்கு விரோதமாக, பெரிய தலையங்கம் ஒன்றை, ஆகஸ்ட் 15உ அநியாயமாக எழுதலாமா?''

—திராவிட இளைஞர்கள்

8. "தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் தொண்டு செய்ய 'தமிழர் கழகம்' அழைத்தும் அண்ணுத்துரை மறுத்து விட்டது பெருங் குற்றமாகும்''

—தமிழ் இளைஞர்கள்

9. இந்தியை எதிர்த்து மறியல் செய்தவர்களுக்கு உடந்தையாயிருந்த குற்றவாளி அண்ணுத்துரைக்கு 6 மாதம் சிறைத் தண்டனை விதிக்கிறேன்.

—நீதிபதி

மேலே கூறப்பட்ட குற்றச்சாட்டுகளால் அன்பர் அண்ணுத்துரை தாக்கப்பட்டவர். என்ருலும் அவர் குற்றவாளியா? அல்லவா? என்பதை விளக்கிக் கூறிய தில்லை. கோர்ட்டிலேயே கூறவில்லையென்ருல் நாட்டிலும் ஏட்டிலும் ஏன் கூறுகிருர்கள்? ஆகவே, அவர் குற்றவாளியா? அல்லவா? எனபதை நீங்களே முடிவு செய்து கொள்ள வேண்டியதுதான்.

அன்பர் அண்ணுத்துரையிடம் நான் ஒரே ஒரு குறை மட்டும் கண்டேன்!

ஒருநாள் நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்த விடத்திற்கு ஒரு அன்பர் வந்தார். "9௳ கூட்டம் வர வேண்டும்" என்ருர், ஒப்பினேன். அன்பர் அண்ணுத் துரையை அழைத்தார். அவரும் ஒப்பினுர். அழைத்த வர் மகிழ்ச்சியோடு சென்று விட்டார். அவர் சென்ற பிறகு, "9௳ வேறு வேலை இருப்பதாக என்னிடம் சொன்னீர்களே! எப்படி ஒப்பினீர்கள்?" எனக் கேட்டேன். "நான் போகப் போவதில்லை; சும்மா சொன்னேன்" என்ருர். "இந்த உண்மையை அவரிடம் சொல்லி இருக்கலாமே?" என்றேன். "சொன்னுல் அவர் நமமைவிட்டுப் போயிருக்கமாட்டார்; நம்மையும் பேச விட்டிருக்கமாட்டார்" என்ருர். "இதற்காகப் பொய் சொல்லுவதா?" என்றேன். "உண்மையைச் சொன்னுல் ஒப்புக்கொள்ளுகிற குணம் உண்டாகிற வரையில் பொய் பேசுவதில் தவறு ஒன்றுமில்லை" என்ருர். "அந்தக் குணத்தை நாம்தான் உண்டாக்க வேண்டும்" என்றேன். "தன்னுல் இயலாது" என்ருர். "முயலுங்கள் இயலும்" எனக் கேட்டுக் கொண்டேன். நாட்டின் நலனைக் கருதி இக்குறை ஒன்று மட்டும் அவரை விட்டு விலக வேண்டும் என்பது எனது ஆசையாகும்.

முன்னேறி வருகிறவர்களைக் கண்டு மகிழ்ச்சியடையும் வழக்கம் தமிழ் நாட்டில் ஒட்டக்கூத்தன் காலத்திலிருந்தே இல்லையெனலாம். மகிழ்ச்சியடையா விட்டா

லும் சும்மா இருக்கவும் சிலரால் முடிவதில்லை. தந்நலம் காரணமாக சிறு செயல்களையும், சேட்டைகளையும் சிலர் செய்து மகிழ்வது வழக்கமாக இருந்து வருகிறது. நாட்டைத் திருத்துவதற்காக என்று பேனவைப் பிடித்துக் கொண்டு, பத்திரிகை ஆசிரியர்களாகக் காணப்படுகின்ற சிலரிடமிருந்தே இவ் அம்புகள் அன்பர் அண்ணுத்துரை மீது எய்யப்பெற்றன என்றால், பாமரர்களாகக் காணப்படுகிற பலருடைய செயல்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை அல்லவா?

அன்பர் அண்ணுத்துரை அவர்கள் ஒரு சிறந்த அறிஞர்! நல்ல எழுத்தாளி! உயர்ந்த பேச்சாளி! முனைந்த உழைப்பாளி! சீர்திருத்தவாதி! பத்திரிகை ஆசிரியர்! நாடகக் கதாசிரியர்! நடிகர்! எனக் கூறலாம். இவ் எல்லாத் துறையாலும் நாட்டுத் தொண்டு, மொழித் தொண்டு ஆகியவைகளைச் செய்து வருபவர். திட்டம்போட்டு, உட்கார்ந்து, உடம்பு வணங்கி வேலை பார்க்கின்ற ஒரு தொல்லையைத் தவிர மற்ற எல்லாத் தொல்லைகளையும் ஏற்று தொண்டாற்றும் இயல்பு உடையவர்.

அன்பர் அண்ணுத்துரை அவர்களை தமிழ் நாட்டின் பல செல்வங்களில் ஒன்றுகக் கருதுதல் வேண்டும். அவர் ஒரு நல்ல தமிழர்! இன்றைய இளைஞரும் எதிர்காலத் தலைவரும் ஆவர்! அன்பர் அண்ணுத்துரையைப் போன்ற பலர் எதிர்கால தமிழ் நாட்டிற்குத் தேவை. மிகவும் தேவை. இப்போதே சிலர் தோன்றி வருகிறார்கள். இன்னும் பலராகப் பெருகவேண்டும் என்பது எனது ஆசை. பண்டைப் பெருமையையும், பழம் புகழையும் பேசிக்கொண்டே எல்லாத் துறையிலும் அந்நியருக்கு அடிமைப்பட்டு தன் சிறப்பை மறந்து வாழுகின்ற தமிழ் நாட்டிற்கு, இத்தகைய அறிஞர்களும், இளைஞர்களும், தொண்டர்களும் தேவை.

வாழ்க தமிழ்த் திருநாடு!

சி. ஆ. பெ. விசுவநாதம்
திருச்சிராப்பள்ளி

அறிஞர் என்பவர் யார்?

" அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது!" என்பதுபோல் அரிது அரிது அறிஞன் ஆதல் அரிது. அத்தகைய அறிஞன் யார்? என்பதை என் அறிவிக்கு எட்டிய வரையில் சிறிது கூறுகிறேன்.

ஒருவருக்கு அறிவு இருக்கும்; ஆனல் ஆற்றல் இராது அறிவும் ஆற்றலும் உடையவரே அறிஞர்.

கல்வியுடையராய் இருப்பர்; ஆனல் கருத்து இராது. கல்வியும் கருத்தும் உடையாரே அறிஞர்.

பல நூல்களைப் படித்திருப்பர்; ஆனல் பகுத்தறிவாம் பெரும் அறிவை உபயோகித்து, ஆராய்ந்து, நற்கருத்துக்களை மனத்தே பதியவைத்து, தீயகருத்துக்களை நீக்கி, கற்றதனுல் ஆய பயனைப் பெற்றிருக்க மாட்டார்கள். ஏட்டில் பதிந்துள்ள பாட்டை, நன்கு ஆராயாமல், பாராயணம் செய்து, கேட்போர்க்கும் புரியாது, தனக்கும் விளங்காது, தத்துவார்த்தம் சொல்லி, வம்புக்கிழுப்பவர் அறிஞரா? "கற்றிலாய், கலைகற்று உணராற்முகம் உற்று நோக்கில் மயானத்தொக்குமால்" என்பதுபோல், பாட்டைப் படித்து உண்மையை உணர்ந்து, அறிவால் ஆராய்ந்து, உலகத்திற்கு உண்மையான கருத்துக்களை நல்குவார் அறிஞராவார்.

பெரும் பேச்சாளராய் இருப்பர்; ஆனல் எழுத்தாளராய் இரார். இவ்விரண்டும் கொண்டவரே அறிஞர்.

நாடகாசிரியனய் இருப்பர்; ஆனல் நடிப்புத் திறன் இராது. இரண்டும் உடையாரே அறிஞர்.

உலகத்தைச் சுற்றிப் பார்த்து, பல அதிசயங்களைக் கண்டு, ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனாலும் ஓதற்கரிய உலகமே என்று வருணித்து புராணம் எழுது பவன் அறிஞனா? இருந்த இடத்திலிருந்து கலையுலகத் தைச் சுற்றிப் பார்த்து மக்களுக்கு பகுத்தறிவைப் புகட்டி மாக்களை மக்களாக சீர்திருத்துபவன் அறிஞனா! என்பதைச் சற்று சிந்தியுங்கள்.

இவ்வித தன்மைகள் உடையவர் இருத்தல் முடி யுமா? என்று கேட்கிறீர்களா? இருக்கிறார். ஞானக் கண்ணால் பார்க்க வேண்டாம்; 'ஊனக்'கண்ணால் பார்த்தாலே தெரியும். என்னைப் பைத்தியக்காரி என்று சொல்லி விடாதீர்கள். நானே சொல்லி விடுகிறேன். இன்னும் கொஞ்சம் எழுதி, பிறகு சொல்லலா மென்றால், சொல்லி விடும்படி தோன்றுகிறது. யார் தெரி யுமா? நம் திராவிடத் தளபதி, சி.என். அண்ணாத்துரை அவர்களே தான். இவ்வறிஞரைப் போன்று பல அறிஞர்கள் நம் நாட்டிற்குத் தேவை. நம் அண்ணா வின் அறிவுத்திறனை என்னென்று புகழ்வது. அண் ணலே! "தானே தனக்கு உவமை" என்பது போல உம்முடைய அறிவுத்திறனுக்கு, நீர்தான் இணை என்று கூறின், அது மிகையன்று.

ஆ. இராமாமிருதத்தம்மாள்
மூவலூர்

திராவிடத் தளபதி

காஞ்சியில் நெசவுத் தொழிலாளரின் மகாநாடு. திரளான மக்கள் அமைக்கப்பட்ட பந்தலில் கூடியிருந்தனர். பேச்சாளர்களில் ஒருவனாக நானும் மகாநாட்டு மேடையில் அமர்ந்திருந்தேன். நான் கூட்டத்திற்கு வரும் சமயம் மகாநாட்டுத் தலைவரின் முன்னுரை முடிவடைந்து விட்டது. மக்கள் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொண்டிருந்ததால் எங்கும் அமைதியற்றிருந்தது. அச்சமயம், தலைவர் எழுந்தார். "தோழர் அண்ணாத்துரை அவர்கள் இப்பொழுது......" என்று சொல்லி முடிப்பதற்கு முன் கைதட்டும் ஓசையும் "அண்ணாத்துரை வாழ்க! திராவிடத் தளபதி வாழ்க!" எனும் பேரொலியும் வானைப் பிளந்தன.

தோழர் 'அண்ணா'வைப்பற்றி கேள்விப்பட்டிருந்தேன்; ஆனால் பார்த்ததில்லை. வெள்ளை உடை தரித்த சிறிய உருவமான ஒருவர் சிரித்த முகத்துடன் தலைவர் மேஜைக்குப் பக்கத்தில் வந்து நின்றார். ஓசை வானைப்பிளந்ததென தெரிவித்தேன்—இல்லை. வானே இடிந்து விழுந்ததுபோ லிருந்தது. என்னே மக்களின் உற்சாகம்! என்னே மக்களின் குதூகலம்!! இந்த சிறிய மனிதருக்கா இவ்வளவு ஆரவாரம் என்று நினைத்தேன். ஒலிபரப்புக் கருவிக்கு முன் நின்ற தோழர் அண்ணாத்துரை—" தலைவர் அவர்களே!" எனத் தொடங்கினார். அவ்வளவுதான் நிசப்தம் நிலவியது. நான் கூட்டத்தில் மக்களிருக்கிறார்களா அல்லது மாயமாக மறைந்தார்களா என நினைத்தேன்! சிறிய சிறிய சொற்றொடர்களைக் கொண்டு ஆரம்பித்த "அண்ணா"வின்

பிரசங்கம் சின்னஞ் சிறு அருவிகள் போல் தோன்றின. நேரம் ஆக ஆக சிறிய அருவிகள் பெரிய அருவிகளாக மாறின. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியது, "அண்ணு"வின் பிரசங்கம். இரண்டு மணி நேரம் பேசினுர். பிரசங்கத்திஞல் ஏற் பட்ட உணர்ச்சியில் மெய்ம்மறந்த எனக்கு, அவர் இரண்டு விஞடிதான் பேசினது போலிருந்தது. பரவ சப் படுத்தும் பரந்த நோக்கம், உற்சாக மூட்டும் உயரிய எண்ணம், ஆனந்த முறச் செய்யும் ஆழ்ந்த அறிவு, இவைகள் "அண்ணு"வின் சொற்பொழிவைச் சிறப்புறச் செய்தன. மக்களடைந்த மகிழ்ச்சிக்கும் மட்டில்லே, அவர் பேசும் சமயம் அவரோர் சிறிய உடல் படைத்தவராகத் தோன்றவில்லே. ஒரு பெரும் 'தளபதி' யாகத் தோன்றினுர். திராவிடர் அவரைத் 'தளபதி' எனப் போற்றின் அது மிகவும் பொருத்தம் தான் என அன்றுதான் உணர்ந்தேன்!

எம். எஸ். அப்துல் மஜீத், எம். எல். ஏ.
சென்னே.

அண்ணாவின் எழுத்தும் பேச்சும்

அறிஞர் அண்ணாத்துரையைப் பற்றித் தமிழ் மக்களுக்கு அறிமுகஞ்செய்து வைப்பதென்பது மிக மிக மிகை என்பதே எமது கருத்து. "சால உறுதவ நனிகூர் கழிமிகை" என மிகுதி குறிக்கும் உரிச் சொற்களையெல்லாம் அப்படியே அடுக்கிக் கூறினும் மிகையாகாது. ஏன்? அவர் தமிழ் நாட்டின் பெருமையை மீண்டுங் கொணர்ந்து நிலை நாட்டப் பிறந்தவர். தமிழ் நாட்டின் தனிப் பேச்சாளர், எழுத்தாளர். தமிழ் மக்களெல்லோரும் அறிவு, ஆண்டு என்னும் வேற்றுமையின்றி, பெரியவர், சிறியவர் எல்லோரும் 'அண்ணா' என்று அன்புடனழைக்கும் தகுதி, உரிமை வாய்ந்தவர். தேனினுமினிய செந்தமிழ் நடைச் செல்வர் திரு. ரா.பி. சேதுப் பிள்ளை அவர்களே 'அண்ணா' என்று ஆர்வத்துடன் அழைக்கின், வேறு சொல்வானேன்! நாம் யாருக்கு அறிமுகப் படுத்துவது? கலைவல்லோருக்கா? கல்லூரி மாணவருக்கா? எதிர்க் கட்சியாளருக்கா? எதிர் இனத்தாருக்கா? ஔவை மூதாட்டியார் எப்படிக் கற்றார், கல்லார் எல்லோர்க்கும் அறிமுகமோ, அப்படி அறிமுகமானவர் அண்ணா. யார் அறிமுகப் படுத்தினர்? ஔவையாரை யார் அறிமுகப் படுத்தினர்? அவர் எழுத்தும் பேச்சும். அதுபோல அண்ணாவின் எழுத்தும், பேச்சும்தான் அண்ணாவை தமிழர்கட்கு அறிமுகமாக்கி வைத்தன. என்ன எழுத்து! என்ன பேச்சு!!

"திராவிட நாடு" படிப்பவரில் பெரும்பாலோர் யார்? திராவிடக் கழகத்தினரா? இல்லை. எதிர்க் கட்சியினர், எதிர்க்கொள்கையினர், எதிர் இனத்தினர்

என்பதே சரியான விடை. "அண்ணு எழுதின நூலா, வாங்கு" "முப்பத்திரண்டு பக்கம் ஒரு ரூபாய் விலே" "அண்ணு எழுத்து ஒரு பக்கம் ஒரு ரூபாய் பெறும்!" "அண்ணு திராவிட நாட்டில் எழுதிய 'ரங்கோன் ராதா' தனி நூலாக வருகிறதாம், "ரோமாபுரி ராணிகளும் வந்தாச்சாம்" "பணத்தோட்டம் வெளிவரப் போகிறதாம்" "முந்திய இரண்டையும் வாங்கிவிட்டு இதற்கு முன் பணம் அனுப்பிவிடலாம்" "நாடும் ஏடும் படித்தாயா?" "நல்ல தீர்ப்பு எப்படி? ஏன், அண்ணுவுக்கு வேலே என்ன? நிறைய எழுதினுல் படிக்கலாமே—எழுதிக் கொண்டு தானே வருகிருர். இல்லே, அண்ணு சோம்பேறி!" இவை யெல்லாம் இளேஞரிடை, ஏன்? பெரியவரிடையேயுங் கூட நடக்கும் சொல்லாடல்கள்.

ஒரு நூல் வெளிவந்த ஒரு வாரத்தில் எத்தனே ஆயிரம் படிகளாஞலும் தீர்ந்து விடுகின்றன. இதன் காரணமென்ன? அதுதான் அண்ணுவின் எழுத்து வன்மை.

"பாலெல்லாம் நல் ஆவின் பாலாமோ?
நூலெல்லாம் வள்ளுவர் செய்நூலாமோ?"

என்பதுபோல,

"எழுத்தெல்லாம் அண்ணுவின் எழுத்தாமோ' என்பதல்லாமல் இதற்கு வேறு காரணம் என்ன கூறுவது. அண்ணுவின் எழுத்துக்கு ஒப்பு அதுவே. அண்ணு இவ்வருமையான எழுத்தை, தனித்த எழுத்தைப் படிப்போர் உள்ளத்தை ஒருங்கு கொள்ளே கொள்ளும் எழுத்தை யாரிடம் பழகிஞர்? அதுதான் வேடிக்கையான கேள்வி. ஒப்புச் சொல்ல வேருெருவர் எழுத்து இருந்தாலன்ருே அக் கேள்விக்கு விடை கிடைக்கும். அண்ணுவின் எழுத்தாசிரியன், அவருடைய "நுண் மாண் நுழை புல" வளர்ச்சிதான். ஆற்ருெழுக்குப் போன்ற நடை, அழகிய நடை, விறு

விறென்ற நடை, பொன் போலப் போற்றக் கூடிய நடை, புலவர் புகழ் நடை, படிப்போர் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் பண்புடை நடை, என்று எவ்வளவு வேண்டுமானாலும் அடுக்கிக் கொண்டே போகலாம். அண்ணாவின் சொல் நடை சில இடங்களில் செய்யுள் நடையினுஞ் சிறந்த தொடையழகுடைய நடை. கருத்தை எளிதில் விளக்கும் சொற்றொடர்கள். புத்தம் புதிய சொல்லாட்சி.

செய்யுளிலும் வருணிக்க முடியாத சில வருணனைகளை அண்ணாவின் எழுத்தில் காணலாம். ஒன்பான் சுவையும் ஒருங்கு அமைந்திருக்கும். படிப்போரின் உள்ளத்தை நகைச்சுவை யென்னும் தோழன் கட்டியிழுத்துக்கொண்டே செல்வான். காதல் மணம் கமழ்ந்து கொண்டேயிருக்கும். எங்கும் பொருளாதாரம் பொலிவுற்று விளங்கும். அண்ணாவின் எழுத்து, தலை சிறந்த இலக்கியமாகவும், கலைக்கருவூலமாகவும், கற்பனைக் களஞ்சியமாகவும், வரலாற்றின் வடிகாலாகவும், அரசியல் ஆராய்ச்சியாகவும், புரட்சிப் பொறியாகவும், பகுத்தறிவுப் பட்டறையாகவும், சீர்திருத்தச் செல்வமாகவும், பல்சுவை பகுதியாகவும் விளங்கும். 'திராவிட நாட்'டைப் படித்துப் பாடம் பண்ணிப் பேச்சாளரானவரே, தற்காலப் பேச்சாளரில் பெரும்பாலார் என்பதைக் கொண்டே அண்ணாவின் எழுத்தின் பெருமையை இத்தன்மைத்தென அளவிட்டுக் கூறலாம். அதுதான் தலையாய எழுத்து என்பது.

அண்ணா வந்திருக்கிறார், பேசப்போகிறார் என்றால் அவர்க்கு முன் யார் எவ்வளவு திறமையாக, இனிமையாக, சுவைபட, பொருட் பொலிவுடன், விளக்கமாக, எதைப் பேசினாலும் கூட்டமதைக் கேட்பதாக இல்லை. "அண்ணா எப்போ பேசுவார்? என்ன இவர் இன்னும் உட்காரமாட்டேனென்கிறாரே? என்ன வழ வழ! நேரமாகிறது. அண்ணா பேச்சைக்கேட்டுவிட்டுப்போகலாம். எதைப் பற்றிப் பேசப் போகிறார்? எதைப் பற்றி பேசி

ழலென்ன?" இவை தான் அக்கூட்டத்தின் பேச்சாக இருக்கும்.

அண்ணு பேசிவிட்டாரா, அவ்வளவுதான், அதன் பின்னர் யார் பேசினும் சுவைக்காது. மாநாடாகவோ சிறப்புக் கூட்டமாகவோ இருந்தால், பல்லைக் கடித்துக்கொண்டு, முறைத்து முறைத்து பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பர். சிலர் அண்ணுவின் பேச்சுத் திறமையைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பர். சிலர் அண்ணுவின் பேச்சால் மயங்கி ஊமைபோல் ஒன்றுந் தோன்ருமல் ஒன்றையுங் கவனியாமல் உட்கார்ந்து கொண்டிருப்பர். சிலர் அண்ணுவின் பேச்சை வாய்விட்டே பேசிச் சுவைக்கத் தொடங்கி விடுவர். சிலர் அண்ணுவுக்குப் பிறகு பேசுகிறவர்களை "ஏனய்யா இத்தொல்லை? அண்ணுவின் இனிய பேச்சை, அழகிய கருத்துக்களை, அருமையான சொற்ருெடரைக் கேட்ட எங்கள் செவியில் வீணுக வெற்றுரை பெய்து வருத்துகிறீர். அன்பு கூர்ந்து உட்காரவும்" என்று மெய்ப் பாட்டுக் குறிப்பால் கூறிக்கொண்டு சுமக்க முடியாத பெருஞ் சுமையைச் சுமப்போர்போல உட்கார்ந் திருப்பர்.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து"

"சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான், அவனை
இகல் வெல்லல் யார்க்கு மரிது"

"விரைந்து தொழில் கேட்கும் ஞாலம், நிரந்தினிது
சொல்லுதல் வல்லார் பெறின்"

என்று வள்ளுவர் வகுத்த இலக்கண மெல்லாம் அண்ணுவிற்கு அமைந்திருத்தலைக் காணலாம்.

இத்தகைய சொல்லின் செல்வன் ஒரு தனிப்பிறப் பேயாகும். பேச்சுக்கென்றே பிறந்தவர் எனச் சுருக்க மாகச் சொல்லலாம். அண்ணு, சென்னை உயர்முறை மன்ற வழக்கறிஞராக வந்திருந்தால் அம்மன்றம் நடு வரையின்றி நல்குற வெய்திக் கிடக்கும். உலக உயர் முறை மன்றங்களே அதற்குள்ளாகி இருக்கும். ஏன்? இனியும் வழக்கறிஞராக வரலாம்.

நமது தமிழ்நாடு இன்று கட்சிப் பூசலில் கட்டுண்டு, கண்ணிழந்து கிடக்கிறது. எதிர்க் கட்சியைப் பற்றிப் பேசினுல் போதும். நினைத்தால் கூடப் போதும், அவ்வளவுதான். அவர் எவ்வளவு பெரிய சிறந்த அறிவாளியானுலும், பகைவராகக் கொண்டு புறக்கணிக்கும் சிறுமைக் குணம் நம் நாட்டை, தமிழ் மக்களைப் பிடித்தாட்டிக் கொண்டு வருகிறது. சென்னை அமைச்சர் குழுவில் அரசியல் வகுப்பவையில் இந்திய யூனியன் அமைச்சில் மாநிலத் தலைவர் கூட்டத்தில் இன்று அண்ணு இடம் பெருமல் "திராவிட நாடு" ஆசிரியர் அண்ணுவாக மட்டும் இருப்பதற்கு இச்சிறுமைக் குணம் அன்ருே காரணம். தமிழ்க் கலைச் சொல் லாக்கக் கழகத்தில், கலைக்களஞ்சியக் குழுவில், கல்விக் குழுவில் வேறு எதில் தான் அறிஞர் அண்ணு இடம் பெற்றிருக்கிருர்!

அண்ணு இத்தகுதியறியாத் தமிழ் நாட்டில் பிறந்திருக்காமல் மேனுட்டில் பிறந்திருப்பாரேயானுல் 'நோபல் பரிசு' பெற்றுப் பல ஆண்டுகள் ஆகி இருக்கும். சுமக்க முடியாத பல பல்கலைக் கழகங்கள் கொடுத்த பட்டங்கள் அடுக்குப் பாத்திரங்கள் போல தலைமேலிருந்து அழுத்திக்கொண் டிருக்கும். இன்னும் எத்தனையோ பட்டங்கள், பரிசுகள்!

தமிழர்கள் உண்மையாகவே பகுத்தறிவைப் பயன் படுத்துபவர்களானுல் பண்டு போல் அறிஞர் உரைகளைக் கேட்டு, அதன்படி நடப்பவர்களானுல் என்ன

செய்திருப்பர்? சென்னை அல்லது திருச்சி வானொலி நிலையத்தில் அண்ணாவை அமர்த்தி நாடோறும் ஒன்று அல்லது இரண்டு மணிக்காலம் எல்லா மக்களுக்கும் ஓய்வுள்ள நேரம்-யாவரும் இருந்து கேட்கும்படியான நேரம்-பார்த்து அறிவுரையாற்றச் செய்து அன்றாட நாட்டு நடப்பை, நல்லாட்சி மேம்பாட்டை, கலை வளர்ச்சியைக் கேட்டுப் பயன் பெற்றுக்கொண் டிருப் பர். ஆனால் தமிழர்கள் தமிழர்களாக இல்லை. தன் அறிவுடன், தன்மானத்துடன் இல்லை. அன்று சங்கப் புலவரைப் போற்றிப் பயன் பெற்றத் தமிழ் மரபு இன்று அறிஞர் அண்ணாவைப் போற்றிப் பயன் பெறும் தன்மையை இழந்துவிட்டது. இப்புத்துலகச் சிற்பியைப் போற்றத் தவறிய தமிழ்நாடு, ஒரு நாளைக் குத் தன் குற்றத்தை, தவற்றை எண்ணி வருந்தும் என்பது உறுதி

ஏ! தமிழகமே! தாழ்ந்த தமிழ் நாடே! கட்சிப் பூசலை விடு. அறிஞர் அண்ணாவின் எழுத்தின், பேச் சின் பயன் பெற்று வாழ். அரிதில் கிடைத்த ஓர் அறிஞனைப் போற்றிப் பயன் பெறாது தவறியது தமிழ் நாடு என்னும் உலகப் பழிக்கு ஆளாகாதே. மருட்சியை மாற்று. அறிவுக் கண்கொண்டு பார். ஒரு கட்சிக் காரருக்கு மட்டும் அண்ணா என்னுங் குறுகிய மனப் பான்மையை விடு. அண்ணா தமிழ் நாட்டின் அண்ணா. தமிழர்களின் பொதுச் சொத்து. தமிழ் மக்களின் அறிவுக் களஞ்சியம். தமிழர்களின் முன்னேற்றப் பாதை, பகுத்தறிவுத் திறவுகோல். கலைக் கலங்கரை விளக்கம். இனியேனும் அண்ணாவைப் பொதுச் சொத்தாக்கிக் கொள்ளும்படி தமிழ்மக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

புலவர் குழந்தை

'இராவண காவியம்' நூலாசிரியர், பவானி

அவரும் நானும்

ஸ்ரீ அண்ணாத்துரையுடன் பரிச்சயம் செய்து கொள்ள எனக்கு வாய்ப்பு கிடைத்ததில்லை. ஆனால் அவர் நிகழ்த்தியுள்ள இரண்டு சொற்பொழிவுகள் புத்தக வடிவத்தில் எனக்குக் கிடைத்தன. ஒன்று கிறிஸ்தவக் கல்லூரியில் நிகழ்ந்த சொற்பொழிவின் பதிப்பு. தம்மைப் பற்றி பலர் தப்பபிப்ராயங்கள் கொண்டிருப்பதாக அதன் முன்னுரையில் அவர் சொல்கிறார். அவரைப்பற்றி நான் எழுதக் கூடியவை தப்பெண்ணங்களை அடிப்படையாகக் கொண்டனவாக இருக்கக் கூடும்.

"நாடும் ஏடும்" என்ற தலைப்புடன் ஸ்ரீ அண்ணா துரையவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் நிகழ்த்தி யுள்ள சொற்பொழிவின் அச்சுப் பதிப்பு ஒன்றை நான் படித்த அளவிலே எனக்கும் அவருக்கு மிடையே கருத்து ஒற்றுமைதான் அதிகம் என்றும், கருத்து வேற்றுமை குறைவு என்றும் எனக்குத் தென்பட்டது. ஆகையால் உடன்பாடுள்ள அம்சங்களைக் குறிப்பதை விட வேற்றுமைகளைக் குறிப்பிடுவது சுலபம் என்று எண்ணுகிறேன்.

இந்த வேற்றுமைகள், ஸ்ரீ அண்ணாத்துரையைத் தளபதியாகக் கொண்ட இயக்கத்தின் பிரசார முறை யையும், அதன் அரசியல் லட்சியத்தையும் பற்றியவை. அவரது கருத்துக்கள் பற்றி எனக்குத் தவறான தகவல் கள் இருக்கக் கூடுமாகையால், நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லிவிடுகிறேன்.

1. சமூக சீர்திருத்தப் பிரசாரத்தில் சிறிது துவேஷம் கிளப்பக்கூடிய வார்த்தைகளையும் உப யோகிக்கத்தான் வேண்டியிருக்கும். ஆனால் துவேஷ உணர்ச்சியே முக்கியமானதாகப்போய், சீர்திருத்த

லக்ஷியம் மழுங்கிவிடக்கூடும். யாரிடையே பிரசாரம் செய்யப்படுகிறதோ அவர்களது பக்குவத்துக் கேற்ற வாறு, பிரசாரகர்கள் தமது குரலையும் தொனியையும் அமைத்துக்கொண்டு, துவேஷத்தைத் தவிர்க்க முயல வேண்டும்.

2. "பழமைப்பித்து" ஒழிய வேண்டியதே. ஆனால் பார்ப்பனீயத் தொடர்புள்ள பழமை மட்டுமே அபாயமானது என்ற எண்ணம் ஏற்பட்டுவிடக்கூடாது.

3. திராவிடநாடு இந்திய யூனியனில் இருக்காமல் பிரிந்து போவது நம் வளர்ச்சிக்கு அவசியமுமில்லை; உதவியுமில்லை.

4. பிராம்மணர்கள் தமிழர்களல்ல என்று கருது வது நியாயமாகாது; அவசியமுமில்லை. சமூகப் பழக்க வழக்கங்களில் கெட்டவையென்று நாம் கருதக் கூடிய அம்சங்களுக்கு ஆதியில் யார் காரணஸ்தர்களாக இருப் பினும் சரி, இன்று பிராம்மணர்களும், அல்லாதாரும் அதில் பங்காளிகளே. ஆகையால் பிராம்மணர்கள் மீது மட்டும் துவேஷம் கொள்வது நியாயமல்ல.

5. பகுத்தறிவுக்குப் பகைகள் இரண்டு. (1) மூட பக்தி. (2) துவேஷம். இரண்டையும் கொல்ல வேண்டும். இரண்டாவது பகை, முதல் பகையைவிட தீமை விளைவிக்கக் கூடியது. ஒரு பகையை விரட்டும் போது மற்றொரு பகையை சிருஷ்டிக்கக் கூடாது.

6. "திராவிட இயக்கத்துக்கும்" 'முஸ்லிம் லீக்' இயக்கத்துக்குமிடையே சிலர் கற்பிக்கும் உறவு தவ ளைக்கும் எலிக்கு முள்ள உறவுபோன்றதாகும்

7. இந்நாட்டில் இப்போது முக்கியமான தேவை. பௌதிக, ரசாயன, இயந்திரக் கல்வி பரவுவது தான், அதற்கு எல்லோரது உதவியும் தேவை.

8. பெற்றோரின் ரத்தத்தால் ஒருவனது குணம், திறமை, முதலியவை எவ்வளவு தூரம் பிறவியிலேயே நிர்ணயிக்கப்படுகின்றன என்ற ஆராய்ச்சிகளை யெல்லாம் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக்கு விட்டு விட வேண்டும். பிறக்கும்போது உள்ள ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பிறந்தவன் வளரும் போது ஏற்றத் தாழ்வுகள் மறைவதில் பெற்றோர்கள் அக்கரை கொள்வர். சமுதாயம் இதே மனப்பான்மையுடனேயே வேலை செய்யவேண்டும். அதுவே உண்மையான "சமத்துவ சுயமரியாதை இயக்கம்" என நான் கருதுவேன்.

ஸ்ரீ அண்ணாத்துரையைப் பற்றி எழுதுவதற்குப் பதிலாக நான் என்னைப்பற்றி எழுதி விட்டேன்.

என் போன்றார்க்கும் ஸ்ரீ அண்ணாத்துரையின் திட்டத்தில் இடமிருக்குமாயின் - அவர் என் லக்ஷியத்தை ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளா விட்டாலும்-நாங்களிருவரும் பல ஆண்டுகளாக கூட்டுறவாகவே வேலை செய்து வருகிறோமென்றுதான் நான் நினைப்பேன்.

ஸ்ரீ அண்ணாத்துரையை "தளபதி" யாகக் கொண்டவர்கள் இதைப் படித்து விட்டு நான் கெட்ட எண்ணத்துடனோ "பார்ப்பன சூழ்ச்சி" யின் அம்சமாகவோ எழுதி யிருப்பதாகக் கருதலாம்; ஆனால் ஸ்ரீ அண்ணாதுரை அவ்வாறு கருதமாட்டார் என்று எண்ணியே இதை நான் எழுதியுள்ளேன். இவ்வாறு என்னை அறிமுகம் செய்து கொண்டு ஸ்ரீ அண்ணாத் துரைக்கு என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. என். சிவராமன்

ஆசிரியர், 'தினமணி' சென்னை.

பேச்சுக்கு ஒரு கலைஞன்

1. எந்தாய் நறு நாட்டின்
இன்னருமைச் சோதரர்கள்
நொந்தே யழிந்திருக்கும்
நோவிதனுக்கா யிரங்கிச்

2. சிந்தாத தேன் வார்க்கும்
சிந்தனைகள் செந்தமிழின்
கந்த மடை தான் திறந்து
சாய்ந்திடுவான் காணீரோ !

3. பேச்சுக்கு ஒரு கலைஞன்
பேசுங்கால் அதிரவரும்
ஏச்சுக்குப் பணிவறியா
எண்ணத்து ஒரு சிற்பி

4. விந்தையவன் உள்ளத்தே
விளைந்துவரும் எண்ணங்கள்
வந்தணையச் சொற்களெலாம்
வழி பார்த்து நின்றிருக்கும்

5. சொல்லின் சிலம்பசைத்தாற்
சோதி மணிப்பரல் சிதறும்
சொல்லிற் கருவுயிர்க்கும்
செம்பொருளிற் சொல்சிறக்கும்

6. பேச்சிற் கனலடிக்கும்
பெய்யுமழை காலிரங்கும்
வீச்சொன்றில் அறியாமை
வீழும் அலறித்துடிக்கும்

7. கூச்சத்தாற் புது நினைவு
கோணலெனக் காண்பாரும்
பேச்சுக் குழலிசையிற்
பேதுறுவார் அரவெனவே

8. காணுகின்ற காட்சிகளில்
கருதும் பொருள்களிலே
பேணுமுயர் சிந்தனைகள்
பேசவரும் சித்திரங்கள்

9. அளந்து வரும் சொற்கள்
ஆழ்ந்த பொருள், இருளூடே
பிளந்துவரும் மின்வெட்டுப்
பேச்சுக் கொரு புலவன்

10. அண்ணாவென்றே இளைஞர்
அன்போடரு கணைவார்
பண்புடைய சொல் ஒன்றுற்
பச்சையன்பு பாய்ச்சிடுவார்

11. சிந்தனையே மாந்தர்க்குச்
சிறப்பருள்வ தாதலினால்
சிந்தனையும் சொல்திறனும்
சேர்க்குமவர்ப் போற்றுகிறோம்.

திருலோக – சீதாராம்

ஆசிரியர், ' சிவாஜி ' திருச்சிராப்பள்ளி

இதோ ஒரு பெர்னுட்ஷா!

தற்காலத்து நாடகக் கலையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் ஆங்கிலம் படித்த மேதாவிகள் பெர்னுட்ஷாவையும், இப்ஸனையும் நினைத்து ஒரு குரல் அழுவது வழக்கம். "நாடகம், கீடகம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு பெர்னுட்ஷாவுக்கும் ஒரு இப்ஸனுக்கும் எங்கே போவது? திருடப்போக வேண்டியதுதான்!" என்று சொல்லுவார்கள். அப்படியெல்லாம் திருடவும் கிருடவும் போக வேண்டாம், தமிழ்நாடு நாடகாசிரியர் இல்லாமல் பாழ்த்துப் போகவில்லை என்று சமீபத்தில் தெரிந்து கொண்டேன்.

இரண்டு வாரத்திற்கு முன்பு திருச்சினுப்பள்ளியில் "ஓர் இரவு" என்னும் நாடகத்தைப் பார்த்தேன். பார்த்ததின் பயனுக, "இதோ ஒரு பெர்னுட்ஷா தமிழ் நாட்டில் இருக்கிருர்! இப்ஸனும் இருக்கிருர்! இன்னும் கால்ஸ்வொர்த்தியும்கூட இருக்கிருர்" என்று தோன்றியது.

நாடகக் கதையும், கதையை நாடகமாக அமைத்திருந்த பாணியும், கட்டுக்கோப்பும், காட்சிகளின் அமைப்பும், சம்பாஷணையும் அப்படி ஒன்றுக்கு மேல் ஒன்று சிறந்து விளங்கி என்னைத் திணற அடித்து விட்டன. நாடக முடிவில் என்னைப் பேசும்படி சொன்ன போது ஒன்றும் பேசத் தோன்றவில்லை. "நன்ருகயிருக்கிறது; மிக நன்ருயிருக்கிறது; அதிக நன்ருயிருக்கிறது!" என்று தான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருந்தது.

காங்கிரஸுக்கும், தேசீய விடுதலை இயக்கத்துக்கும் எதிர்க் கட்சிகள் என்று கருதப்படும் திராவிடக் கட்சி, சுயமரியாதைக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி ஆகியவற்றில் மிகச் சிறந்த எழுத்தாளரும், சொற்பொழிவாளரும் இருக்கிறார்கள்.

திராவிடக்கட்சி—சுயமரியாதைக்கட்சி — ஜஸ்டிஸ் கட்சிச் சொற்பொழிவாளர்களிலே தற்சமயம் தலை சிறந்து விளங்குகிறவர் திரு. சி. என். அண்ணாத்துரை அவர்கள். அவர் சொற்பொழிவுகள் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன். "சொற்பொழிவு என்றால் இது வல்லவா சொற்பொழிவு! தட்டுத்தடுமாறி சொற்களுக்குத் திண்டாடி நிற்பதையெல்லாம் சொற்பொழிவு என்கிறோமே!" என்று எண்ணத் தோன்றும்.

திரு. அண்ணாத்துரையின் குறிப்பிட்ட ஒரு சொற்பொழிவை நான் நேரில் கேட்க முடியாமற் போயிருந்தும் நண்பர் ஒருவர் அதைப் பற்றிக் கூறியது என் மனதில் பதிந்து போயிருக்கிறது. சென்ற ஆண்டின் இறுதியில் சென்னையில் தமிழ் எழுத்தாளர் மகாநாடு நடந்தது. அச்சமயம் நான் பம்பாயில் அகப்பட்டுக் கொண்டேன். ரயில் பாதையும் உடைபட்டுப் போயிருந்தபடியால் மகாநாட்டுக்கு வரமுடியவில்லை. திரும்பி வந்ததும் எழுத்தாளர் மகாநாட்டைப்பற்றி விசாரித்தேன். திரு. அண்ணாத்துரையின் பிரசங்கத்தைப் பற்றி ஒருவர் சொன்னார். நமது கிராமங்களிலுள்ள ஜனங்கள் அறிவு விளக்கம்பெறாமல் பழைய குருட்டு நம்பிக்கைகளிலே ஆழ்ந்து கிடப்பதைப் பற்றி திரு. அண்ணாத்துரை பேசினாராம். "மின்சார சக்தியைக் கண்டுபிடித்தவன் யார் என்று கிராமவாசியைக் கேளுங்கள். தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் எருமைக்கடா என்று தெரி

யும். நீராவி யந்திரத்தைக் கண்டுபிடித்தவன் யார் என்று கேளுங்கள். தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் எருமைக்கடா என்பது மட்டும் தெரியும். ரேடியத்தின் உபயோகம் என்னவென்று கேளுங்கள். தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் என்னவென்று கேட்டால், உடனே எருமைக்கடா என்று பதில் வரும் ....!'' இந்த மாதிரி யமனையும் எருமைக்கடாவை யும் வைத்துக் கொண்டே திரு. அண்ணாத்துரை மேற்படி மாநாட்டில் வெளுத்துக்கட்டி விட்டார் என்று, பிரசங்கத்தைக் கேட்ட நண்பர் சொன்னார். எழுத்தாளர் மகாநாட்டிலேயே திரு. அண்ணாத்துரை பிரசங்கந் தான் விசேஷ நிகழ்ச்சி என்றும் தெரிவித்தார்.

ஆனால், பேச்சும் பிரசங்கமும் சொற்பொழிவும் உடனுக்குடனே காற்றிலே போய்விடுகின்றன. கூட்டத்துக்கு வருகிற ஜனங்களில் நூற்றுக்கு, ஐம்பது பேர் ஒரு காதினால் வாங்கி, இன்னொரு காதினால் விட்டு விடுகிறார்கள்.

பேச்சைக் காட்டிலும் எழுத்து அதிக வலிமை யுடையது. ஆனால் பேச்சு எழுத்து எதுவும் நாடகத் துக்கு அருகிலும் வராது. ஜன சமூகத்தை உண்மை யில் சீர்திருத்த விரும்புவோன் கையாள வேண்டிய சாதனம் நாடகமேயாகும்.

நடிக்கக்கூடிய நாடகத்தை எழுதும் ஆற்றல் மிக வும் அரியது. அந்த ஆற்றல் திரு. அண்ணாத்துரையி டம் பூரணமாக அமைந்திருக்கிறது என்பதை "ஓர் இரவு'' நாடகத்தில் கண்டு மகிழ்ந்தேன்.

ரா. கிருஷ்ணமூர்த்தி
ஆசிரியர், 'கல்கி' சென்னை.

சீரிய கூரிய தீஞ்சொல்

"சீரிய கூரிய தீஞ்சொல்" என்பது கம்பன் வழங்கும் அழகிய தொடர்களுள் ஒன்று. இதனை அவன் வழங்கிய இடமும் காலமும் வேறு. ஆயினும் இதன் பொருளும் கருத்தும் அவ்விடம் காலம் முதலிய இயல்பு நோக்காது உண்மையும் அது நிறைந்த உரையும் இரண்டும் செறிந்த செயலும் ஒருங்கு நிகழும் இடங்கட்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளன. பல அறிஞர்கள் பால் உண்மையும் உரையும் செயலும் ஒளிருங்கால் சீர்மையும் கூர்மையும் இனிமையும் நிறைந்த சொற்கள் பிறந்து நல்ல பயன் விளைவிக்கின்றன. அவருள் அன்பர் திரு. அண்ணாத்துரையும் ஒருவர். அவர்பால் கூரிய சீரிய தீஞ்சொற்கள் பெருஞ்செல்வமாக நிலவுகின்றன. செல்வத்துப் பயன் ஈதல் என்பர். திரு. அண்ணாத்துரையும் பெருஞ்செல்வமாகிய இச்சொற்களை வரையாது நிரம்ப வழங்குகின்றார். தமிழிளஞ் செல்வத் தோன்றல்கள் அவற்றை விரைந்து மனங் கொள்ள ஏற்றுத் தொழில் கேட்கும் தமிழ் நலம் எய்துகின்றனர். இதனைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்து வரும் என் போன்றார் உள்ளத்தில், எதிர்காலத் தமிழகம் இனிய காட்சி வழங்கக் கண்டு இன்புறுகின்றனர்.

திரு. அண்ணாத்துரை சுயமரியாதைக்காரர் என்ற மட்டில் நில்லாது சுயமரியாதை சிறக்கவுடையர். சுயமரியாதை யில்லாதவர் நடைப்பிணமேயாவர். என்றாலும், உலகியல் வாழ்வுக்கு வேண்டும் செல்வம், பதவி, மக்களிடையே செல்வாக்கு முதலிய கூறுகளை எதிர் நோக்கித் தமது சுயமரியாதையை விற்றும், ஒற்றிவைத்தும், மறந்தும், இழந்தும் அரசியல், செல்வம் முதலிய உலகுகளில் உலவுபவர் பலர். சிலரே சுயமரியாதையைக் குறிக்கொண்டு நோக்குகின்றனர். திரு. அண்ணாத்துரை ஒரு நல்ல சுயமரியாதைக் காரராகக் காட்சி

வழங்கி, தூய சுயமரியாதை வீரராய், மான மாண்புடைய கட்டிளங் தமிழ்த் தோன்றலாய் விளங்குகின்ருர்.

இனி, இவ்வாறு நோக்காது, "மக்கள் கூட்டத்தைச் சிதைக்கும் சூறைக்காற்று; சமய வாழ்வைப் பறிக்கும் சண்டக் காய்ச்சல்; செல்வ வாழ்வைச் சீர் குலைக்கும் செந்தேள்; ஆரிய முறையை அருவருக்கும் அரக்கப்படை; பழைய இதிகாச புராணங்களை நிலைக்கவொட்டாது தூற்றும் கூற்றம்" என்றெல்லாம் கூறப்படும் கூற்றுக்களை ஏற்று நோக்குவோமாயின் திரு. அண்ணாத்துரையின் காட்சி, அக் கூற்றுக்களை வழங்கும் எண்ணத்தில் மண்ணள்ளிப் போட்டு நிற்கும் மாட்சி இன்புறுத்துகிறது.

திரு. அண்ணாத்துரை மக்கள் கூட்டத்தைச் சிதைக்கும் சூறைக் காற்றுத் தானு? சிலர், "என்றும் தாமே உயர்ந் தோங்கி வாழவேண்டும்; ஏனையாவரும் தம் பின்னும், அடியிலும் நின்று நிலவ வேண்டும், தமது தலைமையும் உயர்வும் ஏனையவருடைய அறியாமை யினையும் கீழ்மையினையும் அடிப்படையாகக்கொண்டு நிற்பதால், அறியாமையும் கீழ்மையும் ஏனையோரை விட்டு நீங்காதிருப்பதற்கேற்ற சூழ்ச்சியும் செயலும் செய்து கொண்டிருப்பதே அல்லும் பகலும் அயராது இருக்கும் தொழிலாகும். அதனை அறிவுடைய பலரும் அறிகின்றனர். ஆயினும் அறிந்ததனை யெடுத்துரைக்க அஞ்சிக் கோழைகளாய்க் குழைகின்றனர். திரு. அண்ணாத்துரை அறிஞருள் ஒருவராய் அறிகின்ருர்; அறிந்ததனை அஞ்சாது எடுத்துரைக்கின்ருர். "உயர்ந்தோர்" எனப்படுவோருடைய தலைமையும் உயர்வும் தளர்ந்து அசையத் தலைப்படுகின்றன. செம்மாந்திருந்த அவர்களிடையே தெருமரல் உண்டாகிறது. வாய் வெருவுகின்றனர்; "இந்த அண்ணாத்துரை மக்கள் கூட்டத்தைச் சிதைக்கும் சூறைக்காற்று" என்கின்றனர்.

திரு. அண்ணாத்துரை சமய வாழ்வைப் பழிக்கும் சண்டக் காய்ச்சலா? அண்ணாத்துரை சமயவுலகைக் காண்கின்றார். அது சூதும் வாதும் பொய்யும் புனை சுருட்டும் நிரம்பி மக்கள் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாய் இருப்பது புலனாகிறது. சமய நிலையங்கள் யாவும் "பொன்னும் பொருளும் போகமும் திருவும்" உணர்ந்து சாதியாசார குல கோத்திர வேற்றுமைகளை வளர்த்து மக்களை மாக்களாம் தன்மையில் அழுத்தி வைக்கும் திறம் நன்றாய்த் தெரிகிறது. அன்றாட வுண வுக்குத் திண்டாடி யுழைக்கும் ஏழை மக்கள் நாயும் பன்றியும் போல எச்சில் இலைகட்குத் தம்முன் போராடு வதை இச்சமய நிலையங்கள் கண்ணாரக் கண்டிருந்தும் காமக்களிக்கூடத்தில் கருத்திழந்து களிக்கின்றன.

இத்தகைய தீச்செயல்களைக் காணும் கண்பெற்ற காளையர் தலைவர் திரு. அண்ணாத்துரையும் காண்கின் றார். கண்கள் கலங்குகின்றார். சமய நிலையங்களின் இந்தக் காட்சி அவர் கருத்தில் பல எண்ணங்களை எழுப்புகின்றன. இவற்றின் உண்மைகளை எடுத்துத் தம் எண்ணமாகிய உலைக்களத்தில் இட்டுக் காய்ச்சி இனிய உருவாக்கி எடுத்துரைக்கின்றார். அவர் கூற்றில் யாரே தவறு காண முடியும்? "புண்வைத்து மூடார் பொதிந்து" என்றது அன்று குமரகுருபரர் அறவுரை யல்லவோ?

இனி ஒரு சாரார் திரு. அண்ணாத்துரை செல்வ வாழ்வைச் சீரழிக்கும் செந்தேள் என்கின்றனர். செல் வரது செல்வ வாழ்வு கண்டு சீரழிப்பது செந்தமிழர் செயலன்று; செல்வர் செல்வக் குறைவின்றிச் சீர்த்த வாழ்வு பெறல் வேண்டுமென்பது செல்வத் தமிழரது குறிக்கோள்களுள் ஒன்று. திரு. அண்ணாத்துரை இன்று நம் நாட்டுச் செல்வரது செல்வ வாழ்வைக் காண்கின் றார். அதன்கண் அச் செல்வம் சீரழியும் வகையில் சில செயல்கள் அவர்பால் காணப்படுகின்றன, அவரது

செல்வம் அவர்கட்கோ, அவர் இனத்தவர்க்கோ நன்மை விளைவிக்கும் துறையில் செலவழிக்கப்படுவதில்லை. தமிழ்ச் செல்வர்களின் செல்வம் தமிழர் கல்வி நலமோ, கைத்தொழில் நலமோ, மருத்துவ நலமோ கருதாது, உழைப்பவர் உழைக்க, அவரது உழைப்பை உறிஞ்சிச் சுரண்டியுண்ணும் ஒரு கூட்டத்தில் ஆதரவும் செல்வாக்கும் பாராட்டும் பெறுவதையே கருதி இயங்குகிறது. அக் கருத்தால் ஏழை யெளியவர்களுக்கு இரங்கும் மனஈரம் அவர் உள்ளத்தில் வற்றி விடுகிறது. அரசியல், கலை, வணிகம் முதலிய துறைகளில் பிற நாட்டவர்க்குத் தமிழகத்தை அடிமைப் படுத்தி வைத்தாலன்றித் தம் இனத்தின் சுரண்டல் தொழிலுக்கு ஆக்கமில்லை யென்று கண்டது இன்று செல்வாக்குச் சிறந்திருக்கும் ஒரு கூட்டம். அது தன்பாலுள்ள வெளியீட்டு வலியால் திரு. அண்ணாத்துரையை செல்வ வாழ்வைச் சீரழிக்கும் செந்தேள் என்று குறை கூறுவதாயிற்று. நடுநின்று நோக்கிய விடத்து, அண்ணாத்துரை, செல்வ வாழ்வைச் சீர்பெற வளர்க்கும் செந்தமிழ்ச் செல்வத் தோன்றல் என்பது சிறப்புற விளங்குகிறது.

இவ்வாறே ஆரிய நூல்கள் பலவும் தமிழகத்துத் தமிழர் சமுதாயத்தைப் பலப்பல சாதிகளாகப் பிரித்து ஒன்றொன்றிற்கும் உயர்வு தாழ்வு படைத்துக் காட்டித் தம்முள் ஒற்றுமையும் ஒருமையும் உண்டாகாதபடி நெடுங்காலத்துக்கு முன்பே பெருந் தீங்கைச் செய்தன. இவ் வேறுபாட்டமைப்பு, பொருளாதார அமைப்பென்னும், வேதநூன் முடியென்னும் பலபடக் கூறி, நீதிமன்றங்களில் "ஒரு குலத்துக்கொரு நீதி" வழங்குந் திறத்தைச் செய்தொழிந்தது. நீதி மன்றங்கள் செய்யும் தீர்ப்புக்களில் தமிழகத்துக் கொவ்வாத எத்தனையோ மிருதிகளும் சுருதிகளும் காட்டப் படுவதை வழக்கறிஞர்கண்டு வயிறு எரிகின்றார்கள். தீண்டாமை, சூத்திரத் தன்மை, உலக வாழ்வில் பற்றின்மை, பெண்

ணடிமை முதலிய கூறுகளால் தமிழினம் தாழ்த்தப் பட்டது. ஆரியர் ஒருவரே வணங்குதற்கும் வாழ் தற்கும் உரியரென்பது தோன்ற எழுத்தும் சொல்லும் பயன்படுத்தப்பட்டன. இவற்றை ஆராய்ந்து உரைக்கு முகத்தால் ஆரியத்தின் "மிலேச்சத் தன்மை"யை விளக்கியுரைக்கும் விறல்பற்றி. திரு. அண்ணாத்துரை ஆரிய முறையை அருவருக்கும் அரக்கப்படை எனப்படு கின்றார். ஆரியரும் தமிழும் ஒருங்கு நோக்கி ஆயு மிடத்து பிறர் கூறும் பழிப்புரை ஒருமருங்கு பற்றிய பொய்யுரையாய் ஒழிவது இனிது தெளிவாகிறது.

இறுதியாக, "இதிகாச புராணங்களைத் தூற்றும் கூற்றம்" என்பது ஆராயத்தகுவது. திரு. அண்ணாத் துரை இதிகாச புராணங்களை நன்கு ஆராய்ந்து கூறு வன கொள்ளத்தகுவனவே. இதிகாசங்களும் புரா ணங்களும் மக்கள் வாழ்வைச் செம்மை செய்யும் வகை யில் அமைந்து பாக்களினும் கடைப்பட்ட நிலைமை யடையச் செய்யாதபடி ஆக்கம் புரிவனவாயிருப்பின் அவற்றைப் புறங் கூறுதல் குற்றமேயாகும். இதிகாச புராணங்கள் இவ்வியல்புடையவாய் இருக்கின்றனவா என்பது அறிவுடையோர் அறிவால் அறியவேண்டுவ தொன்றாகும். இவைகள் மக்களிடத்தில் ஒரு கூட்டம் மட்டில் பசியும் வறுமையுமின்றி இன்பவாழ்வு வாழ் வதற்கு ஆக்கமும் அரணும் தருவனவாய் இருப்பதை அறியாதவர் அறிவில்லாதவரேயாவர். இவ் விதிகாச புராணங்களிற் காணப்படும் உண்மைகளை வடநாட்ட வரும் வேற்றுமொழிகளில் விரிய எழுதிக்காட்டி யிருக் கின்றனர். அவற்றுள் மிகச் சிறுபகுதியே திரு. அண் ணாத்துரையவர்களால் எளிய தமிழில் தமிழர் அறியக் கூறியது குற்றமாகக் கருதித் திரு. அண்ணாத்துரை இவ்வாறு தூற்றப்படுவது வருந்தத் தக்கதொன்று; இதனால் இவரைத் தூற்றுவோரது மடமையின் உண்மை நிலை உலகிற்கு விளக்க முறுகிறது.

இதிகாசப் புராணங்களைப் பழிக்கிருர்கள் எனத் தூற்றுவோருள் ஒரு துறையில் கண்மூடிக் கபோதி களாய்க் கயமை நெறியில் செல்கின்றனர். தமிழகத் துக் கோயில்கள் பலவும் தமிழரது தமிழ் உழைப்பும், தமிழ்ச் செல்வமும் கொண்டு எழுந்தனவாகும். அக் கோயில்களில் ஆண்டவனை வழிபடுவது முதலிய செயல்கள் தமிழில் நடப்பதில்லை. தமிழில் அருச்சனை செய்தற்கேற்ற வகையில் நாயன்மார்களும் ஆழ்வார் களும் பாடிய பாட்டுக்கள் மிகப்பல இருக்கவும் அவை இக்கோயில்களில் வழங்குவதில்லை. கயிலாயத்தில் சேரமான் பெருமான் பாடிய திருக்கயிலாய ஞானவுலா என்னும் தமிழ்நூல் இறைவனுக்குப் படித்துக் காட்டப்பட்டது. திருஞானசம்பந்தர் முதலியோர் பாட்டுக்களை ஆண்டவன் அருச்சனையாகவே கொண் டான். இப்படிப் புராணங்களும் பிறவும் சொல்லு கின்றன. இப்போது கயிலாய பாரம்பரை யென்ப வர்களும் புராணிகர்களும் வைதீகர்களும் தமிழ் நாட் டுக் கோயில்களில் தமிழில் அருச்சனை வழிபாடுகள் நடக்கவேண்டுமென நினைக்க அஞ்சுகின்ருர்கள்; சொல்லுதற்கு நடுங்குகிருர்கள். தங்கள் முன்னோர் களும், முன்னோர்க்கு முன்னோர்களும் வழிபட்ட தமிழ் முறையில் வழிபாடு செய்ய வகையற்றுத் திறமை யற்றுச் சொல்ல வலியற்றுச் சூடு சொரணையற்றுக் கிடக்கின்ருர்கள். பொன்னும் பொருளும் கொடுத்துக் கோயில் கட்டிக் குளம் வெட்டிப் பிறர்க்கும் பிறர் மொழிக்கும் அடிமைப்படுத்தித் தம்மைப் பெரும் பேதைகளாக்கிக் கொள்ளும் செல்வ மக்களையும், அவ ரைப் பின்பற்றி ஊமைகளாய்க் குருடர்களாய்ச் செவி டர்களாய்த் திரியும் ஏனைய மக்களையும் எண்ணி யெண்ணிப் புண்பட்ட மனத்தால் திரு. அண்ணுத் துரை போலும் இளைஞர்கள் சீரிய கூரிய தீஞ்சொற்க ளால் மக்களைத் தெருட்டுங் கடமை யுடையோரா கின்றனர்.

இந்நிலையில் அண்ணாத்துரை ஒருவர் போதாது; பல அண்ணாத்துரைகள் வேண்டும்; அவர்களுடைய பரந்த அறிவு மேலேகூறிய கோளாறுகளை ஆணி வேரோடு அகழ்ந்தெறிய முற்படவேண்டும்; அச் செயற்கு இன்றியமையாத அஞ்சாமையும் ஆண்மையும் செறிந்த அடல்மிக்க இளைஞர்கள் படை திரளவேண்டும்; அவர்கள் வாய்ப்பறையாக நாக்கடிப்பாக எல்லோருடைய செவியிலும் அறிவுக் கருத்துரைகள் சென்று முழங்கவேண்டும்; அதன் விளைவாக எழும் தமிழகம் தமிழரது தமிழகமாம்; தமிழ் மொழி தமிழரது தமிழ் மொழியாம்; தலைசிறந்த வாழ்வு தமிழரது வாழ்வாம்!

ஔவை சு. துரைசாமி
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்

அன்பர் அண்ணா

அன்பர் அண்ணாத்துரையை அறியாத தமிழர் தமிழ் நாட்டில் இருக்க முடியாது. ஆகவே, அவரைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டிய அவசியமற்ற பணியை நான் மேற்கொள்ள விரும்பவில்லை. அவ்வளவுக்கு அவர் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருக்கிறார். முதிய தமிழர்க்கெல்லாம் அவர் அன்பர்; இளந் தமிழர்க்கெல்லாம் அவர் அண்ணா. இதில் சந்தேகமேயில்லை. இன்றைய தமிழ் இளைஞர்களெல்லாம் அவரை அண்ணா என்றே அழைக்கும் அளவுக்கு அவர்மீது அன்புகொண்டிருக்கின்றனர். அந்த அன்பு மேலும் மேலும் வளருமேயன்றி குறையாது என்பது எனது துணிபு. இப்படி இளைஞர்களின் அன்புக்கு அவர் பாத்திரமானதற்குக் காரணம் அவரது அறிவு, ஆற்றல், நேர்மை இத்தகைய அரிய குணங்களேயாகும்.

பொதுவாக அறிவும் ஆற்றலும் உள்ள பலரிடத்தில் நல்ல தன்மைகளைக் காண்பது அரிது. ஆனால், அன்பர் அண்ணாவிடம் அந்தக் குறைபாட்டைக் காண முடியாது. அவர் களங்கமற்ற உள்ளத்தினர்; நேர்மையில் நாட்டமுள்ளவர். அவர் யாரையும் எதிரியாகக் கருதுவதில்லை. அன்பு உள்ளம் கொண்டவர். கருத்து வேற்றுமைகள் ஒருபுறமிருப்பினும், பொதுவாக மக்கள் நலம் என்பதில் எல்லோருடனும் ஒத்துழைக்க வேண்டும் என்னும் பரந்த நோக்க முடையவர். மேலும் அவர் ஒரு சிறந்த பேச்சாளர். எழுத்து வன்மையும் உடையவர். பேச ஆரம்பித்தால் கடல்மடை

திறந்ததுபோல்தான்! கேட்போர் உள்ளத்தை அப் படியே கொள்ளை கொண்டு விடுவார். எழுத்தும் அப் படியே, எதையும் அழகாகவும் பக்குவமாகவும் எழு துவார். ஆனால், அதில் புதைந்துள்ள வாதங்கள் ஆணித்தரமாகவே யிருக்கும். தமிழ், தமிழர், தமிழ் நாடு என்பதில் மிகுந்த ஆர்வமுடையவர். தமிழ் நாடு தான் அவருக்கு உயிர். இதைவிட வேறு பற்றுதல் எதுவுமே அவருக்கு இராது என்றுகூட நினைக்கிறேன். அவர் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல் லாமல் வேறொன்றும் அறியார்.

இப்படிப்பட்ட அண்ணாவின் புகழ் இன்றைத் தினம் இன்னும் அதிகமாக இருக்கவேண்டும். எனி னும் அவர் புகழ் அழியாத புகழ் என்பது எனது துணிபு.

அன்பர் அண்ணாவுடன் நான் அதிகமாக நெருங்கிப் பழகியதில்லை. அவரை இரண்டொரு முறை கண்டு பேசி யிருக்கிறேன். அப்படிப் பேசியதில், எங்களிருவ ரிடையே கொள்கை வேறுபாடு இருந்தபோதிலும் பொது நோக்கிலும், அன்பிலும், உணர்ச்சியிலும் எவ் வித பேதமும் என்னால் காணமுடியவில்லை. அண்ணா அவர்கள் "திராவிடநாடு திராவிடர்க்கே" என்ற கொள்கை உடையவராயினும், அவரது எண்ணத்தில் பதிந்து கிடப்பது தமிழ் நாடு தான். அவர் "தமிழ் நாடு தமிழருக்கே" என்பதில் இம்மியும் விட்டுக்கொடுப்பவ ரல்ல. அவருடைய கடைசித் துளி இரத்தத்தையும் தமிழ் நாட்டுக்காகத் தானம் செய்யத் தயாராக இருப்பார் என்பதில் எனக்குக் கொஞ்சமும் சந்தேகம் இல்லை. ஏனெனில், அவர் வீட்டு வாயிலில் "தமிழ் நாடு

தமிழருக்கே" என்ற வாக்கியம் பொறிக்கப்பட் டிருந் ததைக் கண்டேன். "தமிழ்நாடு தமிழருக்கே" என் பதை அவர் தாரக மந்திரமாகக் கொண்டிருக்கிறார். அந்தத் தமிழ்நாட்டிற்கெனவே அவர் உழைத்து வரு கிறார். தமிழர் வாழ, தமிழ்நாடு செழிக்க, அண்ணு அவர்கள் தம்மாலியன்றதை இனியும் செய்வார் என்று தமிழர் எதிர்பார்க்கலாம், அதற்காக அவரிடம் அழி யாத நம்பிக்கையும் கொண் டிருக்கலாம். அண்ணுவும் தமிழர் கொண்டிருக்கும் நம்பிக்கைக்குத் துரோகம் செய்ய மாட்டார் என்று நம்புகிறேன்.

பூ. ஆல்பின் பர்னுண்டஸ்
ஆசிரியர், 'தமிழ் மணி' சென்னை

கருத்துப் புரட்சி

இரத்தப் புரட்சியை விடக் கோடி மடங்கு உயர்ந்தது கருத்துப் புரட்சி. இரத்தப் புரட்சியால் மக்கள் வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்படலாம். ஆனால், அவர்கள் எண்ணம் திருந்தி விட்டதாகவோ, அறிவு வளர்ந்து விட்டதாகவோ சொல்ல முடியாது. கண் மூடி மக்களுக்கு வெறியையும் ஆத்திரத்தையும் ஊட்டினால் அவர்கள் இரத்தப் புரட்சி செய்ய முற்பட்டு விடுவார்கள். வெறியும் ஆத்திரமும் அடங்கியபிறகு தலைவர்கள் சிலர் தாங்கள் எண்ணிய நோக்கத்தை அடையலாம். பொது மக்களுக்கு வேறொரு வழியைக் காட்டி அதில் கண்மூடிகளாகவே அவர்களை அழைத்துச் செல்லலாம். இவ்வளவுதான் முடியும். அதுபோல் வெறியும் ஆத்திரமும் ஊட்டவல்ல வேறு தலைவர்கள் தோன்றி எதிர்த்து அழிவு வேலை செய்யத் தொடங்கினால், மறுபடியும் வேறொரு வகையில் இரத்தப் புரட்சியே விளையும்.

கருத்துப் புரட்சியில் இந்தத் தொல்லை இல்லை. மக்கள் எண்ணக் கற்றுக் கொள்வார்கள். எதையும் அறிவுடன் ஆராய்ந்து நோக்க முயல்வார்கள். கருத்துக்களில் புதுமை ஒளி வீசத் தொடங்கும். ஆட்டு மந்தை போல் தலைவர்களுக்குப் பின்னே கண்மூடிகளாகச் செல்லமாட்டார்கள். தலைவர்களை வழிபடாமல், அவர்களின் நோக்கங்களைப் போற்றித் தொண்டு செய்ய முற்படுவார்கள். வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் சீர்திருத்தம் ஓங்கும். வெறியும் ஆத்திரமும் அடங்கி அறிவும் ஆராய்ச்சியும் விளங்கும். 'இட்லர்'

கள் தோன்ற இடம் இல்லாமல் ஒழியும். ஒரு சிலர் சேர்ந்து நாடு முழுவதையும் ஆட்டிவைக்கும் கொடுமை அகலும்.

தோழர் அண்ணாத்துரை கருத்துப்புரட்சி செய்து வரும் வீரர். அவர் எழுதும் தலையங்கங்களிலும் பேசும் பேச்சுக்களிலும் புரட்சி வித்துக்கள் நிறைந்துள்ளன. அவை படிப்பவர் உள்ளத்திலும் கேட்பவர் நெஞ்சிலும் கருத்துப் புரட்சியை விதைத்து வளர்க்கின்றன.

தோழர் அண்ணாத்துரை கடல் போன்ற பெருங் கூட்டங்களில் பேசும் சொற்கொண்டல். அவருடைய சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டு கடல் ஒரே அமைதியாக இருக்கும். இடையிடையே கைதட்டும் ஆரவாரம் ஒன்றே அந்தத் தலைக் கடலிடையே கேட்கப்படும். மணிக்கணக்காகப் பேச்சு நிகழும். ஆனால், பேசுகின்றவரிடத்திலும் இரத்தக் கொதிப்பும் துடிப்பும் குறைவு. கேட்கின்றவர்களிடத்திலும் இரத்தக் கொதிப்பும் துடிப்பும் குறைவு. காரணம் என்ன? அவருடைய சொற்கள் அறிவாற்றல் வாய்ந்த சொற்கள்; புரட்சிக் கருத்துக்கள் பொதிந்த சொற்கள். ஆகையால் வெறும் இரத்தக்கொதிப்பையும் துடிப்பையும் உண்டாக்கி நின்று விடுவதில்லை; அவற்றைக் கடந்து சென்று மூளையைத் தாக்குகின்றன. அங்கிலேயில் அறிவு துடிக்கின்றது; எண்ணங்கள் கொதித்து எழுகின்றன. ஆகையால் அவருடைய சொற்பொழிவு கற்றோருக்கு அறிவு விருந்து ஆகின்றது. கல்லாதவர்க்கும் பகுத்தறிவுத் தூண்டுகோல் ஆகின்றது. கருத்து வேறுபாடு உடையவர்களுக்கும் ஆராய்ச்சி சுடர் விளக்கு ஆகின்றது.

வீரம் என்றால் வாள் ஏந்துவது என்றோ, தீப் பொறி பறக்க முழங்குவது என்றோ, கைக்கு எட்டிய வரையில் புடைப்பது என்றோ இருந்த காலம் மலையேறிவிட்டது. இனி வருங்காலத்தில் வீரம் என்றால் தன் உரிமையை இழக்காமல் பிறர் உரிமையைக் காப்பது என்றே பொருள்படும். உரிமையைப் பறிப்பது என்றால், ஒருவருடைய வீட்டையோ, வயலையோ, உணவையோ, உடையையோ பறிப்பது மட்டும் அல்ல. அவரைத் தாழ்வாக நினைப்பதும் உரிமைக்குக் கேடு செய்வதே ஆகும். ஆகையால் எதிர்கால வீர உலகத்தில், ஒத்த உரிமைக்கு அடிப்படையாக வேண்டியது ஒத்த மதிப்பே ஆகும். அந்த வீர உரிமை உணர்வால் தான் தோழர் அண்ணாத்துரை இன்று இளைஞர் உள்ளங்களைக் கவர்ந்துள்ளார். தன்னைவிடச் செல்வாக்கு உடையவர்களையோ செல்வம் பெற்றவர்களையோ கண்டு மதித்துப் போற்றுவதும் அவரிடம் காணமுடியாது. தன்னை விடச் செல்வம் செல்வாக்குக் குறைந்தவர்களையோ அறிவாற்றல் குறைந்தவர்களையோ கண்டு இகழ்ந்து ஒதுக்குவதும் அவரிடம் காண முடியாது. பிறப்பு, கல்வி, செல்வம், செல்வாக்கு இவை எல்லாவற்றையும் பொருட்படுத்தாமல், பொது மக்களை உரிமை கண்கொண்டு மதிக்கும் பெருந்தன்மை அவரிடம் உள்ளது. அதனால்தான் வெளிப்படையான உள்ளமும், அஞ்சாமை உணர்வும், புதுமைச் சிந்தனையும் அவருக்கு இயல்பாக அமைந்துள்ளன.

மு. வரதராசனார்
விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

நமது அண்ணா!

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் யோக சாலிகள்தான். தமிழென்றாலே இனிமை என்பது பொருள், தமிழில் சில வார்த்தைகளுக்கு இரும்பைக் காந்தம் இழுக்கும் தன்மைபோன்ற சக்தியுண்டு. இது கற்பனையல்ல; கடைந்தெடுத்த அநுபவ உண்மை.

'மண்டி' என்ற சாதாரண வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த வார்த்தையில் விசேஷமாக ஒரு சக்தியோ கவர்ச்சியோ இருப்பதாகத் தோன்றவில்லை யல்லவா? சிறந்த கலைஞர்கள் இவ்வார்த்தையைக் கையாண்டு எத்துணை ஆச்சரியகரமான அற்புத சக்தியை ஏற்படுத்தி விடுகிறார்களென்பதைப் பாருங்கள். பாரதியார் பாடலொன்றில்,

"நீலத்திரைக் கடலோரத்திலே-நின்று
நித்தந் தவஞ்செய் குமரி எல்லை-வட
மாலவன் குன்றம் இவற்றிடையே-புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு."

புகழ் மண்டிக் கிடக்கிறதாம். புகழானது கொழித்து, கொப்பளித்து, உறைந்து, ஊறித் ததும்பி, எங்கும் பரந்து நிரம்பிக் கிடக்கிறதாம். இந்த ஒரு வார்த்தை கவிதையின் ஜீவகளையைப் படம்பிடித்துப் படிப்போர் கருத்தைப் பரவசமாக்குகிறது. இன்னும் பல உதாரணங்கள் காட்டலாம்.

இதைப்போலவே அண்ணா என்ற சாதாரண வார்த்தைக்கு ஒரு மந்திர சக்தி, கவர்ச்சி, தனி அழகு, இன்பம், அன்பு, ஒழுக்கம்...எல்லாம் ஏற்பட்டு விட்டன. எப்படியென்று கேட்கிறீர்கள்? திராவிடத் தளபதி அண்ணாத்துரை என்ற பெயரோடு 'அண்ணா' சேர்ந்து மேலே சொன்ன மோகன சக்தியை யுண்டு பண்ணி விட்டது.

வயதில் குறைந்தவர்களும், மிகுந்தவர்களும், அண்ணுவென்றே நமது அண்ணுவை அழைக்கிருர்கள். திராவிடர்களிடையே 'அண்ணு' என்ருல் அண்ணுத் துரை அவர்கள்தான். எல்லோருக்கும் அண்ணுவாகும் தகுதி அவருக்குண்டு.

உருவத்தில் தமிழன்; உயர் குணத்தில் தமிழன்; அன்பு எனும் பண்பில தமிழன்; அடக்கத்தில் தமிழன்; ஆண்மையில் தமிழன் நமது அண்ணு. பரந்த நெற்றி, முறுக்கான மெல்லிய மீசை, விசாலமான முகம், கட்டு மஸ்தான உடற்கட்டு, பந்தயக் குதிரைபோன்ற விறு விறுப்பான நடை, பணிவான நடவடிக்கை, வீர உள் ளம் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர் தோழர் அண்ணுத்துரை.

திராவிடர் தலைநிமிர்ந்து முன்னேற வேண்டு மென்ற லக்ஷியத்தைக் கொண்டு அல்லும் பகலும் ஓயாது உழைத்து வருகிருர். துஞ்சும் பொழுதும் திராவிடர்த் தொண்டை மறப்பதில்லை. சுயமரியாதை இயக்கத்தின் தந்தையும் தலைவருமான ராமசாமிப் பெரியாருடனிருந்து முதலில் தொண்டு புரிந்தார். இப் போது சிலகாலமாக அவரிடமிருந்து சற்று விலகி நின்று அதே தொண்டை விடாது செய்து வருகிருர். பெரியாரிடமிருந்து விலகியதும் பல கேள்விகள் கிளம் பின. அதற்கு நமது அண்ணு ஆச்சரியமான முறையில், உண்மையை ஒளியாது பதில் சொன்ஞர். "பெரியார் தான் எனக்கு ஆணிவேர்; அதிலிருந்து பிரிந்த கிளை வேர்களிலொன்றுதான் நான்" என்ற ஆணித்தரமான பதில்தான் அது.

உண்மையை ஒருநாளும் ஒளிக்க மாட்டார். உழைப்பாளிகளிடம் அபார அன்பு கொண்டவர். அரசியல் விவகாரங்களின் ஆழத்தை நன்ருகக் கண் டறிந்தவர். அரசியல் கொள்கைகளுள் அபிப்பிராய பேதங்கள் கொண்டவரென்ருலும் அவைகளை அவ்வப்

போது எடுத்துச் சொல்லத் தயங்கமாட்டார். நாட்டு மக்கள் முன்னேற்றமே அண்ணுவின் கொள்கையே தவிர, சுயநலமோ, பதவி மோகமோ மருந்துக்குக்கூட அண்ணுவிடம் கிடையாது.

நமது அண்ணுவுக்கு அபூர்வமாக ஒரு பேறு கிடைத்திருப்பது திராவிட மக்களின் தனிப்பேறு என்று நிச்சயமாகச் சொல்லலாம். மேடைப் பிரசங்கத்தில் தமிழ் நாட்டில் தன்னிகரற்று விளங்குவதுபோல் எழுத்திலும் உயர்ந்த ஸ்தானத்தை இன்று நந்தமிழ் நாட்டில் வகிக்கிருர். அண்ணுவின் "திராவிட நாடு" பத்திரிகையிலுள்ள ஒவ்வொரு எழுத்திலும் ஜீவகளை ததும்பிப் படிப்போர் கருத்தை அப்படியே இழுத்து விடுகிறது. பத்திரிகையின் ஜீவாதாரமான தலையங்கங்கள் தனிப்பெருமை பெற்றவை. பிற்காலத் தமிழ் நாட்டில் பிரத்யேகமாக பாதுகாக்கப் படவேண்டிய தங்க இலக்கியங்கள் அவை என்று தாராளமாகச் சொல்லலாம்.

தமிழ் நாட்டில் எந்த மூலையிலாவது, தமிழர்களில் எவருக்காவது இடுக்கண் வந்துற்ற காலை, இழிவு ஏற்படும் வேளை பார்க்கவேண்டும் 'திராவிட நாட்'டை. ஆம், அண்ணுவின் பத்திரிகையைப் படிக்கவேண்டும். ஆஹா! வீறுகொண்ட தமிழன் உள்ளத்தில் அடித்தட்டிலிருந்து விறுவிறுப்பாகப் பொங்கிவரும் உணர்ச்சி வேகமும், உருக்கமும், தன்மானமும் நிறைந்த பதப் பிரயோகங்கள்! அடுக்கு மொழிகளின் பிரவாகப் பெருக்கு!

தமிழர் சமூகத்திலே இடையே வந்து புகுந்து அல்லற்படுத்தும் மூடப்பழக்க வழக்கங்களை வேரோடு கிள்ளியெறியும் பாதையில் அண்ணுவின் எழுத்தும் பேச்சும் நிரம்ப உதவி புரிந்து வந்திருக்கின்றன.

ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற அண்ணுத்துரை அவர்கள் பிறநாட்டு வரலாறுகளையும் அரசியல்

நிலைமைகளையும் அழுத்தந் திருத்தமாகப் படித்து அறிந்து, அந்த உண்மைகளை பத்திரிகை வாயிலாகவும், மேடைப் பேச்சு மூலமாகவும் தமிழ் நாட்டுக்கு அடிக்கடி எடுத்துச் சொல்வதில் தயங்குவதே கிடையாது. சாதாரணமாக அண்ணாவிடம் பேசிக் கொண்டிருப்பதில் பல விஷயங்களை நாம் அடைந்துப் பயன் பெறலாம். எதிரியின் மனம் திருப்தியடையும்படி சொல்வதில் அண்ணாவுக்கு தனி ஆற்றலுண்டு. சமீபத்தில் என்னிடம் 'தினசரி' ஆசிரியர், திருவாளர். சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் அண்ணாவைப் பற்றி அபிப்பிராயப் பட்டதையும் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டில் முதல்தரப் பேச்சாளரும் எழுத்தாளருமாக தோழர் அண்ணாத்துரை பிரகாசிக்கிறார் என்பதே தினசரி ஆசிரியரின் அபிப்பிராயம். அரசியல் கொள்கைகளில் மாறுபட்ட அபிப்பிராய முடையவர்களுக்குங்கூட தோழர் அண்ணாத்துரையிடம் அபார மதிப்புண்டு.

தோழர் அண்ணாத்துரையை நாம் அடைந்தது தனி பாக்கியம்தான். இன்னும் பலகாலம் நமது அண்ணா திடகாத்திரத்தோடு நம்மிடையே வாழ்ந்து. தமிழர் தொண்டும் தமிழ்த்தொண்டும் புரியவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன்,

சென்னை.

அண்ணாத்துரை ஓர் அறிஞர்

1934 ம் ஆண்டு என்று நினைக்கிறேன். சென்னை ஜார்ஜ்டவுன் ஏழுகிணறு வட்டத்தில் உள்ள ஒரு வீட்டு மேன்மாடியில் "காம்ரேட் லிட்டரரி பார்லிமெண்ட்" சார்பில் ஒரு பொதுக்கூட்டம். ஏதோ ஒரு விஷயம் பற்றி (அக்காலத்திய அரசியல் நிலை குறித்துத்தான் எனக் கருதுகிறேன்.) உரையாடல் நடந்துகொண்டிருக்கிறது. கோபாலரத்னம் பேசினார்; செங்கல்வராயன் சொற்பொழிவு ஆற்றினார்! பாலசுப்பிரமணியம் இன்னும் யார்யாரெல்லாமோ பிரசங்கஞ் செய்தார்கள். கடைசியாக வந்தார் ஐயா, ஆசாமி ஒருத்தர். ஐந்தடி இரண்டு அங்குலம் உயரம் இருக்கும். சம்புஷ்டியான சரீரம்; அறிவுத் தீட்சண்யத்தை வெளிப்படுத்தும் அகன்ற நெற்றி; ஆழ்ந்த சிந்தனையில் மிதக்கும் பெரிய கண்கள்; ஆட்களைக் கவரும் எடுப்பான மூக்கு. மீசை சரியாகக்கூட அரும்பவில்லை. "தோழர்களே!" என்றார் கூட்டத்தினரைப் பார்த்து. அவ்வளவுதான், அருவி பொழிவதைப்போல் அவர் வாசாமகோசரமாகப் பேசிய ஆங்கிலப் பேச்சு யாவரையும் பிரமிக்க வைத்தது. அவர் உள்ளத்திலிருந்து எழும் சந்தர்ப்ப உணர்ச்சிக்கேற்பச் சொற்கள் சரளமாக வெளிவந்துகொண்டிருந்தன. பொருள் பதிந்த அவர் பேச்சில் தெளிவு இருந்தது. அவர் எடுத்துக்கொண்ட கட்சியை நிலைநாட்டத் தர்க்கரீதியாகப் பேசினார்.

அவர் பேச்சில் இன்னொரு விசேஷமிருந்தது. அதாவது, அவர் பிறரை 'இமிடேட்' பண்ணாமல் சொந்த பாணியிலேயே பேசியதுதான். அக்காலத்தில் மேடையில் பேச விரும்பும் இளைஞர்கள்—அதிலும் கல்லூரி மாணவர்கள், மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், ஆற்காடு இராமசாமி முதலியார், சத்தியமூர்த்தி முதலிய பிரபல பேச்சாளர்களின் பாணியில் பேசிப்

பழகுவது வழக்கம். பேச்சை மட்டுமல்ல; பிரபல பேச்சாளர்கள் பேசும்போது செய்யும் அங்க சேஷ்டைகள், நடையுடை பாவனைகளையும் 'இமிடேட்' செய்பவர்கள் கூட இருந்தனர். ஆனால் ''அந்த ஆள்'' அவ்வாறு செய்தவரல்ல. அவர்தான் நம் அண்ணா.

அண்ணா எடுத்துப் பேசிய கட்சி எனக்குப் பிடிக்காவிட்டாலும் அவருடைய பேச்சுவன்மை, பேசிய முறை, தர்க்க வாதம் எல்லாம் என்னை முற்றும் கவர்ந்தன.

கல்லூரி விவாத சபைகளில் கலந்துபேசத் தொடங்கியபோதே அண்ணா ஆங்கிலத்தில்தான் பேசி வரலானார். பொதுவாழ்வில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கிய பின்னர்தான் தமிழிலும் பேசலானார். நாளடைவில் அநேகமாகத் தமிழிலேயே பேசக்கூடிய நிலை அவருக்கு வாய்த்துவிட்டது. தமிழ்நாட்டில் ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாகப் பேசக்கூடிய மிகச்சிலரில் அண்ணா குறிப்பிடத் தக்கவரானார்.

தமிழில் பேசக்கூடிய நிர்ப்பந்தம் அண்ணாவுக்கு ஏற்பட்டது 1936-ஆம் ஆண்டில், அவர் நகர சபைத் தேர்தலில் பெத்துநாய்க்கன் பேட்டைத் தொகுதிக்கு நின்றபோது தான். க்ராங்கிரஸ், சட்டசபைகளை மட்டுமல்லாமல் ஸ்தல ஸ்தாபனங்களையும் கைப்பற்ற வேண்டுமென்று தீவிரமாகத் தேர்தலில் ஈடுபட்ட காலம் அது.

அண்ணா அத்தேர்தலில் தோற்றுப்போனார். அதுவும் ஒருவிதத்தில் நல்லதாயிற்று, அவ்விதம் நேரவில்லையானால், அவர் ஊழல்கள் மலிந்த நகரசபை வேலைக்கிடையேதான் உழன்று கொண்டிருப்பார். அவருடைய நுண்ணறிவும் பேராற்றலும் எல்லாம் அச்சிறு விஷயத்திலேயே வியர்த்தமாயிருக்கும். அவர் இன்றிருக்கும் நிலையையே தான் விரும்பவில்லையென்றால், லஞ்சலாவண்யங்களுக்குப் பிறப்பிடமா

யிருக்கும் நகரசபைக்குள் வளையவருவதை எப்படி விரும்பமுடியும்?

அண்ணுபோன்ற அறிவாளிகள் எல்லாம் கலைஞர்கள் பத்திரிகாசிரியர்களைப்போல, கட்சிப்பற்றற்றவர்களாய் இருக்கவேண்டும். எந்தக் கட்சியின் சார்பிலும் இல்லாமல் நடுநிலையாளராய் இருக்கவேண்டும், அவர்கள் சிறுசிறு கட்சிகளுக்குள் தங்களைச் சிக்கவைத்துக் கொள்ளக்கூடாது, தங்கள் அறிவாற்றல்களை வரம்பிட்டுத் தடுத்து விடக்கூடாது என்று எண்ணுபவன் நான். அவர்கள் அறிவும் ஆற்றலும் நாட்டு மக்கள் அனைவருக்கும் பயன் படவேண்டும் என்பது என் அவா. கேவலம் பட்டம் பதவிகளில் மட்டும் நாட்டங்கொள்ளாமல் தங்கள் நலம், தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தோர் நலங்களைமட்டும் கருத்தில் கொண்டு உழைக்காமல் ஆர். கே. ஷண்முகம் செட்டியார், ஏ. ராமசாமி முதலியார் போன்ருரெல்லாம் தங்களின் அறிவு ஆற்றல்களைத் தாய் நாட்டின் உயர்வுக்காகவும், சகோதரமக்களின் நல்வாழ்வுக்காகவும் பயன் படுத்த வேண்டும்; அவ்வகையில் அவர்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் பொதுவுடமையாக வேண்டும் என்று நான் அடிக்கடி சொல்லியும் எழுதியும் வந்திருக்கிறேன். அப்பேரறிஞர்கள் கூட்டத்தில் அண்ணுவும் சேர்த்து மதிக்கத்தக்கவர் என நான் எண்ணுவதால் அவர் தம் அறிவாற்றல்களைத் தமிழகத்தின் உயர்வுக்காகவும், தமிழ் மக்களின் உயர்வுக்காகவும் பயன்படுத்தவேண்டும் என்று இச்சமயத்தில் நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

அண்ணு கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவராயிருந்து நாட்டின் முன்னேற்றத்துக்காகவும், சமுதாயத்தின் உயர்வுக்காகவுமான ஆக்கவேலையில் ஈடுபட்டு, அவர் பெயர் தமிழகமெங்கும் ஒலிக்கவேண்டும், அவர் தமிழ் மக்கள் அனைவர் உள்ளங்களிலும் வீற்றிருக்க வேண்டும். அவருக்கு ஏற்படவேண்டிய தகுதி இன்னும் ஏற்படாமல், அவருக்குக் கிடைத்திருக்கவேண்

டிய பெரும்புகழ் மக்களால் இன்னும் தரப்படாமல் இருப்பதற்கு அவர் இதுவரை மேற்கொண்டிருந்த அரசியல் கொள்கையே காரணமாகும் என்ருல் மிகை யாகாது.

அண்ணு கஞ்சனெருவனின் மாளிகைத் தோட்டத்தில் காய்க்கும் எட்டிமரமாயிருக்கக் கூடாது. நகரின் நடுவேயுள்ள சோலையில் ஓங்கி வளர்ந்திருக்கும் மாம்பழ மரமா யிருக்கவேண்டும். ஈரநெஞ்சமில்லாதவனெருவன் வீட்டுச் சிறு கிணருயிருக்கக்கூடாது. ஊர் மத்தியில் பளிங்குபோல் விளங்கும் தடாகமாயிருக்கவேண்டும். ஆம்! அண்ணு ஒரு கட்சியின் பிரசாரகராக மட்டுமல்லாமல் தமிழகத்துக்கும் தமிழ் மக்கள் அனைவருக்கும் உரியவராகவேண்டும்; தமிழ் உலகம் அவாவும் பேரறிவாளராகவேண்டும் என்றுதான் சொல்கிறேன். என் போன்ருர் அண்ணுத்துரையிடம் இவ்விதப் பெருநிலையைப் — பெருமாறுதலைத்தான் — எதிர்பார்க்கிருர்கள். வீழ்ச்சி பெற்றுள்ள தமிழகத்தை வீறு கொள்ளச் செய்ய அண்ணுத்துரை முன்வருவாராக!

நாரண-துரைக்கண்ணன்

ஆசிரியர் 'பிரசண்ட விகடன்' சென்னை

தமிழ் தந்த தளபதி

'அரசியலுக்கு ஆங்கிலம் தெரிய வேண்டும். ஆங்கிலம் தெரிந்தவர்தான் மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்க முன்வருவார்' என்ற எண்ணத்தைத் தகர்த் தெறிந்தார் பெரியார் ஈ. வே. ரா. ஆங்கிலம் தெரியாதவர்தான் தமிழில் பேச்சாளராக முயல்வர். அரசியல் கருத்துக்களையும் ஆங்கிலத்தில் கூறுவது போலத் தமிழில் கூற முடியாது என்ற எண்ணத்தை இருந்தவிடம் தெரியாமல் செய்து விட்டவர் அறிஞர் தளபதி அண்ணாத்துரை.

ஆங்கில இலக்கியத்தில் காணாத புதுக் கருத்துக்கள், ஆங்கிலத்தில் ஆங்கிலம் படித்தவர் கூறத் துணியாத, கூறி விளக்க முடியாத கருத்துக்களைக்கூட நம் அண்ணாவின் செந்தமிழ் நா கூறி விளக்கி வீடும்.

தளபதி அண்ணாத்துரை ஆங்கிலத்தில் பேசுவதைக் கேட்போர் ஆங்கிலத்தில் இப்படிச் சொற்களை அளந்து வீசுபவர் தமிழில் இப்படிப் பேசமுடியாது என்றுதான் எண்ணுவர். ஆனால் தமிழில் பேசினாலோ இந்தச் செந்தமிழ்ச் சிங்கம் ஆங்கிலக் காட்டிற்கும் போகுமா என எண்ணுவர்.

தன் நாடு, தன் மொழி, தன் இனம் இதுவெனக் கூறக்கூசி அவ்வடிமைத் தனத்தை மறைக்க, அவற்றை மதியாத அயலவருடன் வேண்டா விருந்தினராய்க் கலந்து அவர்நாடு, அவர்மொழி, அவர் இனம் பேணும் கற்றறிந்த தமிழனை அவர் அவனது பிறப்புரிமை அறியும்படி செய்தார். தன் நாடு, தன் மொழி, தன் இனம் ஆகியவற்றுக்குள்ளேயே அடைபட்டு நின்று, அவ்வடிமைத்தன வாழ்வையே தன் பரம்பரை வாழ்வென நினைத்துக் கிணற்றுத் தவளை வாழ்வு வாழ்ந்த பழைய புலவர் கூட்டத்திற்கு அவர் உலக அறிவும் உலகத்தில்

ஒட்டி வாழும் முறையும் உலக வாழ்க்கைப் போராட்ட முறைகளும் கற்றுத் தந்தார்.

கொள்கைகளில் அண்ணாவுடன் முற்றிலும் ஒத்து வராதவர்களும் அவர் திறமையை அறிந்துள்ளனர். அவர் முற்போக்கில் உடன் செல்ல முடியாத அரை குறை முற்போக்காளரும் தம் போக்கிலும் அவர் போக்கு வெற்றி தருகிறது என்பதைக் காண்கின்றனர்.

அண்ணாவின் சிறப்புமிக்க துறை பேச்சா எழுத்தா என்று எவரும் கூற முடியாதபடி இரண்டிலும் அத் துறையின் முழு உருவாய் அமைந்து நிற்கிறார். பத்தி ரிகை, இலக்கிய, அரசியல் கட்டுரைகள், கதை, நாட கம் ஆகிய எத்துறையிலும் அவர் கை முதன்மை யுடையதாகவே விளங்குகிறது. கவிதை ஒன்றில்தான் அவர் புலவருடன் அல்லது கவிஞருடன் போட்டியிடத் தொடங்கவில்லை. அத்துறைக்குப் பாரதிதாசன் அவர் களே போதும் என்ற எண்ணத்தினால் போலும்!

எளிய உடை, எளிய நடை, எளிய தோற்றம் ஆகியவை ஒரு நாகரீகப் பாசாங்காக இக்காலத்திற் கொள்ளப்படுவதுண்டு. எளிமைக்கு எளிமை இன்ன தென எடுத்துக் காட்டுபவர் அண்ணாத்துரை. பொது வாழ்வுக்கு ஒரு கொள்கை, தனி வாழ்வில் வேறொரு நடை இவ்வேறுபாடு அவர் வாழ்வில் கிடையாது. வாய்மை வகையிலோ, தாம் எண்ணுவதைக் கூறும் வாய்மை யல்லாமல், அதனைப் பிறர்க்கு விளங்க வைத் தல், பிறர் எண்ணுவதை அவர்கள் விளக்க முடியா முறையில் விளக்கிக் காட்டல் ஆகிய இருவகைக் கலை ஞன் வாய்மையும் அவரிடத்தில் காணலாம்.

அரசியலில், சீர்திருத்தத்தில் முனைந்துள்ளவர்கள் இலக்கியச் சுவையறியார் என்றெண்ணி அண்ணாவிடம் சிக்கினால், நேரிடையேவரின் புன்னகையுடன் அவர் வீசும் சொல்லம்புகளும் மறைமுகமாக கிற்பின் அவர்

எழுது கோலினின்று எழும் எழுத்தம்புகளும் அவர்கள் கலைப்பண்பின்மையை அவர்களுக்கே விளக்கிவிடும்.

அண்ணு தமிழ் தந்த, தமிழகம் தந்த தளபதி. தமிழகமும் உலகமும் அச்செல்வத்தை முற்றிலும் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தமிழ் நாளிதழ் ஒன்றும் ஆங்கில நாளிதழ் ஒன்றும் அவரிடம் தரப்படுமாயின், தமிழின் புகழுக்கு அவற்றை இரு சிறகுகளாக்கி, வடநாடு மட்டுமென்ன, மலர்தலை உலகெங்கும் அதனைப் பரப்புவர் என்பது உறுதி.

வாழ்க தளபதி! வாழ்க தமிழகம்!!

கா. அப்பாதுரைப் பிள்ளை
'இன்பர்மேஷன் பீரோ' சென்னை.

நிகரற்ற பேச்சாளர்

நண்பர் அண்ணுத்துரை அவர்களுடைய பேச்சை முதன் முதலாவதாக சென்ற வருஷம் டிசம்பர் மாதம் சென்னையில் நடந்த தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் தான் கேட்டேன். அதற்குமுன் பல வருஷங்களாக 'திராவிட நாடு' பத்திரிகையில் அவர் எழுத்துக்களைப் படித்து அவைகளின் நடை அழகில் இலயித்து வந்திருக்கிறேன்.

1944–ல் கோவையில் நடந்த எழுத்தாளர் மகா நாட்டில் ஒரு நண்பர் தமிழில் வீரச் சொற்கள் போதிய அளவு இல்லை என்று கூறினர். அதைப்பற்றி காரா சாரமான விவாதம் நடந்தது. அச்சமயம் நான் பேசுகையில் "தோழர் அண்ணுத்துரையின் கட்டுரைகளைப் படித்தவர்கள் தமிழில் வீரச் சொற்கள் கிடையாது எனக் கூறமாட்டார்கள்'' என்று பேசினேன்.

நேரில் அண்ணுத்துரை அவர்கள் பேசக் கேட்டவுடன் தமிழ்மொழியின் பூரண அழகும் நேரில் காட்சி அளித்ததுபோல் நினைப்பு ஏற்பட்டது. சொற்களுக்காக அவர் காத்திருப்பதில்லை. அவைகள் அண்ணுத்துரையின் அதிகாரத்துக் குட்பட்டு நிற்கின்றன. காவிரியாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டவுடன் அது செல்லும் அமைதியைப் பார்த்தால் அதன் அழகை அனுபவிக்க முடியும். அண்ணுத்துரையின் சொற்பொழிவின் ஓட்டம் காவிரியாற்றின் வெள்ளப் பெருக்கின் பெருமையை ஞாபக மூட்டுகிறது.

அவர் பேசுகையில் சற்று கண்ணைமூடிக்கொண்டால், இன்னிசையைப் பருகும் இன்ப உணர்ச்சி ஏற்

படுகிறது. அவர் பேச்சின் ஓசை அழகில் மனதைப் பறிகொடுத்து அவர் கருத்துக்கள் யாது என்று ஆராயும் ஆற்றலை இழந்து அவர் சொல்லழகுக்கு அடிமையாகி விடுகிறோம்.

தோழர் அண்ணாத்துரை நிகரற்ற சொற்பொழிவாளர். அவர் நீடூழி வாழ்க!

ரா. நாராயண அய்யங்கார்
ஆசிரியர், 'ஹிந்துஸ்தான்' சென்னை

சொற் செல்வர்

உயர்திரு. அண்ணாத்துரையவர்கள் என் அரிய நண்பர், அறிவுக் கடல், கற்பனைக் களஞ்சியம், கலா வல்லுநர், ஒப்புயர்வற்ற எழுத்தோவியர். இது மட்டுமா? நல்ல நடிகருங் கூட!

தமிழ் நாட்டின் முன்னேற்றம் கருதிப் பெரிதும் பாடுபட்டு வருகிறார். தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறந்த ஆராய்ச்சியுள்ளவர். "ஓர் இரவு", "வேலைக் காரி" முதலியவை இவரது எழுத்தோவியச் சிறப்பை யும், "சந்திரோதயம்" போன்றவை இவரது நடிப்புச் சிறப்பையும் நன்கு எடுத்துக் காட்டுவன ஆகும்.

நண்பர் நகைச்சுவை அரசு, உயர்திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்களும், நானும் சிறையிலிருந்த நாட் களில், நாங்கள் குற்றவாளிகள் அல்லவென்றும், நாங் கள் அவசியம் விடுதலை பெறவேண்டுமென்றும், தமிழ் நாட்டின் பல்வேறுநகரங்களிலும் பேசிப்பேசி மக்கட்கு உண்மையை எடுத்துரைத்தார். அன்னார்க்கு என் நன்றியை சமர்ப்பிப்பதோடல்லாமல் நான் என்றும் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அண்ணா, உள்ளதை உள்ளவாறே எடுத் துரைக்கும் உள்ளம் படைத்தவர். கேட்பாரைப் பிணிக்க வைக்கும் சொற் செல்வர். எப்பொருளையும் அமைதியாக, ஆனால் ஆணித்தரமாக வாதமிடுவதில் அவருக்கு அவரையேதான் ஒப்பிடலாம். அத்தகைய அறிஞருக்குத் தமிழ்நாடு என்றும் கடமைப்பட் டுள்ளது.

வாழ்க அண்ணா!

இசைவாணர் எம். கே. தியாகராஜ பாகவதர்,
திருச்சிராப்பள்ளி.

தீஞ்சுவைக்கனி

திரு. அண்ணுத்துரையவர்களுடன் நெருங்கிப் பழகி அவர்களை நன்கறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. அவர்களைப்பற்றி நான் அறிந்ததெல்லாம் அவர்களைப் பொதுமேடைகளில் கண்ட பொழுதுதான். என் மனத்தெழுந்த இரு உணர்ச்சிகளை மட்டும் இச்சமயத்தில் உரிமைகொண்டு உரைக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் பழங்காலத்திலிருந்து தமிழன் ஒருவனுடைய பெருமையை யாரும் எளிதில் ஒப்புக்கொள்வதில்லை. பல தடைகளையும் இடையூறுகளையும் துன்பங்களையும் எதிர்த்து செயற்கரிய செய்து வென்ற பெரியார்களை மட்டிலுமே மக்கள் பாராட்டினர். வள்ளுவர் குறளையும் கம்பன் காவியத்தையும் பற்றிய கதைகள் தமிழர் மனப்போங்கிற்குத் தகுந்த சான்றுகள். இடையே எதிர்த்துவரும் தடைகளும் ஊறுகளும் ஒருவனது ஊக்கத்தையும் முயற்சியையும் தூண்டவும், பின்னர் தகவுடையார் சீர்தூக்கி ஆய்ந்து தேர்ந்து பாராட்டும் முறை அவனது பெருமையை வெளிப்படுத்தவும் இன்றியமையாத கருவிகளே. வாழ்க்கையைப் பந்தய ஓட்டமாகவோ, போராட்டமாகவோ கருதினுலும், அதில் ஈடுபட்டிருப்பவர்களைப் பார்த்திருக்கும் பிற மக்கள் அவனுக்கு உதவி ஊக்குவது ஒழுங்கும் நேர்மையுமாகும். ஆனுல் வேண்டுமென்றே ஓடுகிறவனைக் கூச்சலிட்டுப் பழித்தோ அல்லது காலைப் பிடித்திழுத்தோ, தளரச் செய்வது கயமையாகும். இத்தகைய சிறுமைக்குணம் தமிழ் நாட்டை விட்டுப் பிற தீமைகளைப் போன்று விரைவில் நீங்கி, அண்ணுத்துரை போன்றவர்களின் பெருமையும் வாழ்க்கையும் வளம் பெற்ருேங்க விரும்புகிறேன்.

மற்றொன்று, நல்ல பேச்சாளர்களை யாவரும் போற்றுதல் இயற்கை. ஆனால் சில திறமையான பேச்சாளர்களைத் தனித்துப் பாராட்டும் தனித் தனிக் கூட்டத்தினர் தமது உள்ளத்தைக் கவர்ந்து தனியிடம் பெற்ற பெரியார், நிகழ்ச்சிகளின் இடையே வந்தால் ஆரவாரம் செய்தும் கைதட்டியும், 'ஜே' போட்டும் அவர்களை பேசுவதற்கு உடனே அழைத்தும். கூட்டத்தில் அமைதியின்மையும், பேசிக் கொண்டிருக்கும் மற்றவருக்கு அவமதிப்பும் தேடுகின்றனர். இவர்களுடைய இத்தகைய செய்கையால் வருகிற பெரியார்பாலும் சிலருக்கு வேண்டாவகையில் ஒரு சிறிது சலிப்புத் தட்டக் கூடிய நிலை ஏற்படுகிறது. அண்ணாத்துரையவர்கள் விரும்புகிறபடி பல கட்சிகளைச் சேர்ந்த பெரியார்களும் ஒரே அரங்கில் கூடித் தங்கள் கருத்துக்களைத் தாராளமாகச் சொல்லி, உண்மை காண்பதற்கு இச் செயல்கள் ஊறு செய்கின்றன. பேச்சுரிமைக்கும் குடியாட்சிக்கும் இம்மனப் பான்மை பேராபத்து, தமிழ் நாட்டில் தலை காட்டுகின்ற இத்தீமையை எல்லோரும் முளையிலே கிள்ளி எறிய வேண்டும்.

புதிய அரிய கருத்துக்களை, கேட்பவர்களைப் பிணித்துக் கேளாரும் வியந்து புகழுமாறு, உயரிய சொற்களையடுக்கி, ஓவியம் போல் தீட்டும் அண்ணாத்துரையவர்களின் திறமை கடல் மடை திறந்தன்னது. அவர் அறிவியக்கப் பண்ணையிலே முளைத் தெழுந்த திராவிடக் கழக மரத்திலே பூத்துக் காய்த்துப் பழுத்து உதிர்ந்த தீஞ்சுவைக்கனி. அவரது பெருமையும் புகழும் ஓங்குக!

சோ. இலக்ஷ்மிரதன்,
சென்னை.

அறிஞர் அண்ணாதுரை

அறிஞர் அண்ணாதுரை அவர்களைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் "அவர் ஒரு சிறந்த பேச்சாளரும் எழுத்தாளருமாவார்" என்று சுருக்கமாகக் கூறி விடலாம். ஆனால் அப்படிச் சொல்லி விட்டால் 'அறிஞர்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற நமது அண்ணாதுரை அவர்களைப்பற்றிக் கூறியதாகாது.

ஒருவர் சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் இருக்கவேண்டுமானால், அதற்கு அடிப்படையாக வேண்டப்படுவது நல்ல கருத்துக்களே யாகும், கருத்தில்லாவிடில் எழுத்தும் இல்லை, பேச்சும் இல்லை. கருத்துக்கள் எவ்வளவுக் கெவ்வளவு அழகாகவும் அருமையாகவும் இருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு பேச்சு எழுத்து முதலியன செம்மையாக அமையும். அறிஞர் அண்ணாதுரை அவர்களுடைய பேச்சைக் கேட்க ஆயிரக் கணக்கில் மக்கள் கூடுகின்றனர்; மணிக் கணக்கில் பொறுமையோடிருந்து கேட்கின்றனர்! அங்ஙனமே அவர் எழுதிய ஏடுகளை ஆவலுடன் படிக்க முந்துகின்றனர். இது ஏன்? அண்ணா ஒரு சிறந்த சிந்தனைச் சிற்பி! நல்ல கருத்தாளர்; அவரது கருத்துக்கள் காலத்துக்கேற்றவை; மக்களுடைய அறிவுப் பசிக்கு ஏற்ற உணவளிக்கக் கூடியவை. அங்ஙனமே அவரது கருத்தோவியங்கள் எழுத்தோவியங்களாக ஏடுகளில் பொறிக்கப்படுவது கண்டு மகிழ்ச்சி யுறுகின்றனர் மக்கள், இவைதான் அண்ணா அவர்களின் சிறப்புக்குக் காரணம். எனவே அறிஞர் அண்ணாதுரை அவர்களை ஒரு நல்ல எழுத்தாளர் பேச்சாளர் என்பதை விட அவர் ஒரு சிறந்த கருத்தாளர் என்பதே சாலப் பொருந்துவதாகும்.

மேலும் அண்ணா அவர்கள், தமது சீரிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைக்கும் திறமையே ஒரு

தனி ரகம். நாமும் எத்தனையோ பேச்சாளர்களுடைய பேச்சுகளைக் கேட்கிறோம்; எத்தனையோ எழுத்தாளர்களுடைய எழுத்துக்களைப் படிக்கிறோம். ஆனால் அவை ஒன்றேனும் நமது இதயத்தைத் தடவுவதில்லை. ஏதோ கேட்கிறோம், படிக்கிறோம் என்பதோடு சரி. ஆனால் அண்ணா அவர்களுடைய பேச்சும் எழுத்தும் அப்படிப்பட்டவையல்ல; அவை நமது சிந்தனைக்கு வேலை கொடுத்து வருகின்றன. எதிர் கட்சித் தோழர்களும் "அண்ணாதுரை சொல்லுவதும் ஞாயம் தான்..." என்று சொல்லிக்கொண்டே போவதை நாம் பலகால் கேட்டதுண்டு. மாறுபட்ட கருத்துடையோர் மனதையும் மாற்றச் செய்யும் மகத்தான சக்தி வாய்ந்தது அண்ணா அவர்களுடைய பேச்சு. எழுத்தும் அங்ஙனமே.

நன்றாகப் பேசவும் எழுதவும் கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கும் அண்ணா அவர்கள் மனது வைத்தால் எதிர்க் கட்சியினரைத் தாக்கிப் பேசவும், எழுதவும் முடியும். ஆனால் அவர் அதனைச் செய்பவரல்ல; இது தான் அவரிடம் காணப்படும் பெருந்தன்மை. நறுக்காகவும், நாகரீகமான முறையிலும், வெட்டவேண்டியவற்றை வெட்டியும், ஒட்டவேண்டிய இடத்தில் ஒட்டியும் பேசவல்லவர் அவர். எதையும் திட்டமாக வெட்டிப்பேசி, அதில் வெற்றிகாண வேண்டும் என்ற சிறிய மனப்பான்மை அவரிடம் கிடையாது. எதிர்க் கட்சியினர் என்பதற்காக யாரையும் தாக்கிப் பேசவும் மாட்டார். அப்படித் தாக்கிப் பேசினாலும் அது தாக்குதலாகத் தோன்றாது.

அண்ணா அவர்களுடைய பேச்சு வலையில் சிக்கிய இளைஞர் எண்ணற்றவர். அங்ஙனமே அவரது கருத்தோவியங்களால் கவரப்பட்ட மாணவர் ஏராளம், இன்றையத்தினம் எந்த அரசியல் கட்சியையும் விட திராவிடர் கழகத்திடம் மாத்திரம் தமிழ் நாட்டு இளைஞர்களும் மாணவர்களும் அதிகமான பற்று கொண்

டிருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் அறிஞர் அண்ணாதுரைதான். கழகக் கொள்கைகள் கல்லூரிகளைப் படையெடுத்து மாணவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்படி செய்தவர் அவரே. அது மட்டுமின்றி சுயமரியாதை இயக்கம் என்னும் சுரங்கத் தங்கத்தை வெளியில் கொணர்ந்து அதன் மீதிருந்த மாசுகளைத் துடைத்து சுத்தத் தங்கமாக்கியவரும் அவர்தான். சுயமரியாதை இயக்கம் ஏதோ காலிகளின் கூட்டம் என்று மக்களிடையே பரவியிருந்த தவறான மனப்பான்மையைப் போக்கி அதற்கொரு தனி மெருகு கொடுத்தவரும் அண்ணாதுரை தான்.

அறிஞர் அண்ணாதுரை சமுதாயச் சீர்திருத்தத்தில் அளவு கடந்த அக்கறை கொண்டவர். மக்களுடைய எண்ணம், சொல், செயல் அனைத்திலும் புதுமையைக் காணவேண்டும் என்னும் பேரவா உடையவர். அங்ஙனமே அரசியலிலும் புரட்சிகரமான மாறுதலைக் காணவேண்டுமென்று விழைபவர். இதனை, அவரது பேச்சுகளும் எழுத்துகளும் செவ்வனே எடுத்துக்காட்டுகின்றன. தாம் கொண்ட கொள்கைகளை நல்ல திட்டங்களாகத் தீட்டி அவை நிறைவேறும்படி செய்யவேண்டும் என்ற ஆர்வமுடையவர் அண்ணா. அவரது உள்ளமே திட்டங்கள் நிரம்பிய களஞ்சியம். அவரது எண்ணங்கள் திட்டங்களாகத் தீட்டப்பட்டு சட்டங்களாகவும் உருப்பெறுமானால் அதனால் நாட்டுக்கு மற்றற்ற நலன்கள் விளையக்கூடும் என்பது என் போன்றார் கருத்து.

அறிஞர் அண்ணாதுரை அவர்களை திராவிடர் கழகத்தார் தளபதி என்று அழைக்கிறார்கள். ஆனால் ஒரு தளபதிக்கு இருக்கவேண்டிய பிரமாதமான தோற்றத்தை அவரிடம் காணமுடியாது. ஆள் சற்று குள்ளம்தான். ஆனால் அறிவுத் துறையிலே அவர் ஒரு தளபதி தான். அவர் ஓர் அறிஞர் என்பதை அவரது விசாலமான முகத் தோற்றம், பரந்த நெற்றி, சிந்த

ளையை விளக்கும் கண்கள், அஞ்சாமை, ஆண்மை இவற்றை விளக்கும் நறுக்கு மீசை, அன்பு உள்ளத்தை வெளிக் காட்டும் புன்முறுவல் ஆகிய இத்தனையும் எடுத்துக் காட்ட வல்லன.

அண்ணா அவர்களிடம் ஆடம்பரம் என்பதை அணு வளவும் காணமுடியாது. தான் ஒரு தலைவனாக ஆக வேண்டும் என்று எண்ணுபவரல்ல அண்ணா. தன்னுடைய கருத்துகள் நிறைவேறினால் போதுமென்று எண்ணுபவர் அவர். அப்படியிருந்தும் எதிர்க் கட்சியினர், பத்திரிகைகள் இவற்றின் இருட்டடிப்பு முதலியன ஒருபுறமிருந்தும் அண்ணா அவர்களுடைய புகழ் உச்ச நிலை அடைந்திருப்பதிலிருந்தே அவரது உண்மையும் உழைப்பும் சீரிய கருத்துக்களும் தெளிவாகப் புலனாகின்றன.

அறிஞர் அண்ணாதுரை தன்னைப்போன்ற எதிர் கால வீரர்களை உற்பத்தி செய்துவிட்டார். நாட்டில் தற்போது பரவி வரும் எழுத்தோவியங்களும் பேச்சுகளும், இதனை நன்கு எடுத்துக்காட்ட வல்லன. எண்ணத்தில், எழுச்சியில், கருத்தில், ஆழ்ச்சிந்தனையில், சீர்திருத்தம் இத்தனையும் வளர்ந்திருப்பதை இன்றைய தினம் நாம் காண்கிறோம். இதற்கெல்லாம் காரணம் அண்ணா அவர்களே. இங்ஙனம் பழைய பாதையில் சென்று கொண்டிருந்த நாட்டு மக்களை தனது பேச்சு எழுத்து முதலியவற்றால் புதுமைப் பாதையில் திருப்பி விட்ட அறிஞர் அண்ணாதுரை நீடூழி வாழ்க!

டி. எஸ். வேலன்

உதவி ஆசிரியர் 'தமிழ் மணி' சென்னை

வருங்காலத் தலைவர்!

நாடு நல்ல தலைவரைத் தேடி நிற்கின்றது. நாடு நலமுற வேண்டுமானால் 'ஏழை' என்ற சொல்லும் அதன் பொருளும் அகராதி அளவிலேநிற்க வேண்டும். உழைப்பவன் தன் உழைப்பின் பயனைப்பெற வேண்டும், சாதியால், சமயத்தால், நீதியால் இழைக்கப் படும் கொடுமைகள் இல்லையாகச் செய்யவேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க எண்ணவேண்டும். அவ் வெண்ணத்தின் அடிப்படையில் நாடு திருத்தமுற வேண்டும். அன்று தமிழ் நாடு வாழும்! அந்த வகைக்கு வழி காட்டுவார் யார்?......இந்த நிலைமையில் ஒரு நல்ல தலைவர் தேவை!

ஆங்கிலமும் அருந்தமிழும் ஒருங்கறிந்தவர். எழுத் திலும், பேச்சிலும், வன் நடிப்பிலும் கூட மற்றவரைப் பின் நிறுத்தும் பெருமை பெற்றவர். ஏழைகள் நிலை வளர வேண்டும் என்று வழிகாட்ட முன்னிற்பவர். வடநாட்டு முதலாளித் தனத்தையும், ஆரியரின் வாய் வேதாந்தத்தையும் ஒழிக்க வேண்டும் என்று போரிடு பவர். அச்சமில்லா அறவாழ்வு வாழ்பவர். தமிழ் நாட்டை எங்ஙெந்த வகையால் வட நாட்டார் சுரண்டு கிறார்கள் என்பதை புள்ளிக் குறிப்புடன் நாட்டுக்கு விளக்குபவர். வீர லெனின் வாழ்வு மக்கள் வாழ வேண்டும் என்று வற்புறுத்துபவர், வாழ்ந்தால் தமிழி னம் ஒன்றுபட்டுப் பிறநாட்டவரைப் புறங்கண்டு வாழ வேண்டும் என்று வழி காட்டுபவர். பகுத்தறிவுத் துறையில் பல நாடகங்கள் இயற்றி, தாமே நடித்து நல்ல புரட்சிக் கொள்கைகளை நாட்டிடை பரப்புபவர். காஞ்சி தந்த செல்வர். 'திராவிட நாட்'டை ஓம்புபவர். உயர்ந்த அறிஞர். வருங்காலத் தமிழகத் தலைவருள் தலை சிறந்தவர், இன்னும் எத்துணையோ ஏற்றங்கள் பெறத் தகுதி உடையவர். ஆம், இத்தகைய அனைத்து

நலன்களும் ஒருங்கே அமைந்த அண்ணல் அண்ணு துரை அவர்களை இன்று தமிழகம்-அதிலும் இளைஞருலகம் பின்பற்றத் தொடங்கிவிட்டது.

இன்றைய இளைஞர்கள் தாம்-கல்லூரி மாணவர்கள் தாம் நாளைய உண்மை விடுதலைத் தமிழ் நாட்டை ஆளப் போகிறவர்கள். வடநாட்டுக்கும் பிறநாட்டுக்கும் அடிமையின்றி அன்பு மனப் பான்மையில் வருங் காலத் தமிழகம் அமையும், அதை ஆக்கும் பொறுப்பினை இன்றைய மாணவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டியாக, வருங்கால தலைவராக, அறிஞர் தளபதி அண்ணுதுரை அவர்கள் விளங்குகிருர்கள். பகைவரும் விரும்பும் பண்பும், சொல்லாற்றலும் எழுத்து நடையும் ஒருங்கு அமையப்பெற்ற அண்ணு அவர்கள் தமிழகத்துக்கு-தமிழ் நாட்டு இளைஞர்களுக்கு அறிவு விளக்காக-புது வாழ்வினை மலர்விக்கும் பொற்கதிராக விளங்குவார் என்பது உறுதி. அவர்தம் அறிவுரை மக்களை விலங்குத் தன்மையிலிருந்து மாற்றி மக்கள் தன்மைக்குக் கொண்டு வரும் என்பது துணிபு. தமிழகம் அவர் காட்டும் வழி அறிந்து, எல்லோரும் இன்புற்றிருக்கும் வாயில்கள் அமைத்து வேறுபாடுகளை நீக்கி வாழும். அப்படி வாழும் நாளே உண்மையில் தமிழர் தம் விடுதலை நாள். அந்நாள் விரைந்து வருக!

அ. மு. பரமசிவானந்தம்
தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

நாவலர் அண்ணாத்துரை

பச்சையப்பன் கல்லூரியில் நானும் அண்ணாத்துரையும் ஓராண்டு முன் பின்னாகப் படித்துப் பட்டம் பெற்றோம். பிற்காலத்தில் அவர் ஒரு சிறந்த நாவலராய்த் திகழ்வார், எழுத்தாளராய் விளங்குவார், நாடக ஆசிரியராயும் நடிகராயும் காட்சியளிப்பார் என்று அவரது கல்லூரி நண்பர் யாருமே நினைத்திருக்க முடியாது. படித்துப் பட்டம் பெற்றபின் வாழ்க்கையில் வாய்த்த வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக்கொண்டு வாழ்க்கைப் பாதையில் முன்னேறிய அவருடைய வாழ்க்கை வருங்கால இளைஞர்களுக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகவும், தூண்டுகோலாகவும் இருக்குமென்பதில் ஐயமில்லை.

நாவலர் அண்ணாத்துரையின் வீர முழக்கங்களை, புரட்சிகரமானப் புத்துணர்ச்சித் ததும்பும் பேச்சுக்களை, காலத்திற்கேற்ற கருத்துக்களை, பல திறப்பட்ட நிகழ்ச்சிகளைப் படம் பிடித்தாற்போல கேட்போர் கண் முன் கொண்டு வந்து நிறுத்துஞ் சொல்லோவியங்களை, மோனை எதுகை நிரம்பி, வாலிப உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியுஞ் சொற்றொடர்களைக் கேட்டு வாயூறிப் போகாத பள்ளிச் சிறுவர்களோ, கல்லூரி மாணவர்களோ, பொது மக்களோ இரார் என்று துணிவுடன் கூறலாம். அவரின் பேச்சு உயிர் பெற்ற தொன்று. உணர்ச்சி நிரம்பிய அவரது எளிய நடை சோர்வுற்றோர்க்கும் உணர்வூட்டி ஊக்குவிக்க வல்லது; எழுச்சி மிக்க குரல் கேட்போரை செயலாற்றத் தூண்டும் வலிமையுடையது. அவரது சொற்களில் தமிழ் மணம், வீர மணம் கமழும்; சொல்லடுக்குகள் யாரையும் தட்டியெழுப்பும் ஆற்றல் பெற்றவை; மோனை எதுகைகள் வெறும் சொல்லடுக்கேயல்லாமல் பகுத்தறிவைக் கிளறும் சக்தி வாய்ந்தவை. அவர் சொற்பொழிவுகள் சுருங்

கச் சொல்லின் கேட்டார்ப் பிணிக்குந்தகையன; கேளா தாரும் வேட்கையோடு விரும்புஞ் சொற்களாகும்.

தமிழர் விடுதலைப் போரில் அண்ணுத்துரையின் பேச்சும் எழுத்தும் முன்னணியில் வைத்தெண்ணத் தகும் அரும்பெருந் தொண்டாகும். வாளினைக்கொண்டு எதிரிகளைக் கொன்று சாய்த்து புதிய அரசு நிறுவிய பண்டைய வீரர்களைக் காட்டிலும், நாவினையும் எழுது கோலையும் துணையாய்க்கொண்டு அறியாமையென்னும் இருளகற்றி, அறிவுச் சுடர் கொளுத்தி, திராவிட தனி யரசு காணப் புரட்சி செய்யும் அண்ணுத்துரையின் ஆண்மை அவனியோரால் பாராட்டுதற்குரியது. வருங் காலத்தில் அரசியல் துறையிலும், சமூக அமைப்பிலும், இலக்கிய உலகிலும் அவரது பெரும்பணி பொன் எழுத் துக்களில் பொறிக்கப்படும். அவர்போன்ற வீரரைத் தமிழ் நாட்டில் கண்டபிறகே தமிழர் தனிப்பெருங்கவி பாரதிதாசன் 'கொலைவாளினை எடடா, மிகு கொடி யோர் செயலறவே' என்று தைரியமாய்ப் பாடியிருக்க வேண்டும்.

அவர் சிந்தனைச் சிற்பியாக மட்டுமல்லாமல், சிறந்த செயலாற்றும் வீரராய், தமிழ் நாட்டின் தலைசிறந்த அமைச்சராய் வரும் நாள் எந்நாளோ என்று திராவிட நாடும், திராவிட இனமும், எதிர்நோக்கி இருக்கின்றார் கள். அண்ணுவின் தொண்டு தினேதினே வளர்ந்து, பெரியார் பக்கலிருந்து வளம் நிறைந்த நம்நாட்டை இன்னும் பல்லாற்றுலும் வளமுறச் செய்ய வேண்டும் என்பதே ஒவ்வொரு தமிழனின் வேட்கையாகும். அவ ரது அறப்பணி வாழ்க! அறிவுரை வெல்க!

தி. வை. சொக்கப்பா

பேராசிரியர், 'முனிசிபல் கல்லூரி' சேலம்

தமிழகம் கண்ட ஒரே அறிஞர்

தமிழ் நாட்டின் சிறந்த சொற்பொழிவாளர்களில் முதன்மையானவர், எழுத்தாளர் பலருக்கு வழி காட்டியாக விளங்குபவர், நாடகங்கள் எழுதுவதில் சிறந்த மேல்நாட்டு ஆசிரியர்களை ஒத்தவர், அரசியலில் திராவிட மக்களின் ஒரே தளபதி, நமது அண்ணா. அவரின் அறிவுத்திறனைப் பற்றிப் பல அறிஞர்கள் போற்றுகிறார்கள். சொற்பொழிவின் சுவையைப் பலர் புகழ்கிறார்கள். எழுத்து வன்மையை எதிரிகள் கூடப் பாராட்டுகிறார்கள். இதன் காரணமாகவே "அறிஞர்" என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்று விளங்குகிறார். இன்று தமிழ் நாட்டில், "அறிஞர் அண்ணாத்துரை" என்பது அவருடைய அரசியல் சமுதாயக் கொள்கைகளிலிருந்து மாறுபட்ட பலரும் அழைக்கும் புகழ்ச் சொல்லாகும்.

தமிழ் நாட்டின் உயர்வுக்கு, முற்காலத்திலும் தாழ்வுக்குப் பிற்காலத்திலும், காரணமாக விளங்கிய கலைகளுள் முக்கியமானது நாடகக் கலையாகும். அக்கலை மிகச் சமீப காலம் வரையில் கவனிக்கப்படாமலிருந்து, சுமார் நாற்பது வருடங்கட்கு முன்பிருந்து தான் ஒரு சிலரால் வளர்க்கப்பட்டு வருகிறது என்றாலும், நாடகத்தால், நாட்டினர் அடைய வேண்டிய பயனை நமது நாடகங்கள், நாடக ஆசிரியர்கள், நாடகங்களை நடிப்பவர்கள் அளிக்க முற்படவில்லை.

பெரும்பாலும், மக்களின் கருத்தை ஒட்டியே நாடகங்கள் எழுதப்பட்டு வந்தன. அந்த முறையை மாற்றி மக்களைத் திருத்துவதற்கு நாடகங்கள் பயன் படுமாறு செய்த பெருமை, நமது அறிஞரையே சார்ந்ததாகும்.

புராண நாடகங்களை விட்டு, கொஞ்ச காலத்திற்கு முன்பு சமுதாய நாடகங்களை எழுதியவர்கள் மக்களின் வாழ்க்கையை மாற்றும் முறையில் எழுதவில்லை. அண்ணாவின் நாடகங்களில்தான், சமுதாயத்தைச் சித்தரித்துக் காட்டுவதுடன், அதை மாற்றுவதற்கும் முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. அறிஞரின் நாடகங்கள், மற்றவர்களின் நாடகங்களை விடச் சிறப்படைவதற்குக் காரணம் மற்ற நாடகங்களில் காண முடியாத, கற்பனை மிகுந்த கதைப்போக்கும், தேனொழுகும் நடையில் எழுதும் கருத்துள்ள வசனங்களும், நமது நாடக ஆசிரியர்கள் பலருக்குத் தெரியாத, பாத்திரங்களின் தன்மை மாருது, மனப்பண்புகளைச் சித்தரிக்கும் முறையில், சிருஷ்டிக்கும் "பாத்திரங்களின் உருவகமுமேயாகும்."

அவர் எழுதியுள்ள, "சந்திரோதயம்," "சிவாஜீ கண்ட ஹிந்து ராஜ்யம்," "நீதி தேவன் மயக்கம்," "ஓர் இரவு" "வேலைக்காரி" முதலிய நாடகங்களைப் பார்த்தால், மற்ற நாடகங்கட்கும், இந்த நாடகங்கட்கும் உள்ள மாறுபாடு நன்கு தெரியும்.

"மக்களின், மூடப்பழக்க வழக்கங்களையும், அதனால் விளையும் தீமைகளையும், அறிவுறுத்தும் முறையில், எழுதப்பட்டுள்ள நாடகம் "சந்திரோதயம்."

கல்யாண், புரந்தர் முதலிய கோட்டைகளைவென்று வாகை சூடிய வீரன் "சிவாஜி" கடைசியில் ஹிந்து மத முறைப்படி "ஹிந்து ரா்ஜ்யம்" ஸ்தாபிக்க ஆரிய கங்கு பட்டரை அணுகியதால், அவர் ஆட்சி அழிந்த வரலாற்றை விளக்கும் ஓர் அரிய சரித்திரச் சித்திரம் "சிவாஜி கண்ட ஹிந்து ராஜ்யம்." தேந்தமிழின் வீர உணர்ச்சியை, இந்நாடகத்தில் வரும் "சந்திர

மோகன்'' பேசும் வசனங்களில் அறியலாம். இலக்கியச் சுவையுடன் வீர உணர்ச்சி விளையாடும் முறையில், எழுதப்பட்டுள்ள வசனங்களும், காதல் பாடம் கற்றுக்கொள்வதாக அமைந்திருக்கும் நகைச்சுவைப் பகுதியும், இந்நாடகத்தின் சிறந்த அம்சங்களாகும்.

''இரக்கமென்ற ஒரு பொருளிலா அரக்கன்'' என்று கம்பர், இராவணனைப் பற்றிப் பாடியுள்ள, ஒரு பெரும்பழியைப் போக்குவதற்காக எழுதப்பட்ட அரிய கற்பனைக் களஞ்சியம் ''நீதிதேவன் மயக்கம்''.

''பொருளாளி திருடர்களை விளைவிக்கின்ருன்'' என்ற புரட்சிக் கவிஞரின் பாடலை, அறிஞர் தனது ''ஓர் இரவு'' நாடகத்தில் எடுத்துக்காட்டியுள்ளார். செல்வர்களில் பலர் தனது காம இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்காக ஆசைமொழி கூறி, இளமை மாருத அபலைகளைத் தன் நிலை தடுமாறச் செய்து, பின் நன்றி கெட்ட முறையில், தங்கள் அந்தஸ்து கெட்டு விடும் எனப்பயந்து, நடுத்தெருவில் விடும் காரணத்தால்; ஆதரவற்ற நிலையில் அவர்கட்குப் பிறக்கும் குழந்தைகள், சமூகத்தில் ஒதுக்கப்பட்டு வாழத்தகாதவர்களாகத் தூற்றப்படுகின்ற நேரத்தில். வாழ வேறுவழியின்றி, இம்மாதிரித் திருட்டுத் தொழிலில் இறங்க வேண்டிய நிலையை அடைகிருர்கள். ஆனுலும் அவர்களும் மனித உள்ளம் கொண்டவர்கள், சமயம் நேர்ந்தால், நல்லவர்களாக மாறுவார்கள், என்ற ''மனப் பண்பு'' விளக்கத்தை—இதுவரை தமிழ் நாடகங்களிலோ, கதைகளிலோ, இலக்கியங்களிலோ, விளக்கப்படாதிருந்த ஒரு அரிய கருத்தை—''ஓர் இரவில்'' விளக்குகிருர், ''திருடன் ரத்தினம்'' என்ற பாத்திரத்தின் மூலம்.

மற்றும், அண்ணாவின், உயர்ந்த கற்பனையைப் பூரணமாக "வேலைக்காரி"யிற் காணலாம். "ஆனந்தனைப் பரமானந்தனாக" மாற்றும் கற்பனை "ஹரிஹர கோஷ்" சம்பந்தமாக, பெயருக்கும் அவன் கைகளிலே போட்டுக் கொண்டிருக்கும், நாமம், விபூதிக்கும், கூறியிருக்கும் காரணம் இவைகளைப் பார்த்தவர்கள் இனிமேல் கற்பனையின் எல்லை வேறில்லை என்ற முடிவுக்குத் தான் வர நேரிடும்.

எளிய நடையில், இலக்கியச் சுவையுடன் வசனங்கள் எழுதுவதிலும் நிகரற்றவர் என்பதையும், பெரிய பெரிய பொருளாதார நிபுணர்கள் தமிழில் விளக்குவதற்கு வார்த்தையில்லை என்று கூறும் விஷயங்களையும், நகைச்சுவையுடன், ஆனால் அப்படியே மனதில் படும்படியாகவும் சிக்கலான பிரச்னைகளை விளக்கும் வசனங்கள் எழுதும் ஆற்றலுடையவர் என்பதையும் இந்நாடகம் நன்கு நிரூபிக்கிறது.

"தங்கத்திலே அரிசி செய்து சமைத்து, கோமேதகக் கூட்டும், வைரவறுவலும், முத்துப் பச்சடியும், மோர்க் குழம்பிலே கெம்பும் கலந்தா சாப்பிடுகிறீர்கள்"

"உங்களைப் போன்ற சிலர் தர்மப்பிரபுவாக வாழ்வதற்கு, நாங்களெல்லாம் தரித்திரர்களாக இருக்க வேண்டுமா?"

"சக்திக் கேற்ப உழைப்பு, தேவைக்கேற்ற வசதி" என்பன போன்ற வசனங்கள் எவ்வாறு முதலாளித்துவ முறையை ஏளனமாக இடித்துரைத்து, வருங்கால உலகுக்கு உறுதியான சமதர்மக் கொள்கையை வகுக்க வழி காட்டுகின்றன என்பது விளங்கும்.

அண்ணா, இன்னும் எவ்வளவோ, நாடகங்களை நம் தமிழ் நாட்டிற்கு அளிக்க இருக்கிறார்கள். இலக்கிய நூற்களும், நம்மிடையே இருக்கும் அளவுக்கு, நாடக நூற்கள் இல்லாமலே இருந்து வந்தன. அந்தக் குறையை நமது அறிஞர் தீர்த்து விட்டார். படித்தாலும், நடித்தாலும், தெவிட்டாத கனிகளைப் போன்று சிறந்த நாடகங்களைத் தமிழகத்திற்கு அளித்திருக்கிறார். ஷேக்ஸ்பியரை, பர்னாட்ஷாவை, வேட்ஸ்வொர்த்தை, இங்கர்சாலை, ரூசோவைப் போன்ற பல அறிஞர்களை மேல்நாடு, ஒவ்வொரு துறைக்கும் ஒரு அறிஞரைப் பெற்றிருக்கிறது. ஆனால், நமது தமிழகம், அந்த அறிஞர்கள் அத்தனை பேரையும் உள்ளடக்கிய, "ஒரே அறிஞர் அண்ணாத்துரை" யைப் பெற்று விட்டது!

வாழ்க அறிஞர் அண்ணாத்துரை!

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி

சென்னை

யார் இவர்க்கு நிகர்?

எளிமையான தோற்றம்; விரைவான நடை; புன் முறுவல் பூத்த முகம். சிறிது குள்ளமான உருவம், என்ற வர்ணனைக்குரியவர் ஒருவர் இன்று தமிழ் நாட்டு மக்களின் உள்ளங்களிலெல்லாம் இடம் பெற்றுவிட்டார். அவர்தான் அறிஞர் அண்ணா.

அவரது கட்சியினருக்கோ—தளபதி, கூட்டுத் தோழர்களுக்கோ—அண்ணன், தலைவருக்கோ—அன்பன், மாற்றுக் கட்சியினருக்கோ—அறிவுச் சுடர், இலக்கியத்திற்கோ—புத்தொளி.

அவர் இரவிலே விடியற்காலை வரையில் கண் விழித்திருப்பதையும், காலை எட்டுமணி வரையில் உறங்குவதையும், பிற்பகலிலே கண்ணயர்வதையும் காணநேரும் பலரும் இவர் ஏன் இயற்கைக்கு விரோதமாக இரவிலே விழித்துப் பகலிலே உறங்கவேண்டும், என்று எண்ணுவது இயற்கை. மேலும், வெளியூர்களுக்குப் பேச அழைத்து அவர் வரவில்லையென்றே கூறினாலும், வர இயலாமற் போனாலும் உடனே "சோம்பேறி" என்ற பட்டமளிக்கத் தவறுவதில்லை தோழர்கள். அவரது 'உழைப்பின்' திறத்தை உணராததாலேயே, பலர் இவ்வித முடிவுக்கு வந்து விடுகிறார்கள்.

சிந்தனையாளர்களுக்கு இரவிலே நெடுநேரம் வரையில் உறக்கம் வருவதில்லை. நம்நாடு வெப்பநாடாகையால், பகலிலே அறிவு வேலை எதுவாயினும் இரவிலே செய்வதைவிடச் சிறிது கடினமேயாகும். இன்னும் பலப்பல நண்பர்களும், பொதுமக்கள் தொடர்பும் கொண்ட ஒருவரது வாழ்க்கையில் பகல் நேரம் பலரால் பங்கிட்டுக் கொள்ளப்படுவதும் இரவு மட்டுமே

தனித்து தமது பணியைச் செய்வதற்கு ஏற்றதாக அமைவதும் அனைவரும் அறிந்தது.

எண்ணங்களிலேயே மிதந்துகொண் டிருக்கும் அண்ணா, அன்றாட நடைமுறை நிகழ்ச்சிகளிலே அதிக நினைவு செலுத்துவதில்லை. நாள்தோறும் குளிப்பதோ, வேளைப்படி உண்பதோ கூட அவரால் முடிவதில்லை.

அவரது அகன்ற நெற்றியும், கூர்ந்த நாசியும், பரந்த கண்களும், அவரைக் காணும்போதே அவரது அறிவுத் திறனை நன்கு புலனாக்குகின்றன. அவர் உரையாடத் தொடங்கினாலோ, ஒவ்வொரு சொல்லும் முத்து உதிர்த்ததென ஒளிவிட்டுச் சிறக்கும். பிறருக்குப் புலப்படாமல், குற்றமுள்ள நெஞ்சை மட்டும் குத்திக் காட்டும் வகையிலே ஒவ்வொரு சொல்லும் இருபொருள் ஏந்தி நிற்கும். அவரது பேச்சு, எப்படித் தடைபடாது முன்பின் முரணின்றி, உணர்ச்சி வெள்ளமாகக் கொட்டுகிறதோ, அப்படியேதான் அவரது எழுத்தும் தெளிவுபெற்று, வலிவுகொண்டு திகழ்கிறது என்பதோடு, ஒருமுறை எழுதியதை மறுமுறை மாற்றவோ திருத்தவோ தேவையில்லாத அளவுக்கு அவரது சிந்தனை ஆற்றல் சிறப்படைந்துள்ளது. அப்படி, பல கட்டுரைகள் ஒரே இரவிலேயே மலரும்.

கட்டாய இந்தி நுழைக்கப்படுவதை எதிர்த்து நடத்திய போரில், ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணர்ச்சியூட்டிப், பலப்பல இளைஞர்களைச் சிறை புகச் செய்து, தானும் சிறைப்பட்டார். சிறையினுள்ளே இருந்தபோதும் — ஒன்றிரண்டு பேருடைய முயற்சியால் சிலர் மன்னிப்புக் கோரி வெளியேறிவிட இருந்ததை அறிந்து, அவர் ஈழத்துச் 'சிவாநந்த' அடிகளுடன், அம் முயற்சியைத் தோல்வியுறச் செய்து, இந்தி எதிர்ப்பு இயக்கம் வெற்றிபெறக் காரணமானார்.

அரசியல் உலகிலேயும் அவரது கருத்துக்கள் வன்மை பெற்று வருகின்றன. பெரியாரின் பணியைப் புரிந்துகொள்ள மறுத்தவர்களையும், ஒப்புக்கொள்ளச் செய்த பெருமை, அவருக்கே உரியதாம்.

அவர் எதையும் ஆழ்ந்து சிந்தித்தே ஏற்றுக்கொள் வார். சரியென்று பட்டுவிட்டதை மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்யவும் இறுதி வரையிலே முயல்வார். அதன்படி, அவர் கொண்ட நாட்டுப் பிரிவினைத் திட் டம் திராவிட நாடு தனியாட்சி பெறும் வரையில், அதற்காகப் புணியாற்றியே தீருவார்.

இந்நிலையில் அவர் ஓர் அருந்திறல் மட்டுமன்றி— பல்வகைத்திறன் கொண்டவராகவும், ஓர் தளபதி மட்டுமன்றி, பலருக்கு வழிகாட்டியாகவும் விளங்கு கிறார். தமிழகத்தின் தனிப்பெருங் களஞ்சியமாக, செல்வமாக, அரும்பெரும் தலைவராக, விளங்கக்கூடிய வர் அண்ணா.

அவருக்கு உதாரணமாக ஒருவரைக் குறிப்பிட எண்ணினேன். பேச்சுக்கு சிசரோவும், எட்மண்ட் பர்க்கும் வந்தனர். உரையாடலுக்கோ, சார்லஸ் லாம் பும், பெர்னாட்ஷாவும், பெரியார் ராமசாமியும் புறப் பட்டனர். கதைக்கோ ரூசோவும், இங்கர்சாலும் வந்தனர். நாடகத்திற்கோ ஸோபாக்கிளிஸும், ஷேக் ஸ்பியரும் காட்சியளித்தனர்.

இவ்வெல்லாத் துறையிலும் திறம் படைத்த அறி ஞர் அண்ணா அவர்களுடன் யாரை ஒப்பிடுவது என்பது தான் எனக்குத் தெரியவில்லை.

உதாரணம் ஏன்? அவருக்கு அவரேதான் நிகர்!

க. அன்பழகன்

ஆசிரியர் 'புதுவாழ்வு' சென்னை

அனைவர்க்கும் அண்ணா

அண்ணா. ஆம். அனைவருக்கும் அண்ணா. ஆராய்ச்சியில் அண்ணா; அற்புதமாக மாத்திரமல்ல, ஆணித்தரமாக அரசியல் சமூகப் பொருளாதார நுணுக்க விளக்கத்தோடு பேசும் அண்ணா; கம்பரஸம் டோஸ் டோஸாகக் கொடுத்த டாக்டர் அண்ணா; நடிகர்; நாடகாசிரியர்; திராவிட நாட்டாசிரியர்; சொற்போட்டிச் சிங்கம். அண்ணா பேசுகின்றார், என்றால் அனைவர் முகமும் மலர்ந்திருக்கும்.

ஆரியத்தைத்தான் கண்டிப்பார். அதில் ஒரு அலாதியான ஆனந்த மிருப்பதாகவே ஆரியத் தோழர்கள் ஆரவாரிப்பார்கள்.

அண்ணா, அதிக கோபமாகப் பேசுகின்றார் என்றால், எதிரில் இருக்கும் ஒலிபெருக்கியை இரண்டோர் தடவைகள் தன் கையால் பிடிப்பார். இதுதான் அவர் பேச்சில் அதிகக் கோபமான கட்டம். காரணம் அவர் கோபமாக கனல் கக்கும் கண்களோடு, அல்லது அனல் கக்கும் உள்ளத்தோடு பேசத் தேவையில்லாதவர்.

ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் நிலைமாறி ஊற்றும் வற்றி உறங்கும் மணல் ஆற்றை நாம் கண்டிருக்கின்றோம். ஆனால் அண்ணாவின் சிந்தனையூற்று அலையாண்ட கடலை அடக்கியாளும் தன்மை போலிருக்கும். சாதாரணமாக அவர் நண்பர்களிடம் பேசும்போதுகூட தனது சொல்லாற்றலால் அவர்களைத் தன் வயப்படுத்துவார். அதோடு நில்லாமல் தான்பேசுகிற ஒவ்வோர் சொற்றொடரிலும் நகைச்சுவை கிளம்பும். நம்பிக்கையூட்டும் சொற்கள், எதிரிகளும் முகமலர்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் சான்றுகள் நிறைந்த சரமாரியான வினா விடைகள். சரியான நேரத்தில் தகுதியான இடத்தில்

பொருத்தமான சொற்களை அளவறிந்து, அற்புதமாக அடுக்கி, அதில் தென்றல் போன்ற குளிர்ச்சியேற்றி, சுவைத் துண்ணத் தெவிட்டாத தேன் கலந்து ஆரவாரமில்லாமல், அமைதியாக, ஆயிரமாயிர மக்கள் குழுமியிருக்கும் கூட்டத்தில் கைநெகிழ்ந்த பொருள் போலப் போட்டு விடுவார். செங்குத்தான மலையால் தடுக்கப்பட்ட மேகங்கள் முத்து நீர் சொரிய சிறுசிறு ஓடைகளாய் அடிவாரம் வரை தடுப்பாரின்றி ஓடிவரும் வெள்ளம் போல் தங்குதடையின்றிக் கோர்வையாக வரும் அண்ணாரது சொற்கோவை.

எதிர்ப்பென்ற ஈட்டியை எறிவது என்றால், தங்கப் பதக்கம் தாங்கிய மார்பும், காஷ்மீரக் கம்பளி போர்த்த மார்பும், ஒன்றுதான் அண்ணாவுக்கு. பணப் பெட்டியைப் பார்த்துப் பயந்தோ, பல்லிளித்தோ, இச்சகம் பேசியோ, பாசறையைப் பார்த்து நடுங்கியோ அவர் பேனா நின்றதில்லை.

இதத்து அண்ணாவைப் பார்த்து சிலர் முணு முணுக்கின்றனர். மாணிக்கத்தை வைத்துக் காப்பாற்றத் தெரியாத பாம்புக் கூட்டமா நாம்? சூரியனைக் கண்டு மகிழ்ச்சி கொள்ள முடியாத குருடர் கூட்டமா நாம்? அல்லவே அல்ல. அண்ணா நமக்கோர் கிடைத்தற்கரிய பொக்கிஷம். அவரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு திராவிடனுடைய கடமை.

வாழ்க அண்ணா! வாழ்க அவர் பேனா!

சி. பி. சிற்றரசு
ஆசிரியர் 'தீப்பொறி' வேலூர்.

அவர் அறிஞர், நான் சொல்லவில்லை; திராவிடக் கழகம் சொல்லவில்லை. நாடு சொல்கிறது. மக்களின் தூதுக்களாகத் திகழும் பத்திரிகைகள் கூறுகின்றன. 'பெரியார் ராமசாமி' என்பது எப்படி நாட்டின், சமூகத்தின் பொதுவான உச்சாடனப் பெயராகி விட்டதோ அப்படியே. "அறிஞர் அண்ணாதுரை" யென்பதும் ஆகிவிட்டது. மாற்றுக் கட்சியினர், மாற்றுப் பாசறையினர். மாற்று இனத்தவர் அனைவரும் ஏகோபித்து அறிஞர் என்கின்றனர் அவரை. நாட்டின் பொதுச் சொத்தாக, தாய்ச் சரக்காக ஆகி விட்டார் தளபதி அண்ணாதுரை.

அறிஞர், ஆராய்ச்சியாளர், பேச்சாளர், எழுத்தாளர், நாடகாசிரியர், நடிகர் என்று பலப்பட அவரைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பதில் நாட்டுக்கும் நலனில்லை; அவருக்கும் சிறப்பில்லை. அவரை எவ்வளவுக்கெவ்வளவு பயன்படுத்திக் கொள்கிறதோ நாடு, அவ்வளவுக்கவ்வளவு அண்ணாதுரை சாகப்தத்துக்கு சிறப்பு நேரிட்டதாகும்.

அறிஞர் அண்ணாதுரையவர்கள் அரசியல் மதியூகியாவார். நாணயமும் நேர்மையுமிக்க, நீதியும் நியாயமும் நிறைந்த அரசியல் நாட்டில் நிலைபெற வேண்டுமென்ற கருத்தும் பொறுப்புமுடையோர் அறிஞர் அண்ணாதுரையவர்களைக் கொண்டு நேரிய அரசியலை நிறுவிக்கொள்க!

சமூகக் குரோத வேறுபாடுகள், குறைபாடு கோளாறுகளற்ற தன்னுணர்வுச் சமுதாசம் சமைக்கப்

பெறவேண்டுமென்ற தன்மதிப்பாளர்கட்குத் தளபதி யாகத் திகழ்கிருர் அறிஞர் அண்ணுதுரை. பயன்படுத் திக் கொள்க!

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், ஏழை-பணக் காரன் இக்கட்டுகள், முதலாளி-தொழிலாளி முரண் பாடுகளற்ற சமதர்மப் பாதை நிறுவும் பணியிலீடுபட் டிருப்போர் அறிஞர் அண்ணுதுரையவர்களின் ஆய் வுரைகளைக் கேட்டு நடக்க! அறிஞரின் அறிவுரையை அப்படியே ஏற்று நடைமுறையில் கொண்டுவருக!

நாட்டில் வாழ்க்கைத் துறைகளனைத்திலும் புரட்சிகரமான மாறுதல்கள் தேவை! தேவை! என்று தோள்தட்டி நிற்கும் எஃகு நரம்பும், ஏக்கழுத்தும், பீடு நடையுமிக்க இளைஞர் சமுதாயம் அண்ணுவின் கோட் டில் அணி வகுத்து நிற்க. அவரிடும் ஆணையை அற வுரையாகக் கொண்டு, ''நிறைவேற்றுவோம்'' என பிரதிக்ஞை எடுத்துக்கொள்க!

இயல், இசை, நாடகம் இன்னபிற இலக்கியத் துறைகளில் மாறுதல் வேண்டும், மறுமலர்ச்சி தேவை யென்று பரணிபாடுவோர், சீர்திருத்த இலக்கிய நூற் களும், கவிதைகளும் காவியங்களும் புனைய முற்படு வோர் அறிஞர் அண்ணுதுரையை நெருங்கட்டும்! அக் காலத்தில் ஆண்டவனிடம் முதலடி எடுத்துக்கொடுக்க வேண்டினர்களாமே, அதுபோல அதற்காக அல்ல. அண்ணுவின் தெளிந்த, செம்மையான ஆராய்ச்சி ஆய் வுரைகளைக் கேட்டு அதன் வழி நடந்துகொள்ள.

ஆம். அவரொரு நடமாடும் நிகண்டுதான்—பல் கலை நிகண்டு, களஞ்சியந்தான், தொட்டணைத்தூறும்

மணற்கேணி; அண்ணாவிடம் பழகுந்தோறும், அவரது பேச்சை, எழுத்தை, நடிப்பை அனுபவிக்குந்தோறும் அறிவு சொட்டுகிறது; ஆராய்ச்சியுணர்வு பரிணமிக்கிறது.

நாட்டு அறிவுத் தோரண வேலையில் ஈடுபட்டிருப்பதாகக் கூறிக்கொள்ளும் இன்றைய சர்க்கார் அறிவுக் களஞ்சியமாம் அண்ணாவை, அவரது கொள்கைகளை, முற்போக்குக்கான ஆய்வுரைகளைத் தேசிய மயமாக்குக. உத்தியோக பூர்வமாக அவரது கொள்கைகட்கு செலாவணி வழங்குக! இதுவே ஆட்சியாளரின் கடமை. இதைத்தான் இன்றைய உள்ளத் துடிப்பு மிக்க ஒவ்வொரு வாலிபனும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறான்.

பூ. கணேசன்,
ஆசிரியர் 'நிலவு' சென்னை.

எனது அண்ணா

பச்சையப்பன் கல்லூரி, திராவிடர் இயக்கத்துக் களித்த தலைசிறந்த திராவிடமணி தளபதி அண்ணாத் துரை அவர்கள். பேராசிரியர்கள் திருவேங்கடசாமி, வரதராஜன் ஆகியோர் அண்ணாவை அரசியலில் ஆர் வங் கொள்ளச் செய்தவர்கள்.

அண்ணாவின் பேச்சுத் திறமை குறித்து, நான் எடுத்துக் கூற வேண்டியதில்லை, கணீரென்ற மணிக் குரல், தெளிவான சொற்கள், இடையிடையே நகைச் சுவை; இவை அண்ணாவின் சொற்பொழிவின் சிறப்பு கள். அவரைப் போலவே பேச வேண்டுமென்று ஆசைப்படுகின்றவர் பலர். இது வரவேற்கத் தக்கதே. ஆயினும் வெறும் சொல்லடுக்கு மட்டும் அதற்கு வழி யல்ல. ஆழ்ந்த கருத்துக்களும், பரந்த புலமையும் அண்ணாவின் சொற்களை வெளித் தள்ளுகின்றன, என்ற உண்மையை நாம் உணரவேண்டும்.

மேலும், அண்ணாவின் நடை, ஆங்கில நடையைத் தழுவியது. சிறந்த கருத்துக்களை ஆங்கிலப் பாணியில் அளிக்கும் ஆற்றல் தான், அண்ணாவின் வெற்றியின் ரகசியம்.

பலரால், பழிக்கப்பட்டு, தூற்றப்பட்ட 'ஜஸ்டிஸ்' கட்சியில் அந்தக் காலத்தில் இளைஞர்களுக்கு ஆர்வம் இருந்ததே யில்லை. ஆயினும் அண்ணா அதே இயக் கத்தில் சேர்ந்து அதிலிருந்த பதவி வேட்டைப் பட்டுப் பூச்சிகளையும், பட்டம் விரும்பும் வெட்டுக் கிளிகளை யும், வெறுத்துத் தள்ளி, அது, ஏழைகளின் கட்சியாக மாறவேண்டுமென ஆசைப்பட்டு, அவ் வெண்ணம்

ஈடேற வேண்டியே வேலை செய்து வந்தார், பெரியார் 'ஜஸ்டிஸ் கட்சி'யின் தலைவரானதும், அந்த ஆசை நிறைவேறிய தெனலாம்.

அண்ணுவின் 'திராவிட நாடு' தமிழ்ப் பத்திரிகை யுலகில் புரட்சியைச் செய்தது. மேல்நாட்டு நடப்பு கள், விஞ்ஞானக் கருத்துகள், பொருளாதாரப் புள்ளி விவரங்கள், இவையெல்லாம் அவரது பத்திரிகைக்குப் புது அமைப்பைத் தந்துள்ளன.

சிறந்த, சமூக சீர்திருத்த நாடகங்களைத் தீட்டிய தோடல்லாமல், தானே நடித்தும், நமது உள்ளங் களைக் கொள்ளை கொண்டுள்ளார் நமது அண்ணு. திரைப்பட உலகிலும், அண்ணுவின் நாடகங்கள் நல்ல கருத்துக்களைப் பரப்பி பெரிதும் நாட்டுக்குப் பயன் விளைவிக்கின்றன.

திராவிடத்திலுமின்றி, ஆங்கில, அமெரிக்க நாடு களிலும், தன்மான இயக்கப் பிரசாரத்தை, அண்ணு செய்ய வேண்டுமென்பது எனது நெடுநாளைய ஆசை. பெரியாருக்குப் பிறகு இயக்கத்தை, அண்ணு அவர்கள் தலைமை தாங்கி திறம்பட நடத்தவேண்டுமென்பது எனது ஆவல்.

இந்த இரண்டையும் நான் அவரிட மிருந்து எதிர் பார்க்கிறேன்.

ஏ. பி. ஜனர்த்தனம்,
வேலூர்.

அறிஞர் அண்ணா!

அறிஞர் அண்ணா! இந்தப் பெயர் தமிழகத்திலே அறிமுகப்படுத்த வேண்டாத அளவுக்கு பரவியுள்ள திருப் பெயர். பாமரர்கள், படித்தவர்கள், பதவியிலே யுள்ளோர் அத்தனை பேருடைய உள்ளத்திலும் அண்ணாவின் உருவம் பதிந்துள்ளது. இன்று நம் தாய கத்தின் எந்த இடத்திலே சென்றாலும் - பட்டணங் களிலே, பட்டி தொட்டிகளிலே, தொழில் ஆலை களிலே, படக்காட்சி சாலைகளிலே, பல்கலைக் கழகங் களிலே, படித்தவர் கூடும் மன்றங்களிலே அவரது ஆற்றல், அறிவு, அஞ்சாத தொண்டு இவை பற்றி உரையாடும் சொற்கள் நமது செவிகளிலே விழுந்தே தீரும். இந்த அளவுக்கு தமிழரின் சிந்தனையில், சொல்லில், செயலில் கலந்து நிற்கும் இந்த விசித்திர புருஷர் யார்? இது சிறிது சங்கடமான கேள்வி. அறிஞர் அண்ணாதுரை ஆற்றல் மிக்க அறிஞர்; இணை யற்ற எழுத்தாளர்; ஈடும் எடுப்புமற்ற பேச்சாளர்; உயிர் நடிகர்: உரிமைக்குப் போரிடும் உத்தமர்; ஒப்பி லாத நாடகாசிரியர் என்ற ஏதாவதொன்று அல்லது அத்தனையும், அல்லது அதற்கு மேலும் தொடர்ந்து பதிலாக வரும். பதில் முற்றுப் புள்ளியுடன் முடிய முடியாது. விடை மேலும் குழப்பத்தை உண்டு பண்ண உதவுமே தவிர தெளிவு காணும் மார்க்கமாக அமையாது. ஆனால் அண்ணா என்ற சொல், திரா விடர் மனைகளிலே - சின்னஞ் சிறு குழந்தைகளின் அழகிய வாய்களிலிருந்து, வயோதிகர் வார்த்தை யாடல் வரை, அன்பு குழைத்து, சொந்தம் பாராட்டி, பெருமிதம் தோன்ற செப்பும் சொல்லாகி விட்டது.

இந்த நிலையை எவரும் மறுக்க முடியாது. மறைக்கவோ, மறக்கடிக்கவோ முடியவில்லை. முயன்றாலும் நிச்சயமாய் முடியாது. காரணம் திராவிடரின் வாழ்வு தாழ்வுடன், சுக துக்கங்களுடன், மேடு பள்ளங்களுடன், பெருமை, சிறுமைகளுடன் தனது வாழ்வையும் பின்னிக்கொண்டு விட்டார். தமிழரின் உணர்ச்சிகளின், உரிமைப் போராட்டங்களின், உயர்ந்த லட்சியங்களின் ஏகப்பிரதிநிதி இந்த மாவீரர்! இதுதான் எனது சொந்த அபிப்பிராயம். தமிழர் சமுதாயம் அவரை மறந்தால் தன்னைத்தானே மறந்துவிட்டது என்று பொருள். தனது உணர்ச்சிகளை, உண்மை இலட்சியங்களை, மங்க வைத்து, மடியச் செய்து சவக் குழியிலே புதைத்து விட்டது என்று பொருள்.

அண்ணாவின் எழுத்தோவியங்கள் வெறும் ஏட்டுப் படிப்பின் விளைவல்ல. எண்ணங்களுடன் சிந்தனையையும் கலந்து உறவாட விட்டதன் விளைவு. அவர் பேச்சாகட்டும், எழுத்தாகட்டும், நாடக மாகட்டும், நிழற் படமாகட்டும், அத்தனையும் அனுபவ முத்திரை பெற்றது. வெறும் பட்டப் படிப்பு மட்டு மல்ல, பகுத்தறியும் பண்பும், பயிற்சியும் பெற்ற இதயத்தின் எதிரொலி. ஏழையின் கண்ணீர் பாட்டாளியின் வியர்வை, விம்மி விம்மி அழுகின்ற விதவையின் பெருமூச்சு, வன்னெஞ்சப் படாடோபக்காரனின் கபடம், காதலியின் புன்னகை-இவை போன்ற இன்னும் ஓராயிரம் சம்பவங்கள் அவர் உள்ளத்துடன் இரகசியம் பேசியிருக்க வேண்டும். ஆகவேதான் அவரது எழுத்துக்களிலே உண்மை இருக்கிறது. உயிர் இருக்கிறது. உரிமைக் கனல் இருக்கிறது. ஊருக்கு வேண்டிய நன்மை இருக்கிறது. அவர் தீட்டியுள்ள எழுத்தோ

வியங்கள் இலக்கியத் தன்மை பெற்றவை. காலமென்னும் பருவ மாறுதலால் உலர்ந்து விடும் சருகுகளல்ல. எதுகை மோனைக்காக எண்ணத்தைச் சிறைப்படுத்தாத அவரது எழுதுகோலில் உருண்டோடி வரும் வார்த்தைகள் மின்சார சக்தியைப் பெற்றிருக்கின்றன. இந்த மறுமலர்ச்சி குறித்து, தமிழ் இலக்கிய வசன நடை வரலாற்றில் சேர்க்கப்படப் போகும் பொன்னேட்டை எதிர்கால தமிழ் இலக்கிய மாணவர்கள் நிச்சயம் படித்தே தீருவர்.

பத்து ஆண்டுகளுக்கு முன் இந்த நாட்டுப் பல்கலைக் கழக மாணவர்கள் சுந்தரமான சொகுசான வாழ்விலே காலத்தையும் கருத்தையும் செலுத்தினர். சொந்த நாடு, மொழி, கலாச்சாரம் ஆகியவை பற்றி கனவிலும் கருதியதில்லை. அப்படிப் பட்டவர்களின் வாழ்விலே அறிஞர் அண்ணாவின் போதனை அற்புத மாறுதலை உண்டுபண்ணியுள்ளது. விடுதலை வீரர்களாக, பகுத்தறிவுப் பட்டாளத்தின் தளகர்த்தர்களாக, புதுவாழ்வின் சிற்பிகளாக, முன்னேற்றத்தின் தூதுவர்களாக அணிவகுத்து நிற்கின்றனர் கல்லூரி மாணவ மாணவிகள்! இந்த வியத்தகு செயலைச் செய்தவர் அண்ணா என்பதை குன்றின் மீதிருந்தும் கூறுவேன்.

கொண்ட கொள்கைக்காக குவலயமே எதிர்ப்பினும் குலையாத உறுதி, அறிவுத் தாகம், தொண்டு உள்ளம், துடிக்கும் இதயம்—இவை பொது வாழ்வுக்காரர் அவரிடம் பெற வேண்டிய படிப்பினைகள். அண்ணாவின் மூலம் மேதினியிலே நாம் புதிய நிலையைப் பெறப் போகிறோம். அதிலே எனக்கு ஐயமில்லை.

வாழ்க அண்ணா! வளர்க அவர் கீர்த்தி!

கே. ஏ. மதியழகன்,

தலைவர், மத்திய திராவிட மாணவர் கழகம்.

"இதோ செல்கிருனே, இவனை உலகம் நல்லவனென்று புகழ்கிறது. அழகிய ரோஜாவினிடத்தில் முள்ளிருப்பது போல இவனிடமும் கெட்ட எண்ணமும், வஞ்சகமும் சிறிதாவது இல்லாமலிருக்காது?"

"அதோ கம்பிகளுக்குப் பின் உட்கார்ந்திருக்கிருனே அவனைக் கள்வன், கசடன், மோசக்காரன் என்ற பெயர்களிட்டு, சமுதாயம் அழைக்கிறது. அழுகிய சேருனுலும் அதில் அழகிய செந்தாமரை பூப்பதுபோல, இருண்ட உள்ளம் அவனது, ஆனுலும் அதில் நல்லெண்ணங்கள் தோன்ருமலிருப்பதில்லை!"

இந்தக் கருத்தை அடிக்கடி தமிழகத்தில் தீட்டி விளக்கியவர், அறிஞர் அண்ணுத்துரை அவர்களே! மற்றைய கதை எழுத்தாளர்களோ, நல்லவனைப் பத்தரை மாற்றுத் தங்கமாகவும், கெட்டவனை முழுக்க முழுக்க கெட்டவனுகவும் தீட்டிக் காட்டுவர். இம்முறைக்கு மாறுபட்டவர் நம் அண்ணு!

பழக்க வழக்கங்கள், சுற்றுச் சார்புகள், வசதிகள் இவைகளே மனிதனின் வாழ்க்கையை அமைக்கின்றன என்ற வாழ்க்கையின் உண்மையைச் சிறு கதைகளின் மூலம் அண்ணு தெளிவு படுத்தியிருக்கிருர்.

அண்ணு தீட்டும் கதைகளில் வரும் பாத்திரங்களின் பண்பு விளக்கம் அலாதியானது. அவருடைய அபூர்வமான அறிவின் திறமை, பாத்திரங்களின் இதயப்படப் பிடிப்பையும், மனப் போராட்டத்தையும் விவரிக்குமிடங்களில் ஒளி வீசுகிறது. வாழ்க்கையிலுள்ள சிக்கல்களையும், அவற்றைப் போக்குவதற்கும் மாற்றியமைப்பதற்கும் வேண்டிய முறைகளையும், சிறு கதைகளின் மூலம் தீட்டிக் காட்டுவதில் அண்ணுவிற்கு நிகர் யாரும் கிடையாது.

வாழ்க்கையில் உதாசீனம் செய்து, ஒதுக்கித் தள்ளப்பட்ட உருவங்களை நம் முன் கொண்டு வந்து நிற்க வைப்பார். வாழ்க்கையில் அவர்கள் அந்தக் கதிக்கு ஆளான காரணத்தை அவர்களின் வாயினாலேயே கூறச் செய்வார். விபசாரி, விதவை, ஏழை, தொழிலாளி, இவர்களின் பக்கம் நின்று வாதாடுவார். அவர்களின் கட்சியை விளக்கிக் கூறி, நல்ல தீர்ப்பு தாருங்களென்று நம்மைக் கேட்பார்.

அவர் தீட்டிய 'சொல்லாதது', 'வள்ளித் திருமணம்', 'காமக் குரங்கு', 'வாலிபவிருந்து', 'மாடி வீடு', 'குமஸ்தாவின் பெண்', 'கலிங்க ராணி', 'பார்வதி பி.ஏ.' 'ரங்கூன் ராதா' முதலியன நாட்டின் உயிரோவியங்கள்; நிரந்தரமான கலைப் பொக்கிஷங்கள்.

அவரது உயிரோவியங்கள் நம்மிடம் பேசுகின்றன; உள்ளத்தைத் தடவி உவகையையும் புரட்சித்துடிப்பையும் உண்டாக்குகின்றன; நம்மையும் எழுதும்படித் தூண்டுகின்றன!

குயில் குரலின் இனிமையும், மயில் ஆட்டத்தின் அழகும், வீணையின் நரம்புகளெழுப்பும் இசையும், தேனின் சுவையும், தென்றலின் குளிர்மையும், மலரின் மணமும், இளங் குமரியின் கண்களிலுள்ள கவர்ச்சியும் அண்ணாவின் உயிரோவியங்களில் உள்ளன!

இவ்வளவும் தந்த, தருகின்ற அறிஞர் அண்ணாவிற்கு நாம் கைம்மாறு செய்ய முடியாவிட்டாலும்—மறந்தாலும்—அவற்றை நாம் சுவைக்கலாம்! சுவைக்கச் சுவைக்கத் தந்து கொண்டேயிருப்பார்! அவர் வற்றாத ஊற்று! எடுக்க யெடுக்கக் குறையாத களஞ்சியம்!

வாழ்க அண்ணா! பெறுக அனைவரும் அவர் உள்ளம்!

கே. ஜி. இராதாமணாளன்

உதவி ஆசிரியர் 'எங்கள் நாடு' சென்னை

பெரியாரின் பிரதிபிம்பம்

திராவிட கழகத்தினர் மட்டுமல்லாமல், காங்கிரஸ் அன்பர்கள் முதல் கம்யூனிஸ்டு தோழர்கள் வரையும், மற்றும் அரசியல் அறிஞர்கள், மற்றும் கலைவாணர்கள், மாணவர்கள், தொழிலாளர் தோழர்கள், இன்னுங் கூற வேண்டுமானால் வைதீக அன்பர்கள் ஆகியவர்களால் வாயார மனமார அன்பு ததும்பிய தன்மையுடன் அண்ணா என்று அழைக்கப்படும் வாய்ப்பினைப் பெற்றவர் நமது தளபதி.

இவ்வித வாய்ப்பை எத்தன்மையில் பெற்றார்? வைதீகர்களின் பழைய பசலிக் கொள்கைக்கு விட்டுக் கொடுத்தா? இல்லை.

தொழிலாளர் சங்கங்களிலே பதவி வகிக்கவோ அன்றி அவர்கள் பேரால் சட்டசபை உறுப்பினர்வேலை பெறவோ சமயோசிதம் போல் நடந்தா? கிடையாது.

இன்றைய காங்கிரசின் முதலாளித்துவ ஆட்சிக்கு முகஸ்துதி பாடியா? ஒருக்காலுமில்லை.

கலைவாணர்களின் பொற்குவியலுக்கு ஆசைப் பட்டா? எவரும் துணிந்து கூறமுடியாது.

இவ்வாறிருந்தும் கருத்து மாறுபாடுடைய தோழர் களும், கட்சியினரும் அன்புசார்ந்த தன்மையுடன் அண்ணா என்று அழைப்பதற்குக் காரணந்தான் என்ன?

அரசியல் அல்லது மற்ற துறையில் வேறுபாடுடை யோர் என்பதற்காக மனிதத் தன்மையை விடுத்து காய்தல் போன்ற சினமின்மையும், பணம் படைத்த வர்களைவிட பாடுபட்டுழைக்கும் பாட்டாளிகளே

உயர்ந்தவர்கள் என்று மனத்தால் கருதுவது மட்டுமின்றி நடைமுறையிலும் மெய்ப்பித்து வரும் பெருங் குணமும், கொள்கையில் ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்காத உறுதியும், ஆக இவைகளனைத்தும் ஒருங்கு சேர்ந்த ஒப்புயர்வற்ற தன்மையே நமது தளபதியிடம் நாட்டினர் அனைவரும் தனிப்பட்ட அன்பு மட்டுமல்ல, மரியாதையும் செலுத்துகிறார்கள்.

இவ்வருங் குணங்கள் நமது அண்ணாவுக்கு எவ்விதம் உண்டாயிற்று? உண்டானதுமட்டுமின்றி நிலை பெறவும் செய்தது? பட்டம் பெற்று கல்லூரியை விட்டதும், ஈரோட்டுப் பாதையைப் பின்பற்றியதோடன்றி சொல்லிலும், செயலிலும் அப்பாதையின் பாடத்தையே பின்பற்றி வந்ததேயாகும்.

மேலும், பேச்சளவில் இன்றி தனக்கு ஏற்பட்ட சோதனைக் காலத்திலும் பெரியாருடன் சிறை சென்றும் சேவை செய்துள்ளார்.

பழமையில் மிகவும் அழுந்திப் பாடுபட்டுழைத்து வரும் பாட்டாளிகளிடையே பகுத்தறிவையூட்டி பெரியார் பெரும்படையில் முதல்வர்களாக அவர்கள் இருக்கும் நிலையை உண்டாக்கியவர் அண்ணா அவர்களே என்பதை எவரும் மறுக்க முடியாது.

நமது அண்ணா அவர்கள் உண்மையிலேயே உழைத்துங்கூட சந்தேகங்களுக்கு ஆளாகியிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

தாயையும் - சேயையும் பிரிக்க முடியுமா? வேண்டுமானால் வஞ்சகத்தால், சூழ்ச்சியால் முடியலாம். அதுவும் நீண்டநாள் நிலைத்திருக்க முடியாது.

நமது தலைவரும் தளபதியும் பிரிந்து நிற்கிறார்கள் என்று நமது அரசியல் கருத்து மாறுபாடுடையோரில் சிலர் கருதி, நம் இன உணர்ச்சியை சிதைத்து விடலாம் என்று எண்ணுகின்றனர். இது சிறு மதியேயாகும்.

அண்ணா அவர்கள், பெரியாருடன் - தந்தையுடன் 15 ஆண்டுகளாக மகனைவிடப் பல வகையாலும் பாசமுடன் பழகிய உறவை, மறந்து, விலகி, மன நிம்மதியுடன் வாழ முடியுமா? அத்தன்மையாளர் அல்லவே அண்ணா!

என். வி. நடராஜன்
சென்னை

உள்ளங் கவர் கள்வன்

உள்ளங்கவர் கள்வன் ஆம்! என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன்! அனைவர் உள்ளத்தையுங் கவர்ந்து வரும் கள்வன்! குற்றமற்ற கள்வன்!

கள்வன் கொள்ளை கொள்பவன்தான்; ஆனால் செய்யும் களவுக்காகக் குற்றக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்த முடிவதில்லை. காரணம் குற்றம் அவன் மேலிருப்பதில்லை. பறி கொடுப்பது உண்மைதான்; ஆனால் ஏமாந்து எவருங் கொடுப்பதில்லை. ஆகவே பறி கொடுத்தோர் வழக்குத் தொடுக்க இயலுவதில்லை.

அத்தகைய கள்வனொருவனை நான் என் வாழ் நாளில் கண்டேன்—காதல் கொண்டேன்—கட்டித் தழுவினேன்—அண்ணாவென்று கண்டேன்—தம்பியானேன்!

குள்ள உருவம்; குறும்புப் பார்வை; விரிந்த நெற்றி; பரந்த மார்பு; கறைபடிந்த பற்கள்; கவலையில்லாத தோற்றம்; நறுக்கப்பட்ட மீசை; நகை தவழும் முகம்; சீவாத தலை; சிறிதளவு வெளிவந்த தொப்பை; செருப்பில்லாத கால்; சரிப் பொருத்தமில்லாத உடைகள்; இடுப்பில் பொடி மட்டை; கையில் வெற்றிலைப் பாக்குப் பொட்டலம் இந்த தோற்றத்தோடு அதோ காட்சியளித்து நிற்கிறாரே அவர்தான் அண்ணாத்துரை! அறிஞர் அண்ணாத்துரை!! அண்ணா!!!

அறிவாளி-படிப்பாளி - பேச்சாளர் - எழுத்தாளர் - பத்திரிகாசிரியர்-நடிகர்-நாடகாசிரியர்-தலைவர்- தளபதி என்ற முறையில் அண்ணாத்துரையை நாட்டு மக்கள்

அறிவார்கள், ஆனால் 'அண்ணா'வைப் பலரும் அறிய மாட்டார்கள்; அறிந்ததில்லை; அறியமுடிவதில்லை.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்பமொழி வதாம் சொல்" என்று வள்ளுவர் வகுத்துக் கூறிய இலக்கணத்திற்கு இலக்கியம் உண்டாக்கியவர் அறிஞர் அண்ணாத்துரைதான்.

சிறந்த பேச்சாளர் பட்டியலின் முன்னணியில், டெமாஸ்தெனிஸைக் கொண்டுவந்து நிறுத்துகிறது கிரேக்க நாடு; எட்மண்ட் பர்க்கைக் கொண்டு வந்து வைக்கிறது இங்கிலாந்து; ராபர்ட் கிரீன் இங்கர்சாலைக் கொண்டு வந்து நிலை நிறுத்துகிறது அமெரிக்கா; சிறந்த பேச்சாளர் வரிசையின் முதலிடத்தில் திராவிடம் நிலை நிறுத்துவதற்குரிய ஒரே ஒருவர் அறிஞர் அண்ணாதான்.

ஏனைய எழுத்தாளரின் எழுத்தில் தமிழைக் காண்கிறோம்; அறிஞர் அண்ணாவின் எழுத்தில் தமிழரையே காண்கிறோம்.

அவருடைய உரையாடலிலும், சொற்பொழிவிலும், எழுத்திலும் காணப்படும் ஒரு பெரும் பண்பு 'தெளிவு'. அவரிடத்தில் அவசரச் சிந்தனை கிடையாது. எந்த உருவத்தில் வந்தாலும் ஆழ்ந்த கருத்துகளே அதில் காணப்படும். அவருடைய கண் காது களில் பட்டுத் தெறிக்கும் எந்த நிகழ்ச்சியும் பசுமரத் தடித்த ஆணிபோல் அவரது உள்ளத்தில் பதிந்துவிடும். பதியும் அவை ஊற்றுக்கண் போல உன்னுந்தோறும் உவட்டெடுக்கும். முன்பின் கருத்துக்களை ஒத்திட்டுப் பார்க்கும் ஆற்றலும், அவற்றைத் தெளிவு படுத்திக் காட்டும் முறையும் அண்ணாவுக்கு அமைந்திருப்பது

போல் வேறு எந்த எழுத்தாளருக்கும், பேச்சாளருக்கும் அமைந்ததில்லை. அவருடைய சொற்பொழிவு சல சல வென்று ஓடும் சிற்றருவியின் பாங்கு போலவும், சொற்கள் நாணயச் சாலையில் அடிக்கப்பட்டு ஒன்றன் பின் ஒன்ருய் விழும் நாணயங்கள் போலவும் ஒன்ருேடொன்று மோதுதலின்றி வெளிவரும் தன்மையனவாகவும் காணப்படும்.

அண்ணுவின் உரையாடலே தனிச் சிறப்பு வாய்ந்தது. எவ்வளவு நேரமாளுலும், ஏன், எவ்வளவு நாட்களாஞலும் தெவிட்டாத தீங்கனி போன்றது. உரையாடலில் கேலி, கிண்டல், நகைச்சுவை ஆகிய ஆயுதங்களை அவர் வீசுமளவுக்கு அழகாக வீசுபவர் வேறு யாரையும் நான் கண்டதில்லை.

அவர் எழுதுவது பெரும்பாலும் இரவு நேரங்களில்தான். எழுத உட்கார்ந்து விட்டால் காலை ஐந்து அல்லது ஆறு மணி வரையிலும் எழுதுவார். ஒரு அடித்தல், திருத்தலில்லாமல் எழுதி கீழே விடும் காகிதங்கள், ஒன்றன்பின் ஒன்ருக வந்து குவிந்துகொண்டே இருக்கும். சளைக்காமல் ஆயிரக்கணக்கான பக்கங்களும் எழுதித் தள்ளும் அருந்திறனுடையவர்.

‘எதையும் தாங்க இந்த இதயம் உண்டு’ என்ற குறிக்கோளோடு எதையும் வரவேற்று நிற்கும் பண்புடையவர். புகழ்ச்சிச் சொற்கள் அவர்மேல் வீசப்படும் போதும் அதிகமாக மகிழ்ச்சியடைந்து விடுவது கிடையாது; வசைச் சொற்கள் வீசப்படும் போதும் ஆத்திரமடைவது கிடையாது. இரண்டிற்கும் பதில் ஒரு புன்னகைதான். வஞ்சம், சூழ்ச்சி, பொருமை, பேராசை, தன்னலம், தற்பெருமை, யதேச்சாதிகாரம்

முதலிய கீழ்த்தர பண்புகள் அவரிடம் எப்பொழுதும் இருந்ததில்லை.

அரசியல் கட்சியாகிய திராவிடக் கழகத்தில் தன் பங்கைப்பற்றி அவரே தெரிவிக்கிறார், கேளுங்கள்:—

"கழகம் எடுத்துக்கொண்ட, எந்த முக்கியமான திட்டத்துக்கும், வேலைமுறைக்கும், கட்டுப்படாமலிருந் தவனல்ல; கழகம் நெருக்கடியான கட்டத்தில் இருந்த போதெல்லாம், விட்டுவிட்டு ஓடியவனல்ல; பட்டம் பதவிகளை வைத்துக் கொண்டு, விட்டு விட முடியாது என்று கூறினவனல்ல; தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்று கட்சி தீர்மானித்த பிறகு, மீறித் தேர்தலுக்கு நின்றவனல்ல; சிறைபுக வேண்டிய திட்டம் வந்த போது, ஒளிந்து கொண்டவனுமல்ல; அடிக்கடி, கட்சி பலவற்றைத் தேடிக் கொண்டவனுமல்ல; கட்சிக்குள் ளாகவே, சேலம் மாகாண மாநாட்டின்போது, செல்வ வான்களின் மயக்க மொழியில் வீழ்ந்தவனல்ல—இது வரை வழுக்கி விழுந்ததில்லை—திட்டங்களைக் கண்டித் ததோ, மாற்றவேண்டுமென்று கூறினதோ, கட்டுக் கடங்க மறுத்ததோ இல்லை—ஆனால் இந்த ஆகஸ்ட் 15-ந் தேதி பற்றிய பிரச்னை, உண்மையாகவே, என் போல் எண்ணற்றவர்கட்கு மன வேதனை தரக்கூடிய விதத்திலே, தவறான முறையிலே, திருப்பப்பட்டிருக் கிறது......இது கட்சிக் கட்டுப்பாட்டையும், தலைவரின் அறிக்கையையும் மீறுவதாகும் என்று கருதப்பட்டு, என்மீது நடவடிக்கை எடுக்க, முன் வருவதானாலும், என் வாழ்நாளில் "பிரிட்டிஷ் ஆட்சி கூடாது" என்ற கொள்கையைக் கொண்டவனே நான், என்பதை மக் களுக்குக் கூற எனக்கிருக்கும் ஒரே நாளான, கடைசி

நாளான, ஆகஸ்ட் 15-ந் தேதியின் முக்கியத்துவத்துக்காக வேண்டி கட்சியின் கடுமையான நடவடிக்கைக்கும் சம்மதிக்க வேண்டியவனுகிறேன், தலைவரும், கட்சியும் என் போக்கு தவறு என்று கருதி, என்னைக் கட்சியை விட்டு நீக்கினுலும், நான், சமூக சீர்திருத்தம், பொருளாதார சமத்துவம், திராவிடத் தனி அரசு எனும் அடிப்படைக் கொள்கைகளைக் கட்சிக்கு வெளியே இருந்தாகிலும் செய்து வருவேன்.''

அண்ணுவின் போக்கு கண்டு வெறுப்புற்று சிங்கமெனச்சீறுவோறும், புலியெனப்பாய்வோரும் அண்ணுவின் முன் வந்ததும் பூனையென அடங்கிப் போவதைப் பலமுறை பார்த்திருக்கிறேன்.

எனினும் அவரே கூறுவதுபோல் அவர் பெரியாரின் பரம்பரை. பெரியாரின் உள்ளத்தில் இருப்பதை எப்படிப் பிறர் அறிய முடியாதோ அவ்வாறே அண்ணுவின் உள்ளத்தில் இருப்பதையும் அறிய முடிவதில்லை. பிறர் உள்ளத்தைக் கவர்வதுபோலவே தன் உள்ளத்தையும் அண்ணு கவர்ந்துதான் வாழ்கிருர், அவர் கள்வன்தான்! ஆனுல் குற்றமற்ற கள்வன்!

இரா. நெடுஞ்செழியன்

ஆசிரியர், 'மன்றம்' சென்னை